பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 196 வைகாசி 30ஆம் நாள் வியாழக்கிழமை 13 ஜூன் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

Now in JAFFNA
Dual MBA in
Marketing | Administration | HR
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

# புதுடில்லியின் ஆதரவுடன் தீர்வை வென்றெடுப்போம்

## சம்பந்தன் நம்பிக்கை



கொழும்பு, ஜூன் 13

'இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் அழைப்புக்கிணங்க நாம் விரைவில் புதுடில்லி செல்லவுள்ளோம். அங்கு அரசியல் தீர்வு தொடர்பில் விரிவாகப் பேசுவோம். இந்திய அரசின் ஆதரவுடன் இலங்கையில் நிரந்தர அரசியல் தீர்வை நாம் வென்றெடுப்போம். பன்னாட்டுச் சமூகமும் இதற்கு ஒத்துழைப்பு வழ்ங்கும். இந்த நம்பிக்கை எமக்குண்டு.' இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

19

# சர்வதிகாரத்தைப் பயன்படுத்தி தெரிவுக்குழுவை அடக்கமுடியாது

## மைத்திரிக்கு ரணில் சாட்டையடி



கொழும்பு. ஜூன் 13

'இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் தாக்குதல்கள் தொடர்பில் ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை சர்வதிகாரத்தைப் பயன்படுத்தி எவரும் அடக்கவும் முடியாது. இதைக் கலைக்கவும் முடியாது.' இவ்வாறு நேற்று சிங்கப்பூர் செல்வதற்கு முன்னர் அதிரடிக் கருத்தைத் தெரிவித்துள்ளார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.

இரண்டு நாள்கள் தனிப்பட்ட பயணம் மேற்கொண்டு தலைமை அமைச்சர் ரணில் நேற்று சிங்கப்பூர் சென்றுள்ளார். சிங்கப்பூர் செல்வதற்கு முன்னர் நேற்றுப் பகல் அலரி மாளிகையில் வெளிநாட்டுச் செய்தி நிறுவன

19

# மைத்திரியுடன் மோத தயாராகிறார் ரணில்

## அமைச்சரவையைக் கூட்ட அதிரடி நடவடிக்கைகள்!

கொழும்பு, ஜூன் 13

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்களை விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை கைவிடும் வரைக்கும் அமைச்சரவையைக் கூட்ட அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மறுத்துவரும் நிலையில் அதற்கு எதிராக அதிரடி நடவடிக்கைகளை எடுக்கத் தயாராகி வருகின்றார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க. அடுத்த வாரமும் அமைச்சரவையைக் கூட்டப்படா விட்டால் நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி சிறப்புப் பிரேரணை யொன்றை முன்வைத்து விட்டு தனக்கிருக்கும் அதிகாரங்களுடன் தற்றுணிவாக அமைச்சரவையை தலைமை அமைச்சர் ரணில் கூட்டவுள்ளார்.

நாடாளுமன்றத்

19

# தெரிவுக்குழுவை இடைநிறுத்த மைத்திரிக்கு அதிகாரமில்லை!

## ராஜித பதிலடி



கொழும்பு, ஜூன் 13

'உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை இடைநிறுத்துவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை.' இவ்வாறு தெரிவித்தார் சுகாதார அமைச்சரும் தெரிவுக்குழுவின் உறுப்பினருமான ராஜித சேனாரத்ன.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாடாளுமன்றத்தின் தீர்மானத்துக்கமையவே

19

# அரச இயந்திரத்தை முடக்கிய மைத்திரி

## சம்பிக்க கடும் சீற்றம்



கொழும்பு, ஜூன் 13

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அமைச்சரவையைக் கூட்டாமல் நாட்டின் அரச இயந்திரத்தை முடக்கியுள்ளார். இதன்மூலம் அவர் தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளார் என்று பகிரங்கமாகக் குற்றம்சாட்டினார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'107 அமைச்சரவைப் பத்திரங்கள் ஆராயப்பட

19

# மைத்திரியை மாட்டுவதே தெரிவுக்குழுவின் இலக்கு

## இப்படிக் கூறுகின்றது மகிந்த அணி

கொழும்பு, ஜூன் 13

'உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதல்களுக்கான முழுப் பொறுப்பையும் பாதுகாப்பு அமைச்சரான அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மீது சுமத்துவதே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் நோக்கமாக இருக்கின்றது.' இவ்வாறு மகிந்த

19

# கை - மொட்டின் கோரிக்கைக்கமையவே நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமனம்!

## அதனை மாற்றவே முடியாது என்கிறார் ஹக்கீம்



கொழும்பு, ஜூன் 13

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் சிறிலங்கா பொதுஜன முன்னணி ஆகிய கட்சிகளின் கோரிக்கைக்கு அமையஉயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது. எனினும், இறுதியில் அந்த இரண்டு கட்சிகளும்தெரிவுக்குழுவைப்புறக்கணித்துள்ளன - என்று தெரிவித்தார் தெரிவுக்குழுவின் உறுப்பினரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

19

# ரணில் ஓகே என்றால் களத்தில் குதிப்பேன்!

## சஜித் அதிரடி




கொழும்பு, ஜூன் 13

'ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்னை அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுமாறு கூறினால் நான் களமிறங்கத் தயாராகவே இருக்கின்றேன்.' இவ்வாறு அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்

19

# வைகாசி மாத ராசிபலன்



(மே 15 முதல் ஜீன் 15 வரை)



### கும்பம்

சுக்கிரன், சனி, கேது மாதத் தொடக்கத்தில் குரு நன்மை செய்வார்கள். செயலில் வெற்றி, பொருளாதாரச் செழிப்பு, மகிழ்ச்சி ஆகிய அனுகூலப் பலன்களைக் காணலாம். குடும்பத்தில் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். உறவினர்களுடனான உறவு சுமுகமாகக் காணப்படும். குடும்பத்தோடு புனிதத் தலங்களுக்குச் சென்று வருவீர்கள். சிலருக்குப் பொன், பொருள் ஆகியவை சேரும். கணவன் மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும். பெண்களால் ஆதாயம் உண்டாகும். விருந்து, விசேஷங்களில் கலந்துகொள்வீர்கள். பெரியோர்களின் ஆதரவும், ஆலோசனையும் கிடைக்கும். நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

தாய்வழி உறவுகளால் எதிர்பார்த்த நன்மைகள் நடக்கும். சுபநிகழ்ச்சிகளால் வீடுகளைக்கட்டும். குலதெய்வப் பிரார்த்த னையை நிறைவேற்றும் சந்தர்ப்பம் உண்டாகும். தந்தையின் ஆலோசனை பயனுள்ளதாக இருப்ப துடன், முன்னேற்றத்துக்கும் வழிகாட்டுவதாக அமையும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டாகும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அரசாங்க அதிகாரிகளை அணுகும்போது மிகவும் பொறுமை அவசியம். தாய்வழி உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். பணியாளர்கள் உற்சாகமாக பணிகளில் ஈடுபட்டு மேலதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பதவிஉயர்வு கிடைக்கும்.

தொழில், வியாபாரத்தில் பொருளாதார வளம் அதிகரிக்கும். பகைவர் இடையூறும், அரசு வகையில் அனுகூலமற்ற போக்கும் மறையும். திடீர் பணவரவு இருக்கும். போட்டிகளைச் சமாளித்து வெற்றி கொள்ளும் ஆற்றல் உண்டாகும்.

கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவார்கள். புகழ், பாராட்டு கிடைக்கும். சிலருக்கு அரசாங்கத்தின் சார்பில் விருதுகள் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

மாணவர்கள் சிரத்தை எடுத்துப் படிப்பது அவசியம். ஆசிரியர்களின் அறிவுரையைக் கேட்டு நடக்கவும். போட்டிகளில் வெற்றி கிடைக்கும்.

பெண்களுக்கு குடும்பத்தில் ஆனந்தம் அதிகரிக்கும். தோழிகள் ஆதரவுடன் செயல்படுவர். அக்கம்பக்கத்தினர் உதவிகரமாக இருப்பர். கணவன் மற்றும் குடும்பத்தாரிடம் நன்மதிப்பைப் பெறலாம். வேலைக்குச் செல்லும் பெண்கள் சிறப்பான பலன் பெறுவர். சுயதொழில் செய்யும் பெண்களுக்கு லாபம் அதிகரிக்கும்.



### மீனம்:

சூரியன், சுக்கிரன், குரு ஆகியோர் அனுகூலமாக உள்ளனர். புதனும் ஓரளவு நன்மை செய்வார். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்களிடையே ஏற்பட்டிருந்த அவப்பெயர் நீங்கும். செல்வாக்கு அதிகரிக்கும். சுபநிகழ்ச்சிகளால் மனதில் உற்சாகம் ஏற்படும். பகைவர்களால் இருந்து வந்த இடையூறுகள் மறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பழுதான பழைய வாகனத்தை மாற்றிவிட்டு, புதிய வாகனம் வாங்குவீர்கள். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கக்கூடும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கூடுமானவரை தொலைதூரப் பயணங்களைத் தவிர்க்கவும். உங்களைத் தவறாகப் புரிந்துகொண்ட உறவினர்கள், தங்கள் தவற்றை உணர்ந்து, வலிய வந்து மன்னிப்புக் கேட்பார்கள். நண்பர்கள் உங்கள் முயற்சி களுக்குப் பக்கபலமாக இருப்பார்கள். தந்தைவழியில் உங்களுக்குச் சேரவேண்டிய சொத்துகள் கிடைப்பதற்கான வாய்ப்பு கனிந்து வரும். சொந்த ஊரிலுள்ள குலதெய்வக் கோயில் திருப்பணிகளில் கலந்துகொண்டு உதவி செய்வீர்கள். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் வருகை மகிழ்ச்சியுடன் செலவுகளையும் ஏற்படுத்துவதாக இருக்கும். தந்தையுடன் ஏற்பட்டிருந்த கருத்துவேறு பாடுகள் நீங்கும். அவரிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். ஆனால், இதுவரை இருந்து வந்த அவப்பெயர் நீங்கி, செல்வாக்கு அதிகரிக்கும். வீண் மனக்கவலை மறையும். அதிகாரிகளை அனுசரித்துச் செல்லவும்.

தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்குப் பொருளாதார வளம் கூடும். லாபம் சிறப்பாக இருக்கும். ஆனால், போட்டியாளர்களால் இடையூறு வரலாம். கணக்குகளைச் சரியாக வைத்துக்கொள்ளவும்.

கலைஞர்களுக்குப் புகழ், பாராட்டு, புதிய ஒப்பந்தம் கிடைக்கும். சக கலைஞர்கள் மூலம் ஆதாயம் பெறலாம்.

மாணவர்கள் அலட்சியமாக இருக்கக் கூடாது சிரத்தை எடுத்துப் படித்தால்தான் பலன் கிடைக்கும். ஆசிரியரின் ஆலோசனை கிடைக்கும். போட்டிகளில் வெற்றி காணலாம்.

பெண்கள் குடும்பத்தோடு புனிதத் தலங்களுக்கு சென்று வருவர். வாழ்க்கையில் ஆனந்தம் அதிகரிக்கும். வேலை பார்ப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். சுயதொழில் செய்யும் பெண்களுக்கு நல்ல இலாபம் இருக்கும்.

(தொடரும்)

## 27 நட்சத்திரங்களுக்குரிய கணங்கள்

இருபத்தி ஏழு நட்சத்திர கூட்டத்தை தேவ ,மனுச ,அசுர கணம் என்று பிரித்து உள்ளார்கள். அந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் குணாதிசயம் அந்தந்த கணம் வைத்து தெரிந்து கொள்ளலாம். உதாரணமாக தேவ கணம் உள்ளவர்கள் மிருதுவான மனம் உள்ளவர்கள் ,அசுர கணம் உள்ளவர்கள் கொஞ்சம் கடுமையான மனம் உள்ளவர்கள் .

| தேவ கணம் | மனுஷ கணம் | அசுர கணம் |
|---|---|---|
| அஸ்வினி | ரோகினி | மகம் |
| மிருகசிர்ஷம் | பூரம் | கார்த்திகை |
| ஹஸ்தம் | பூராடம் | ஆயில்யம் |
| அனுஷம் | பூரட்டாதி | சதயம் |
| பூசம் | திருவாதிரை | சித்திரை |
| புனர்பூசம் | பரணி | அவிட்டம் |
| திருவோணம் | உத்திரம் | மூலம் |
| ஸ்வாதி | உத்திரட்டாதி | கேட்டை |
| ரேவதி | உத்திராடம் | விசாகம் |



## தூசியும் - ஒட்டடையும் வீட்டுக்கு ஆகாதா?



கட்டடக் கலை சாஸ்திரம் என்கிற வாஸ்து கலையில் எண்ணற்ற விடயங்கள் அடங்கி இருக்கிறது. அதில் ஒவ்வொன்றும் பயன்தரக்கூடியது. அனுசரிப்பதற்கு எளிதானது. முக்கியமாக, தடையற்ற பண வரவு பெற, கட்டட சாஸ்திரத்தில் நிறைய விதிமுறைகள் உண்டு. அதில் முக்கியமானது, வீட்டில் தூசியும், ஒட்டடையும் அதிக அளவில் சேரவிடக்கூடாது. இன்னும் சொல்லப்போனால், முற்றிலுமாக தூசியும், ஒட்டடையும் வீட்டில் இல்லாமல் இருந்தால் அந்த இல்லத்தில் திருமகள் வாசம் செய்கிறாள்.

என் அனுபவத்தில் நான் பார்த்த பல வீடுகளில், தூசியும், ஒட்டடையும் இல்லாத வீடுகளில் வசிப்பவர்கள் பணத்திற்கு பஞ்சம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள்.

அதுபோல, நம்மவர்களில் பணக்காரர்களின் வீடுகளிலும் தூசியும், ஒட்டடையும் இருப்பதில்லை. அதிக அளவில் தூசியும் ஒட்டடையும் சேர்ந்த வீடுகளில் வசிப்பவர்கள், திறமை இருந்தும் அதிர்ஷ்டம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள்.

முன்னேற்றம் குறைந்து காணப்படுகிறது. சிலரின் வீடுகளில் ஒட்டடைதான் மேற்கூரையை தாங்கிப் பிடித்துக்கொண்டிருக்கிறதோ என எண்ணும்படியாக ஒட்டடை அதிகளவில் இருக்கிறது.

அப்படி இருப்பது நல்லதல்ல. அதனால், நல்ல வாஸ்து தன்மை உள்ள வீட்டுக்கு முக்கியமானது, வீட்டை தூய்மையாக வைத்திருப்பதும், தூசியும், ஒட்டடையும் சேர விடாமல் பார்த்துக்கொள்வதும் ஆகும்.



# இயக்குநராக மாறும் அனுபமா

'பிரேமம்' படம் மூலம் அறிமுகமானவர் அனுபமா பரமேஸ்வரன். தமிழில் தனுசுடன் கொடி படத்தில் நடித்தார். அதன் பின்னர் தமிழ், மலையாளத்தில் வாய்ப்பு இல்லாததால் தெலுங்கு படங்களில் நடித்துக்கொண்டிருக்கிறார். அனுபமாவுக்குத் திரைப்பட இயக்கத்திலும் அதிக ஆர்வம் இருக்கிறது. படம் இயக்கியே தீருவேன் என்று துடிப்பாக இருந்த அனுபமா, இப்போது நடிப்புக் குச் சிறிது காலம் இடைவேளை விட்டிருக்கிறார்.
துல்கர் சல்மான் தயாரிக்கும் ஒரு மலையாளப் படத்தில் உதவி இயக்குநராகப் பணிபுரிந்து வருகிறார். விரைவில் இயக்குனராக மாற இருக்கிறார்.

"நீ நான்
குடை அப்புறம்
மழை"

குடையாக நீ இருந்தால்
குடைக்குள் மழையாக
நான் வேண்டும்..!

அன்பெனும் குடையை
நீட்டுகிறாய்...!

மழையில் நனையும்
உனக்கு குடையாக
நான் வரவா?





## காலம் எவ்ளோ வேகமா சுழலுது பாத்திங்களா??

- நல்லா படிச்சிருக்கலாம்னு நினைக்கும் போது வயது நாற்பதை தொட்டிருக்கும்.
- வாட்ஸ் அப் ஸ்டேட்டஸின் மூலம் பக்கத்து வீட்டில் நடக்கும் அப்டேட்டுகளை எளிதில் தெரிந்து கொள்ளலாம்!
- தண்ணீர் பஞ்சம் வாசனை திரவியங்களின் விற்பனையை அதிகப்படுத்தும்...!
- எதிர்காலத்தில் கணினி எல்லாம் நிறைந்திருக்கும் காற்று மட்டும் குறைந்திருக்கும்
- வீடு மாறும்போது காணாமல் போன பொருள் மட்டும் இல்ல சில நினைவுகளும் கிடைக்கும்.....
- கல்வி கற்க புத்தகங்களை விட, 'நோட்டுக்கள்' அதிகம் தேவைப்படும் என்பது அதிகம் பயமுறுத்துகிறது
- பத்து நிமிஷ நாடகத்துக்கு இருபது நிமிட விளம்பர இடைவெளி விடுவது தான் மிகப்பெரிய வியாபார யுத்தி!
- அகத்தின் அழகு ஸ்டேட்டஸில் தெரியும்...!!!

## தலைவா!



## twitter



ச ப் பா ணி @manipmp

இந்த உலகத்துல எதை எடுத்தாலும் ஒன்னை விட ஒன்னு அசிங்கமாதான் இருக்கும். உதாரணத்துக்கு செல்ஃபி



செங்காந்தள்@kumarfaculty

கண்தானம் என்பது ஒரு 'விழி'ப்புணர்வு ...!!!



உள்ளூராட்டக்காரன்

50 ஓவர் கிரிக்கெட் இனி மெல்ல்ல சாகும்...



எனக்கொரு டவுட்டு

தன்னால் முடியாத என்ற நிலை வரும்போது 'சாபம்' விடுவதே கடைசி ஆயுதம்

சொக்க தங்கம் சொக்க தங்கம்
மைத்திரி,அவரு சொக்க வைச்சாறு
சொக்க வைச்சாறு மோடிய...



f

நெஞ்சம் என்னும் கூடு அதில் நெருப்பு வைத்ததாரு?
துன்பம் வந்த போதும் அதை துடைப்பதிங்கு யாரு?
கலங்கும்போது சேறு அது தெளியும் போது நீரு
கடவுள் போட்ட கோடு அதை திருத்தப் போவதாரு?

அந்த வானத்தப் போல மனம் படிச்ச மன்னவனே
பனித்துளியப் போல குணம் படைச்ச தென்னவனே
மஞ்சளிலே ஒரு நூலெடுத்து
விண்ணுக்கும் மண்ணுக்கும் சம்பந்தம் உண்டுன்னு
சொன்னது யாரு?... அது மன்னவன் பேரு

# இரு கொள்ளையர்கள்



ஒரு முதலாளியும்,கொள்ளைக்காரன் ஒருவனும் சந்தித்துக் கொள்கின்றனர்.
முதலாளி கொள்ளைக்காரனைப் பார்த்து, "தாங்கள் யார்?" என்று கேட்டார்.
கொள்ளைக்காரன், "நான் ஒரு கொள்ளைக்காரன், நான் பணக்காரர்களிடம் கொள்ளையடித்து வாழ்கிறேன். ஆமாம், தாங்கள் யாரென்று அறிந்து கொள்ளலாமா?" என்றான்.
அதற்கு முதலாளி, "நான் ஒரு முதலாளி. ஏழைகளைக் கொள்ளையடித்து பணக்காரனாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன்" என்றார்.
இது பெர்னாட்ஷாவின் நாடகத்தில் வரும் காட்சி இது.

எம் திறன்களைத் திறப்பதற்கான சாவி தொடர் முயற்சிதானே தவிர, வலிமையோ அறிவு கூர்மையோ அல்ல

*வின்ஸ்டன் சர்ச்சில்*

நீங்கள் பெருங்கடலில்
சிறுதுளி அல்ல,
சிறுதுளியில்
முழுக் கடல்

*ஜலால் அத்தின் முஹம்மத் ரூமி*



# யாழ். பாஷையூர்
# புனித அந்தோனியார் ஆலயப் பெருவிழா

**13.06.2019**

## பயங்கரங்கள் மத்தியிலும் எமது விசுவாசத்தைப் பாதுகாக்கும் புனித அந்தோனியார்
## குரு முதல்வரின் செய்தி

யாழ். மறைமாவட்டத்தில் மிகவும் அதிகமான பக்தர்கள் ஒன்றுகூடி திருநாள் கொண்டாடும் திருத்தலம் பாஷையூர் புனித அந்தோனியார் திருத்தலம்தான். ஏராளமான கிறிஸ்தவ மக்கள் இந்து சகோதரர்களுடன் இணைந்து ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாதம் 1ம் திகதியிலிருந்து 13ம் திகதிவரை இத்திருநாளை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். இவ்வேளையில் புனித அந்தோனியாரின் பக்தர்கள் அனைவருக்கும் எமது மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை சார்பாக திருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

புனித அந்தோனியாரை நாம் கோடி அற்புதர் என்று அழைப்பது அவர் கோடிக்கணக்கான அற்புதங்களைப் புரிவதனால் மட்டுமல்ல, அத்தோடு, ஒரு அற்புதத்தை கோடிக்கணக்கான மக்களுக்கு கோடிக்கணக்கான தடவைகள் அவர் பெற்றுக்கோடுக்கின்றார். அந்த அற்புதம் என்னவென்றால் இயேசுவை தமது வாழ்வில் தொலைத்துவிட்டவர்கள் மீண்டும் அவரைக் கண்டடைவதற்குத் துணைபுரிவதுதான். இதனால்தான் காணாமல் போனவற்றைக் காட்டிக்கொடுக்கும் வல்லமையுள்ள புனிதர் என்று நாம் புனித அந்தோனியாரை அழைக்கின்றோம். இவ்வுலக மாயைகளுக்குள் நாம் அகப்பட்டு இயேசுவின் பிரசன்னத்தை இழந்துவிட இன்று எமக்கு அதிக சந்தர்ப்பங்கள் இருப்பதால் புனித அந்தோனியாரின் துணை இன்று எமக்கு என்றுமில்லாதவாறு தேவைப்படுகின்றது.

எமது விசுவாச வாழ்வுக்கு எத்துணை அச்சுறுத்தல்கள், பயங்கரங்கள் வந்தாலும் புனித அந்தோனியார் தனது வல்லமையுள்ள பரிந்துரையால் நாம் இறைவனிடமிருந்து பிரிந்துவிட ஒருபோதும் அனுமதிக்கமாட்டார் என்ற நம்பிக்கையில் நாம் தொடர்ந்து அவரை நாடிச்செல்வோம். இவ்வேளையில் தமது பாதுகாவலரான புனித அந்தோனியாரின் இப்பெருவிழவைக் கொண்டாடி மகிழும் பங்குத்தந்தை, பங்குமக்கள் அனைவருக்கும், புனிதரின் பக்தர்கள் அனைவருக்கும் எமது இறை ஆசீர் நிறைந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

தனது வாழ்வினூடாகவும் பணியினூடாகவும் புனித அந்தோனியார் எம் மீட்பர் இயேசுவையே மகிமைப்படுத்தினார். புனித அந்தோனியாரால் மகிமையடைந்த இயேசுவை நாமும் எமது வாழ்வாலும் பணியாலும் மகிமைப்படுத்துவோம்.

அருட்திரு. ப. யோ. ஜெபரட்ணம்
குரு முதல்வர்

## பங்குத் தந்தையின் ஆசிச் செய்தி

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த பெருவிழா நிறைவில் பக்தர்கள் அனைவருக்கும் இறையாசீரையும் உளங்கனிந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

துன்பப்படுவோரின் துயர்துடைப்பவர், அழுவோரின் ஆறுதல், இன்னலில் உழன்று ஏங்கும் அடியார்க்கு அமைதியை அருள்பவர், பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் மனங்களில் நிறைந்தவர் எம் பாதுகாவலர் புனித அந்தோனியார் இன்று நாம் அனைவரும் இறைவழியில் நடக்கவும் பாவத்தின் பன்முக பிடிகளில் இருந்து எம்மை விடுவித்து நாம் தூய வாழ்வு வாழ கோடி அற்புதரான புனித அந்தோனியார் நமக்காகப் பரிந்துரைப்பாராக.

ஏப்ரல் 21 ஆம் நாள் உயிர்ப்பு ஞாயிறில் ஆலயங்களில் வழிபட்ட நம் சகோதரங்கள் மீது மேற் கொள்ளப்பட்ட கொடிய தாக்குதல்கள், அதனால் ஏற்பட்ட நிலைமைகளின் பின்புலத்தில், இந்த ஆண்டு திருவிழாவை புற ஆடம்பரங்களின்றி, மக்களினதும், ஆலயத்தினதும் பாதுகாப்பை கருத்திற்கொண்டு, பாதுகாப்பு ஏற்பாடுகளைச்செய்து திருவிழா நிகழ்வுகளில் மாற்று ஒழுங்கு களைச் செய்துள்ளோம். இதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கிய பங்கு மக்கள் எல்லோருக்கும் எனது இதய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இம்முறை புனித அந்தோனியாரின் தேர் திருப்பவனி புறவீதிகளுக்கு செல்வதைத் தவிர்த்து ஆலய முன்றலில் இறைமக்கள் பிரசன்னத்தில் இடம்பெறுகிறது.

பல்லாண்டு காலமாக தமது கிறிஸ்தவ நம்பிக்கையில் உறுதியாக நிலைநின்று வாழும் எம் பாஷையூர் பங்குத் திரு அவையின் எல்லாக் குடும்பங்களையும் இந்நாளில் வாழ்த்துவதுடன். புனித அந்தோனியாரின் உதவியை நாடி இங்கு வரும் ஏனைய பக்தர்கள். இந்து மத சகோதரர்கள் எல்லோருக்கும் இறையாசீரையும், அருளையும் வேண்டி நிற்கின்றேன்.

அருட்திரு.ம.ஜெறோ செல்வநாயகம்
பங்குத்தந்தை.

அனுசரணை:

ஒரிஜினல் தங்க நகைகளை பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்



Since 1978
நடராசா கஜந்தன்
நியூ மைதிலி ஜீவலர்ஸ்
காலத்தை வெல்லும் கலை நுட்பத்துடன்மின்னும் பொன்நகையால் மேலும்
உங்கள் புன்னகைஒளிரும் விரையுங்கள் நியூ மைதிலிக்கு
newmaithily40@gmail.com
New Maithily Jewellers 0094212217878
38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 221 7878 Fax:021 2217877

**North Link Engineering**
Jaffna Branch:
No.360/03,Main street, Jaffna.
Tell/Fax: + 94 21 222 4099
Kilinochchi Branch:
No.470/02, A9 Road, Killinochchi
Tell/Fax: + 94 21 228 5361

அனைவரது
அபிமானத்தைப் பெற்ற
**OMEX HOTEL**
சுத்தம், சுவை, தரம்,
நியாய விலை
இல. 372, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே 021 222 9926

Vayuputhra Phone Shop
வாயுபுத்ரா போன் சொப்



வாயுபுத்ரா புக்கிங் சென்றர்
077 36 44 246 / 077 85 95 151

**Yarl Phone Shop**
All kind of Mobile Sales
Accessories & Repairing
Authorized Dealers-
SAMSUNG | HUAWEI | I PHONE | NOKIA
10, New Market, Hospital Road,
Jaffna. (Up Stairs)
Mob: 075 979 7987, 077 087 7723
Tel: 021 222 7125

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
ALL CEYLON DISTRIBUTERS
*Importers of books, Magazines, Agriculture Equipments, all kinds of Stationery, All kinds of Paper Items, Chemicals, Sports Goods, Office Equipment etc., and Government Suppliers*
212, K.K.S. Road, Jaffna.
T.P: 021 222 5542, 021 5671527
E-mail:acdil@ymail.com
Fax: 021 222 7983

DS.589 அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதிப் பயிற்சிப்பாடசாலை
KIRUBA LEARNERS
கிருபா KIRUBA LEARNERS லேணர்ஸ்
No.1 Driving Training School In North
Govt.Approved A Grade Driving Trainig School



தலைமைக் காரியாலயம்
இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 071 4546 960
0777225292

# 10 ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 08 . 05 . 1930



இறப்பு 04 . 06 . 2009

பிறப்பு 21 . 12 . 1962



இறப்பு 13 . 06 . 2009

அமரர் அப்புக்குட்டி இராசையா

அமரர் சரவணமுத்து புஸ்பராசா

திதி: 13.06.2019

கீரிமலை வீதி,
சித்தன்கேணி.

குடும்பத்தினர்.

---

ஓம் விராட்விஸ்வ பிரம்மனே நம

## மரண அறிவித்தல்

### திருமதி விஜயலட்சுமி பஞ்சாட்சரம் (பத்தர்)



மட்டக்களப்பு கோட்டமுனையைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் தற்போது இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி பஞ்சாட்சரம் (பத்தர்) 05.06.2019 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பாக்கியம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சபாபதி பஞ்சாட்சரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சபாபதி-அன்னம்மா தம்பதியரின் மருமகளும், துரையப்பா அமிர்தம் அவர்களின் பெறாமகளும், காலஞ்சென்ற சுகவதி, விஜயானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசரெத்தினம், காலஞ்சென்ற வரதராஜா ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும், தவலட்சுமி (இந்தியா), புஸ்பராணி (பிரான்ஸ்), பஞ்சகுமார் (இந்தியா), கணேசகுமார் (பிரான்ஸ்), சிவகுமார் (கனடா), ராஜகுமார் (பிரான்ஸ்), நந்தகுமார் (இந்தியா), செல்வகுமார் (கனடா), ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற மகேந்திரராஜா (கிராமசேவையாளர்), ஞானகுமாரன், நவமலர், கமலாதேவி, நிமல்க்கா, இரேனா, வதனிசோபா, பிரஷாந்தினி ஆகியோரின் மாமியும், கௌசல்யா, கஜானி, ஜனார்த்தன், ஜசிந்தா, நிவேதா, லஷ்மன், ஷாஸ்வின், அட்ரியன், அலெக்சாண்டர் அவந்திகா, ஆருசிக்கா, அருட்செல்வன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மதுஜாவின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சென்னை பெஷன் நகரில் உள்ள மின்சார மயானத்தில் நடைபெற்று பிற்பகல் 1.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இந்தியா**
தவலட்சுமி (0091 9380 155 007)
நந்தகுமார் (0091 9884 303 423)
(0091 4424 984 540)

தகவல் :
குடும்பத்தினர்.

(cs 2598) (13,17)

---

# 6 ஆம் மாத நினைவு அஞ்சலி

சீர்பெற வாழ்வாங்கு வாழ்ந்து சிவபதம் அடைந்தவெம் செம்மல்

புகழ்பூத்த சட்டத்தரணி

## அமரர் வேலு தம்பு முருகுப்பிள்ளை கதிர்காமநாதன்

தோற்றம் 05 . 02 . 1943



மறைவு 13 . 12 . 2018

அன்பு கொண்ட உள்ளங்களில் பொறாமை இல்லை
ஆத்திரம் கொண்டவர்களுக்கு அமைதி இல்லை
இல்லறத்தில் இன்பமாக வாழ்ந்தவருக்கு நரகமில்லை
ஈசன்பாதம் தொழுவதற்கு மறுப்பு இல்லை
உழைத்து உயர்ந்தவருக்கு என்றும் தாழ்வு இல்லை
ஊக்கம் கொடுத்து வளர்த்தவர்க்கு என்றும் துன்பமில்லை
எங்கள் வாழ்வு என்றும் இன்பமானது. துன்பம் இல்லை.
ஐயமின்றி வாழ்பவர்க்கு கள்வர் பயம் இல்லை
ஒன்றும் அறியாத அப்பாவிக்கு அவலம் இல்லை
ஓடி ஓடி உழைத்த உங்கள் இதயம் இன்று அமைதியாக நின்றுவிட்டது

திருவேரகம், வட்டு வடக்கு,
சித்தங்கேணி.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

குறிப்பு:- ஐயாவிடம் உறுதி எழுதி எடுக்காதவர்கள் தயவுசெய்து 2 மாத தவணைக்குள் எடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.
மனைவி :- திருமதி கதிர்காமநாதன்

(CS/ 25818) (11,17)

---

# மரண அறிவித்தல்

## சதாசிவம் ஜீவகுமார் (ஜீவா)



யாழ். கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் நோர்வேயை வதிவிடமாகவும் கொண்ட சதாசிவம் ஜீவகுமார் (ஜீவா) 09.06.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சதாசிவம் நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் பூபதி தம்பதிகளின் அன்பு மருமகனும் இதயாவின் அன்புக் கணவரும் தமிழ்ழி, தமிழிச்சி, தமிழன், தமிழவள் ஆகியோரின் பாசமிகு தந்தையும் குமார் (டென்மார்க்), மாலா (டென்மார்க்), கோவி (டென்மார்க்), திலீப் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இதயராசன் (லண்டன்), காலஞ்சென்ற கபிலராசன் மற்றும் சுதா (இலங்கை), லக்கி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்துமயானத்துக்கு பிற்பகல் 2.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குட்செட் வீதி,
கோண்டாவில்.**

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 23917)(14,17)

**நாகரத்தினம் (அம்மா) - 077 666 0303/ இதயா (மனைவி) - 076 613 1644**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 29 . 12 . 1958

உதிர்வு 14 . 05 . 2019

அமரர்

### புண்ணியமூர்த்தி தெய்வேந்திரன்

(ஓய்வுபெற்ற மின்சாரசபை ஊழியர் – சாவகச்சேரி)

கடந்த 14.05.2019 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் புண்ணியமூர்த்தி தெய்வேந்திரன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (13.06.2019) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அழைப்பதுடன் எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு பல்வேறு வழிகளில் உதவியும் ஆறுதல் அளித்த அனைவருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் அளித்தோருக்கும் தொலைதூரத்தில் இருந்தும் அன்னாரை தேடிவந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கியோருக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

(இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

இல. 64 செம்மணி வீதி
நல்லூர், யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



பிறப்பு 11 . 09 . 1967

இறப்பு 12 . 06 . 2019

### தம்பிராசா ஜெயக்குமார்

(தபால் ஊழியர், கொக்குவில்)

தாவடிதெற்கைப்பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும்கொண்டதம்பிராசா ஜெயக்குமார் நேற்று (12.06.2019) இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா சிவஇன்பநாயகி தம்பதியினரின் பாசமிகு மகனும் தேவராசா கமலாதேவி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் சொர்ணமலரின் பாசமிகு கணவரும் துஷ்யந்தி, விதுஷன், தனுஜா ஆகியோரின் அன்புத்தந்தையும் உமாகாந்தின் அன்பு மாமனும் வசந்தாதேவி (தயா - பிரான்ஸ்), வினோதா (கனடா), கீதா (சுவிஸ்), சிறிக்குமார் (பிரான்ஸ்), கலா (கனடா), இராஜகுமார், புனிதா (லண்டன்)ஆகியோரின்பாசமிகுசகோதரனும்நாகேஸ்வரன், அரவிந்தன், மதியழகன், தர்சினி, சசிக்குமார், தயாளினி, சத்தியசீலன் ஆகியோரின் அன்புமைத்துனரும்நிவேதிகா, சுனேதிகா, அருண், நிதன், றினா, அவினா, கவிஷா, தினேஷ், அக்ஷயன், சுஜி ஆகியோரின் அன்பு மாமனும் பவினா, அஷானா, அஜன், கஸ்வினி, கோபிகா ஆகியோரின் பெரியப்பாவும் சங்கவி, ராகவன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2019) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## பீம ஆயுஷ்ய ஹோமசாந்தி மங்கள வைபவம்
## ஐம்பதாவது வயது நிறைவு



சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி கோயில்
அமரர் **பிரதமகுரு யோகீஸ்வரக்குருக்கள்** மற்றும்
**சுபதாம்பிகை அம்மா** தம்பதிகளின் புதல்வரும்
அரியாலை அமரர் **கணேசசர்மா** மற்றும் **ராஜலக்ஷ்மி** தம்பதிகளின்
மருமகனும் ஆகிய

### சிவஸ்ரீ ரஞ்சிதக்குருக்கள்

*(கொழும்பு கப்பித்தாவத்தை சிவன் கோயில் பிரதமகுரு)*

அவர்களுக்கு மேற்படி மங்கள வைபவம் (வைகாசி 30 ஆம் நாள்) இன்று (13.06.2019) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவருடைய புதுமனையில் நடைபெறுகின்றது. தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

யோ.ரஞ்சிதக்குருக்கள்
ரமா ராணி தம்பதிகள்
மகன் - ரமாஜித சர்மா

97/16, AV றோட்,
அரியாலை, யாழ்ப்பாணம்.

**077 652 5405/ 077 695 3208**

## மரண அறிவித்தல்

### திருமதி பராசக்தி சண்முகநாதன்



பிறப்பு 06.10.1933 இறப்பு 12.06.2019

கிராமக்கோடு, புலோலி தென்மேற்கு புலோலியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி சண்முகநாதன் நேற்று (12.06.2019) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவராஜசிங்கம் நாகம்மா தம்பதிகளின் அன்புப்புதல்வியும் நீர்வேலி - மாசுவன் சந்தியைச்சேர்ந்த காலஞ்சென்ற முருகேசு - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும் சண்முகநாதன் (ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், திருகோணமலை துறைமுக அதிகாரசபை) அவர்களின் அன்பு மனைவியும் பகீரதன் (நோர்வே), சசிதரன் (உரிமையாளர் - நெல்லியடி Royal Electronic Electrical), தஜரதன் (ஆய்வுகூடஉதவியாளர் யா/மெதடிஸ்தபெண்கள்உயர்தரபாடசாலை) ஆகியோரின் அன்புத்தாயாரும் புவனலோஜினி (நோர்வே), ராதிகா (ஆசிரியை, பெரியபுலம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் மிதுனகா, விபீசன் (நோர்வே), நிரோசிகா, சௌமியா (யா/வேம்படி உயர்தரப்பாடசாலை) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்ற பரயோகஜெயம், பரராஜசேகரம், மற்றும் பரமேஸ்வரி, பரராஜசிங்கம், பார்வதி அம்மாள், பத்மயோகன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் பரஞ்சோதி, சரஸ்வதி, மகேஸ்வரி, நாகேஸ்வரி, சிவபாலேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2019) வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கிராமக்கோடு,
புலோலிதென்மேற்கு, புலோலி

தகவல்: கணவன், பிள்ளைகள்
077 835 6710

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமைபுரியும் **திருமதி கிருஸ்ணபவன் பவானி** அவர்களின் அன்புத் தாயார்

**லட்சுமிநாதன் கமலாதேவி**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரினது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதிய நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்**
**யாழ். போதனா வைத்தியசாலை.**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

**வெளிவாரிப் பரீட்சைகள் - 2017**
**வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி**
**(வெளிவாரி)**

1. **முதலாம் வருட 2ம் அரையாண்டுப் பரீட்சை - 2017**
2. **இரண்டாம் வருட 2ம் அரையாண்டுப் பரீட்சை - 2017**
3. **மூன்றாம் வருட 2ம் அரையாண்டுப் பரீட்சை - 2017**

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் யூலை மாத நடுப்பகுதியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப் பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திலோ அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான இறுதித்திகதி 05.07.2019 (வெள்ளிக்கிழமை) ஆகும்.

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்.**
**12.06.2019**

(C 10437) (14.17)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்மடிழ 01 . 04 . 1979

கண்நெகிழ 09 . 06 . 2014

## அமரர் வயிரவநாதர் மயூரன்
**(VM URAN ENTERPRISE)**

காலமெல்லாம் எம் நெஞ்சில் – நீங்காது
உறைகின்ற எம் அப்பாவே
பாசமுடன் பரிதவிக்க பாரைவிட்டு பறந்ததேனோ ?
ஏங்குகின்றோம் இங்கிருந்து எங்கு சென்றீர்கள்
எம் அப்பாவே !

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

என்றென்றும் கண்ணீருடன்
**அன்பு மனைவி, பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 03 . 1939

மறைவு 11 . 06 . 2019

### அமரர் திரு கந்தையா சந்திரசேகரம்

மறவன்புலோ சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திரு கந்தையா சந்திரசேகரம் அவர்கள் 11.06.2019 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்புப் புதல்வனும், சந்திராதேவியின் அன்புக்கணவனும், சபிதா, சதீஸ்வரன், சசிரேகா ஆகியோரின் அன்புத்தந்தையும், பார்த்தீபன், ஷம்மிக்கா, சிறீகரன் ஆகியோரின் மாமனாரும், ரஷ்மி, ஷஜானி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவர்.
அன்னாரின் பூதவுடல் 14.06.2019 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் தகனக்கிரியைகளுக்காக மாலை 4.00 மணியளவில் தெஹிவளை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: மருமகன்**

0777275489 / 0773946296 / 0112591280

# இரண்டு தாய்க்கு ஒரு பிள்ளை



ஒரு குளத்தின் கரையில் ஒரு மாமரம். அதில் ஒரு குயில் வசித்து வந்தது. நாள் தோறும் உணவு உண்ட பிறகு குயில் மாமரத்தின் கிளை ஒன்றில் அமைதியாக அமர்ந்து கூ.....கூ... என பாட ஆரம்பிக்கும். நேரம் போகப் போக குயில் உற்சாகமடைந்து மேலும் மேலும் பாடும். இந்த இசையைக் கேட்டு வழிப்போக்கர்கள் அந்த மாமரம் நிழலில் தங்க அங்கே இளைப்பாறி பின்னர் புத்துணர்ச்சி பெற்றுச் செல்வார்கள்.

இப்படியே சில நாள்கள் கழிந்தன. குயில் முட்டையிடும் காலம் வந்தது. குயில் முட்டை மட்டும் இடும். ஆனால் கூடு கட்டி அவற்றை அடைகாத்து குஞ்சு பொரிக்கும் செயற்பாட்டை அறியாது. இதனால் குயில் சற்று நேரம் சிந்தித்தது. குளத்தின் மறுகரையில் ஒரு புளிய மரத்தில் கூடு கட்டி வாழும் காகத்தின் நினைவு அதற்கு வந்தது. குயில் காகத்தின் நடவடிக்கைகளை அவதானிக்கத் தொடங்கியது. முக்கியமாக காகம் கூட்டினுள் முட்டையிட்டு வருவதையும் பின்னர் உணவு தேடிச் செல்வதையும் கண்டது. தானும் கூடு கட்டி முயற்சி செய்து தோற்றுப் போனது. தன்னால் கூடு கட்ட இயலாத ஒரு கட்டத்தில் காகம் கூட்டில் இல்லாத நேரத்தில் அதன் கூட்டில் முட்டையை இட்டுச் சென்றது. இப்போது காகத்தின் முட்டைகளுடன் சேர்த்து குயிலின் முட்டையும் காகத்தினால் அடை காக்கப்பட்டு வந்தது.

இரண்டு அல்லது மூன்று வாரங்கள் சென்றன. காகமும் குஞ்சுகள் பொரித்தன. இப்போது காகத்தின் குஞ்சுகளுடன் குயிலின் குஞ்சும் இணைந்தே வளர்ந்தது.

உணவு தேடிக்கொண்டு வரும் காகம் அவற்றைத் தன் குஞ்சுகளுடன் தான் அறியாத குயிலின் குஞ்சுக்கும் ஊட்டிவந்தது. இதனால் குஞ்சுகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நன்கு வளர்ந்து வந்தன. காக்கையின் குஞ்சுகள் தாய் கொண்டு வரும் உணவுகளை கா..கா.. என்று கூச்சல் போட்டு ஆரவாரமாக உண்ணும். ஆனால் குயிலின் குஞ்சோ சில நாள்கள் எந்தச் சத்தம் போடாது மௌனமாக உணவை வாங்கி உண்டது. தாய்க் காகமும் தன் குஞ்சுகளில் அது கொஞ்சம் பலவீனமானது என்ற நினைப்பில் அதனைக் கொஞ்சம் அதிகமாக கவனித்தும் வந்தது. குயிலோ காகத்தின் கூடு இருக்கும் புதிய மரத்தின் சூழலில் உள்ள மரங்களில் தங்கியிருந்தது. தனது குஞ்சின் வரவை ஆவலாக எதிர்நோக்கியிருந்தது.

ஒருநாள் எப்போதும் போல் குஞ்சுகளுக்கு உணவு கூட்டிக்கொண்டிருந்தது. திடீரென குஞ்சுகளுக்குள் இருந்து கூ....கூ..என வினோத சத்தம் ஒன்று எழும்பியது. திடுக்கிட்டுப் போனது தாய்க்காகம். வினோத குரல் எழுப்பியது தான் விசேடமாகக் கவனித்துக் கொள்ளும் குஞ்சிடம் இருந்தே என்று முடிவெடுத்தது. அது தனது இனக் குஞ்சல்ல என்று உடனே முடிவெடுத்து அக்குஞ்சை ஓட ஓட கூட்டுக்கு வெளியே கொந்தித் துரத்தியது. இப்பொழுது புளிய மரத்தில் இருந்து விழுந்த குயில் குஞ்சு பரிதாபமாக கத்தியபடி இருந்தது. தாய்க்காகம் கீழே பறந்து வந்து அதனை மேலும் துன்பம் செய்தது. இப்போது குஞ்சுக் கு யிலுக்கு ஓரளவு பறக்கக் கூடிய அளவுக்கு சிறகுகள் வளர்ந்திருந்ததால் அதுகாகத்தின் தாக்குதலில் இருந்து தப்பிப் பறக்க முயற்சி எடுத்துக்கொண்டிருந்தது. தாய்க் காகத்தின் இந்த கொடூரத் தாக்குதலை குஞ்சுக் குயிலின் தாயால்பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இப்போது அது குஞ்சுக்குயிலிடம் விரைந்து வந்து காகத்திடமிருந்து அதனை மீட்டு தன்னுடன் அழைத்துச் சென்றது.

குஞ்சு பொரிக்கத் தெரியாது விடினும்தனது உபாயத்தினால் தனது இனத்தைப் பெருக்கிக் கொள்கிறது குயில்.

**உபாயத்தினாலும் நாம் பலவற்றைச் சாதிக்கலாம்.**

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்நகரில் இருந்து
இரண்டு km இற்குள் சிறிய
குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத்
தேவை.

**077 8852 450**

**NOTICE**
**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
VACANCY FOR A POST OF MANAGER
UNIVERSITY BUSINESS LINKAGES (UBL) CELL

Applications are invited for the above post on contract basis from suitable qualified persons up to 25 th June 2019.

Applicants who are interested in the above post are requested to visit Jaffna University Website www.jfn.ac.lk for details.

**Registrar.**

## அரியாலை சனசமூக நிலையம்
## முன்பள்ளி ஆசிரியை தேவை

**தகைமைகள்:**
- முன்பள்ளி கற்பித்தல் தொடர்பான அனுபவம்
- A/L பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:
அரியாலை சனசமூக நிலையம்
185, புங்கன்குளம் வீதி, அரியாலை யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு : 077 7110 972, 077 9073 792

## காணி விற்பனைக்கு

கச்சாய் வீதி, கொடிகாமத்தில் வீடு, பயன்தரும் மரங்களுடன் கூடிய 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 1 km தூரம் அளவில் பாடசாலை, பேருந்து நிலையம், புகையிரத நிலையம் மற்றும் தபால் கந்தோர் என்பன அருகில் உள்ளன.

**மேலதிக விவரங்களுக்கு**
**077 959 3223, 077 358 9205**

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 19 . 07 . 1979

உதிர்வு 25 . 05 . 2018

அமரர்
### சிங்கராசா கமலேஸ்வரன்

திதி: ஏகாதசி 13.06.2019

மின்னலைப்போல அதற்கிடையில்
ஆண்டொன்றாகிற்றா?
எங்கள் முற்றத்திலே இன்று நீயில்லை
ஆனாலும் உன் நினைவே நிரம்பியுள்ளது.
என் வீட்டில் உன் குரல் ஒலிக்கவில்லை
ஆனாலும் உன் பேச்சே நித்தமும் கேட்கிறது.
என் அருகில் நீ இன்றில்லை
ஆனாலும் என் நினைவில் நீயே நிரம்பியுள்ளாய்
உன் நினைவின் நிழலில்
நெஞ்சு கனக்க வாழ்கின்றோம்.

இல. 12, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

**என்றும் உன் நினைவுடன் வாழும்**
**அம்மா சி.மகேஸ்வரி**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தோல்வியை ஏற்கும் வாக்குமூலம்

பன்னாட்டுச் சமூகத்துக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் கொழும்பு அரசு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வில்லை, ஆட்சியாளர்கள் தீர்மானத்தை மதிக்காமல் செயற்படுகிறார்கள் என்று குற்றஞ்சாட்டியிருக்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்தலைவர்இரா.சம்பந்தன், கொழும்பு அரசின் இத்தகைய போக்கு ஐ.நா. அமைப்புகள் உருவாக்கப் பட்டதன் அடிப்படை நோக்கங்களையே கேள்விக்குறியாக் கும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

இலங்கைக்கு வந்திருந்த ஐ.நா. உதவிச் செயலர் நாயகமும் ஐ.நா. பாதுகாப்புச்சபையின்பயங்கரவாத ஒழிப்புநிறைவேற் றுச்சபையின்நிறைவேற்று அதிகாரியுமானமிச்சேல் கோனின் சலை கொழும்பில் சந்தித்துப் பேசியபோதே சம்பந்தன் இத னைத் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம் மற்றும் அதனைத் தொடர்ந்துஅந்தத்தீர்மானத்தைநிறைவேற்றுமாறுவலியுறுத்தி நிறைவேற்றப்பட்டமற்றைய இருதீர்மானங்கள்என்பவற்றின் பங்காளியாகக்கொழும்பு அரசு இருந்தபோதும்தீர்மானத்தின் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைச் சம்பந்தன் இதன் போது சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஒரு அரசு பன்னாட்டுச் சமூகத்துக்கு வாக்குறுதியை வழங்கி விட்டு அதனை மதிக்காமல் நடக்குமானால் அது ஐ.நாவின் உருவாக்கத்துக்கானஅடிப்படை நோக்கங்களையே கேள்விக் குறியாக்கிவிடும்என்றும்அழுத்தியிருக்கிறார்சம்பந்தன். இந்த நிலமை குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிருப்திய டைந்திருக்கின்றது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அவர் கூறியிருப்பதெல்லாம் உண்மைதான். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை மதிக்காமல் அதன் பரிந்துரைகளைச் செயற்படுத்தாமல் அரசு இழுத்தடித்து வரு கின்றது என்பதெல்லாம் சந்தேகத்துகிடமில்லாத உண்மை. ஆனால், அதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிருப் தியடைந்திருப்பதாகச் சம்பந்தன் கூறுவதுதான் முரண்பா டானதாகத் தோன்றுகின்றது.


2015ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட ஐ. நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானத்தின் பெரும்பாலான பரிந்துரைகளைக்கொழும்பு செயற்படுத்தாமல்விட்டு 4 ஆண் டுகளாகிவிட்டன. இடையில் இரண்டு தடவைகள் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுமாறு அழுத்தம் கொடுத்து வேறு இருதீர்மானங்களும்கொழும்பைப்பங்காளிகளாகக்கொண்டு நிறைவேற்றப்பட்டன.

அப்போதெல்லாம் அந்தத் தீர்மானங்களுக்குக் கூட்டமைப்பு ஆதரவளிக்கக்கூடாது என்கிற கணிசமான எதிர்ப்பு தமிழ்த் தரப்புக்களில் இருந்து, குறிப்பாகக் கூட்டமைப்பின் உள்ளூர் அரசியல் எதிரியான தமிழ்த் தேசிய முன்னணியிடம் இருந்து கிளம்பியது. ஆனால், கொழும்பு மீதான பன்னாட்டுக் கண்கா ணிப்பைநீடிப்பதற்கு இதைத்தவிர வேறு வழியில்லைஎன்கிற காரணத்தைத் தெரிவித்துக்கொண்டு அந்தத் தீர்மானங்களை ஆதரித்தது கூட்டமைப்பு. அதன்யதார்த்தம்என்னவென்றால், ஐ.நா. தீர்மானத்தைச்செயற்படுத்தாத கொழும்பு அரசைக்கண் காணித்து அறிக்கையிட்டுக்கொண்டிருப்பதைத்தான் ஐ. நாவால் செய்யமுடியும் என்பதுதான். அதற்கு மேல் இந்தவிவ காரம் அங்கு நக்ராது என்கிற உண்மையை கூட்டமைப்பு உணர்ந்திருந்ததால்தான் 2017 மற்றும் 2019 ஐ.நா. தீர்மானங்களைக் கூட்டமைப்பு ஆதரித்தது.

அப்படியிருக்கும்நிலையில்இப்போதுதிடீரெனதீர்மானத்தைக் கொழும்பு நிறைவேற்றாமல் இருப்பது ஐ.நா. உருவாக்கத்துக் கான அடிப்படையையே கேள்விக்குறியாக்கும் எனக் கொந்த ளிப்பதில் பயன் ஏதாவது இருக்குமா?

சம்பந்தர்தற்போது ஐ.நா. மீது தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டு அல்லது வருத்தம் கடந்த 30 ஆண்டுகளாகவே அந்த மன்றம் குறித்துத் தெரிவிக்கப்பட்டுவரும் விமர்சனம்தான். ஐ.நா. ஆதிக்கசக்திகளின்கைப்பாவையேதவிர, அது அடக்கப்படும் மக்களின் பிரதிநிதியல்ல என்பதுதான் வரலாறு. ஏனெனில் அதிகாரம் மிக்க நாடுகளால்தான் அது இயக்கப்படுகின்றது. இந்த நிலையில் கண்காணிப்பையும் அறிக்கையிடுவதையும் தவிர ஐ.நா. மேலும் எதையாவது செய்யும் என்று எதிர்பார்ப்ப தில் பயன் ஏதுமில்லை.

ஆகமொத்தத்தில் சம்பந்தன் ஐ.நா. அதிகாரி சந்திப்பின் பயன் அரசியல் தீர்வு மற்றும் பாதிக்கப்பட்டோருக்கான நீதியை எட் டும் விடயங்களில் மைத்திரி– ரணில் ஆகியோரை நம்பிப் படுதோல்வியடைந்திருக்கிறது கூட்டமைப்பு என்பதற்கான ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்கியிருப்பதுதான்.



# மோடி பேரலை 2.0

ஆளுங்கட்சிக்கு எதிராக அதிருப்தி இருக்கிறது, 2014ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வென்ற தொகுதிகளில் பாதியை வெல் வதே பாஜகவுக்கு சவால், இந் தியா இம்முறை தொங்கு நாடாளு மன்றத்தைச் சந்திக்கலாம் என்றெல்லாம் தேர்த லுக்கு முன்பு சொல்லப்பட்ட அனைத்து ஆரூடங் களையும் பொய்யாக்கி, தன்னுடைய ஆளுமை யால் பாஜகவுக்கு இன்னொரு வரலாற்று வெற்றி யைத் தந்திருக்கிறார் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி. 2014ஆம் ஆண்டு தேர்தலில் வென்ற இடங்களைக் காட்டிலும் அதிகமான இடங்களில் பாஜக கூட்டணியை வெற்றிபெறச் செய்ததோடு, தனக் குப் பக்கத்தில் அல்ல தூரத்தில் கூட எந்த எதிர்க்கட்சியாலும் இன்று நிற்க முடியாது என்ற சூழ லையும் உருவாக்கியிருக்கிறார்.

மோடி ஆட்சிக்கு வந்த இந்த ஐந்தாண்டுகளில் இந்தியத் தேர்தலின் தன்மையே மாறியிருந்தது. ஒவ்வொரு மாநிலத் தேர்தலும் தேசியக் கவனம் பெற்றது. ஒவ்வொரு மாநிலத் தேர்தலிலும் பாஜக பெறும் வெற்றி – தோல்விகளும்கூட மோடி அரசின் மீதான தீர்ப்பாகவே பார்க்கப்பட்டது.

### விமர்சனங்களுக்கு அப்பால்

மோடி தன்னுடைய ஐந்தாண்டு தலைமை அமைச்சர் பயணத் தில் எதிர்கொண்ட விமர்சனங்க ளின் பட்டியல் மிக நீளமானது. அவற்றில் பணமதிப்புநீக்கம், ஜிஎஸ்டி வரி விதிப்பு என்கிற இரு பொருளாதார நடவடிக்கைகளும் சாமானிய மக்களின் வாழ்வாதா ரத்தில் பெரும் நெருக்கடியை உண்டாக்கின. விவசாயத் துறை யின் வீழ்ச்சியும், உற்பத்தித் துறையின் சுணக்கமும், வேலை யில்லாத் திண்டாட்டத்தை அர சின்முன் பெரும் சவாலாக்கியி ருந்தன. பெரிய வாக்குறுதிகளு டன் ஆட்சிக்கு வந்து, அவற்றில் பெரும்பாலானவற்றைச் சாத்தி யப்படுத்த முடியாத எந்தவொரு கட்சியும் இப்பேர்ப்பட்ட சூழலைக் கடந்து வெற்றிக் கோட்டைத் தொடுவது என்பது உள்ளபடி இமாலய சவால். ஆனால், மோடி அதைச் சாத்தியமாக்கியிருப்ப தோடு, புதிய வரலாற்றையும் படைத்திருக்கிறார். பாஜக 2014ஆம் ஆண்டில் பெற்ற வெற்றியைக் காட்டிலும், 2019ஆம் ஆண்டில் பெற்றிருக்கும் வெற்றி பல வகைகளில் மிகப் பெரியது. 2014ஆம் ஆண்டு தேர்தலில் மன்மோகன் சிங் அரசு மீதான கடுமையான அதிருப்தி மக்கள் மத்தியில் இருந்தது. ஊழல்களால் வெறுத்துப்போயிருந்த மக்கள், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி தோற்கடிக்கப்பட வேண் டும் என்று எண்ணியதோடு, அதற்கான சந்தர்ப் பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். ஆக, பாஜ கவின் 2014 தேர்தல் வெற்றியில் முந்தைய அரசு மீதான அதிருப்திக்கும் முக்கியமான ஓரிடம் இருந்தது. ஆனால், 2019ஆம் ஆண்டுவெற்றி அப்படிப்பட்டதல்ல. இது முழுக்க மோடி உருவாக் கிய இடம். நாடு முழுக்கவுள்ள எதிர்க்கட்சிகள் - ஓரணியில் அவை ஒன்றாகத் திரளாவிட்டாலும் - அவ்வளவு பேரின் எதிர்ப்பையும் எதிர்கொள்ப வராக மோடி இருந்தார். தன் மீது குவிக்கப்பட்ட எதிர்ப்பையே தன்னுடைய மூலதனமாக அவர் உருமாற்றினார். இந்தத் தேர்தலையே தனதாக் கிக்கொண்டிருக்கிறார்.

### மோடிக்கு நிகரான தலைவர் இல்லை என்று நிரூபித்தார்

முழுக்கவுமே இந்தத் தேர்தல் மோடியினுடைய துதான். ‘எங்கள் கட்சியில் ஏழெட்டுப் பிரதமர் வேட்பாளர்கள் இருக்கிறார்கள்; அவர்களில் எட்டா வது இடத்தில் மோடி இருக்கிறார்’ என்று பாஜக தலைவராக இருந்த சமயத்தில் சொன்னார் நிதின் கட்கரி. 2014ஆம் ஆண்டில் அவர்கள் அத்தனை பேரை யும் முந்திக்கொண்டு முன்னே வந்து தலைமை அமைச்சரா னாலும், அப்போது மோடி தலைமை அமைச்சராவதில் அவர்கள் அத்தனை பேரின் பங்களிப்பும் கூடவே இருந் தது. இந்த ஐந்தாண்டுகளில் அவர்களில் சிலர் ஓரங்கட்டப் பட, ஏனையோர் செல்வாக்கு மங்கித் தேய்ந்திருக்க தனியொ ருவராகவே பரப்புரைச் சுமை களை எதிர்கொண்டு வென்றி ருக்கிறார் மோடி. கட்சிக்குள் மட்டுமல்லாது, கட்சிக்கு வெளி யிலும் தனக்கு இணையான மக்கள் செல்வாக்கு பெற்ற ஒரு தலைவர் இன்று இல்லை என்று அவர் நிரூபித்திருக்கி றார்.

மோடி ஆட்சிக்கு வந்த இந்த ஐந்தாண்டுகளில் இந்தியத் தேர்தலின் தன்மையே மாறி யிருந்தது. ஒவ்வொரு மாநிலத் தேர்தலும் தேசியக் கவனம் பெற்றது. ஒவ்வொரு மாநிலத் தேர்தலிலும் பாஜக பெறும் வெற்றி - தோல்விகளும்கூட மோடி அரசின் மீதான தீர்ப்பாகவே பார்க்கப்பட்டது. விளைவாக, ஒவ்வொரு மாநிலத் தேர்தலையுமே தீவிரமாகக் கருதி அணுகியது மோடியின் பாஜக. ஒவ்வொரு மாநிலத்திலும் பிரம்மாண்ட செல்வாக்கோடு இருக்கும் எதிர்க்கட்சித் தலைவர்களோடு அவரே எதிரே போரிட்டார்; அதன் விளைவையே நாடு தழுவிய பொதுத் தேர்தலில் அது இப்போது அறு வடைசெய்கிறது. 2014ஆம் ஆண்டு தேர்தலைக் காட்டிலும் 2019ஆம் ஆண்டு தேர்தலில் பாஜக பெற்றி ருக்கும் வெற்றி எண்ணிக்கை மேலும் அகில இந்திய மயமாகியிருக்கிறது. நாட்டின் மூத்த கட்சியான காங்கிரஸ், மாநிலங்களில் ஒரு இடத்தில்கூட வெல் லமுடியாத சூழல் ஏற்பட்டிருக்கும் நிலையில், தேர்தல் கள்தோறும் புதிய மாநிலங்களில் அடியெடுத்து வைக்கும் பாஜகவை இந்தியாவின் மிகப்பெரிய கட்சியாக மட்டும் அல்லாமல், உலகின் மிகப் பெரிய கட்சியாகவும் உருமாற்றியிருக்கிறார் மோடி.

*நன்றி தி ஹிந்து*

# அடிப்படைவாதிகளினுடைய தேவைகளுக்காக சதொசவின் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன

## விமல்வீரவன்ச போர்க்கொடி

கொழும்பு, ஜுன் 13

சதொச நிறுவனத்தின் வாகனங்கள் அடிப்படைவாதிகளின் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை ஆதாரபூர்வமாக நீதிமன்றில் பகிரங்கப்படுத்த தயார். அமைச்சர் ரிசாத் பதியுதீனின் அமைச்சின் வரப்பிரசாதங்கள் முழுமையாக அடிப்படைவாத வளர்ச்சிக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சதொச நிறுவனம் முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் அமைச்சுக்கு பொறுப்பாக்கப்பட முன்னர் சதொச நிறுவனத்தில் பெரியளவு போதைப்பொருள்கள் கைப்பற்றப்படவில்லை. அடிப்படைவாத தேவைகளுக்கு அரச நிறுவனத்தின் வாகனங்களும் முறைக்கேடாக பயன்படுத்தப்படவில்லை. முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் முறையற்ற செயற்பாடுகளே இஸ்லாமிய அடிப்படைவாதத்தை வலுப்படுத்தியுள்ளன.

சதொச நிறுவனத்தில் முறைகேடுகள் இடம்பெறுகின்றன என்று கடந்த காலங்களில் ஆதாரபூர்வமாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்த போது அமைதி காத்த சதொச நிறுவனம் தற்போது எமக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவுள்ளமை சிறப்பு அம்சமாகும். ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி அடிப்படைவாதிகளின் தாக்குதலுக்கும், அதற்கு முற்பட்ட தினங்களில் அடிப்படைவாதிகளின் ஏனைய செயற்பாடுகளுக்கும் சதொச நிறுவனத்தின் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அரச வாகனங்கள் முறைக்கேடாகப் பயன்படுத்தியுள்ளமை தொடர்பில் நாம் பகிரங்கப்படுத்திய செய்தியால் சதொச நிறுவனத்தின் பெருமைக்கு பங்கம் விளைவித்துள்ளதாக குறிப்பிடுவது வேடிக்கையாகவுள்ளது. கடந்த காலங்களில் இந்த நிறுவனத்தில் இடம்பெற்ற முறைக்கேடுகள் தொடர்பில் புதிதாக தெளிவுப்படுத்த வேண்டிய அவசியம் கிடையாது.

சதொச நிறுவனம் நீதியை பெற்றுக்கொள்ள நீதிமன்றத்தை நாடுவது வரவேற்கத்தக்கது. கொழும்பில் இருந்து சதொச நிறுவனத்துக்கு சொந்தமான வாகனங்கள் தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் சாய்ந்தமருது பிரதேசத்துக்கு தொடர்ச்சியாக சென்றுள்ளமைக்கான ஆதாரங்கள் முழுமையாகக் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றை நீதிமன்றில் பகிரங்கப்படுத்துவோம் - என்றார்.

(ம)



## சிங்கப்பூரில் தலைமைஅமைச்சர் கோத்தபாயவையும் சந்திக்கிறார்

கொழும்பு, ஜுன் 13

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட விஜயமாக நேற்று புதன்கிழமை சிங்கப்பூர் சென்றார் என்று தலைமை அமைச்சர் அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னர் நாட்டில் உறுதியற்றதன்மை நிலவுகின்றது. தாக்குதல்கள் குறித்து ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் வெளியாகும் அதிர்ச்சித் தகவல்கள், முஸ்லிம் தலைவர்களின் பதவி விலகல், புதிய அமைச்சர்கள் நியமனம் என இலங்கையில் பரபரப்பான சூழ்நிலை நிலவுகின்றது.

இவ்வாறான நிலையிலேயே தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

சிங்கப்பூர் வைத்தியசாலையொன்றில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ச சிகிச்சை பெற்று வருகின்றார். அவரின் சுகநலன்களை விசாரித்தல் மற்றும் சில தனிப்பட்ட விடயங்களுக்காகவே தலைமை அமைச்சர் சிங்கப்பூருக்கு பயணம் செய்கின்றார் என அலரி மாளிகைத் தகவல்கள் தெரிவித்தன. எதிர்வரும் 15ஆம் திகதி தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பவுள்ளார். (ம)

## மருத்துவமனையிலிருந்து வெளியேறினார் கோத்தா

கொழும்பு, ஜுன் 13

சிங்கப்பூர் மருத்துவமனையில் இதய அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட இலங்கையின் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச மருத்துவமனையில் இருந்து வெளியேறியுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மாத இறுதியில் மருத்துவச் சோதனைக்காக நீதிமன்ற அனுமதியுடன் கோத்தபாய ராஜபக்ச சிங்கப்பூருக்குச் சென்றிருந்தார். சிங்கப்பூரின் புகழ் பெற்ற மவுண்ட் எலிசபெத் மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு உடனடியாக இதய அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதையடுத்து, அவரது உடல் நிலை சீரடைந்து, தற்போது மருத்துவமனையில்,இருந்து வெளியேறி, சிங்கப்பூரில் உள்ள தங்குமிடம் ஒன்றில் கோத்தபாய ராஜபக்ச ஓய்வெடுத்து வருகிறார். நான்கு வாரங்கள் அவர் படுக்கையில் இருந்து ஓய்வெடுக்க வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (ம)

## தஜிகிஸ்தான் செல்லவுள்ளார் அரச தலைவர்

கொழும்பு, ஜுன் 13

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தஜிகிஸ்தான் நாட்டுக்கு பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. அங்கு நடைபெறவுள்ள ஆசியாவின் நம்பகத் தன்மை மற்றும் ஒருங்கிணைவை கட்டியெழுப்புவதற்கான அரச தலைவர்களின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அவர் இந்தப் பயணத்தை மேற்கொள்ள வுள்ளார்.

3 நாள்கள் தஜிகிஸ்தானில் தங்கவுள்ள அரச தலைவர், மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ள முக்கிய தலைவர்களுடன் தனிப்பட்ட சந்திப்புகளை நடத்துவார். இந்த மாநாட்டில் ரஷ்ய அதிபர் புடின் மற்றும் சீன அரச தலைவர் புடின் உள்ளிட்டோரும் பங்குபற்றவுள்ளனர். (ம)

## கைதடி இராசபுரியில் வீடுகளுக்கு அடிக்கல்

கொடிகாமம் ஜுன் 13

கைதடி இராசபுரி கிராமத்தில் வீடுகளுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் முயற்சியில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் ஏற்பாட்டில் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

நிகழ்வு சனசமூக நிலையத் தலைவர் சி.கஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. அதில் 39 வீடுகளுக்கு அடிக்கல் நடுகை இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் மாவட்ட முகாமையாளர் எம்.ரவீந்திரன், தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு, சாவகச்சேரிப் பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன் ஆகியோரும் மதிப்புறு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்களான சு. கேதீஸ்வரன், இ.ஜானகி, நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனின் இணைப்பாளரும் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய ஆசிரியருமான செ.பிரதாப், உலக வறுமை ஒழிப்பு நிறுவன நிறுவுநர் கலாநிதி மு.அகிலன், ஜே.289 கைதடி கிழக்கு கிராம அலுவலர் கு.முல்லைமாறன், அபிவிருத்தி அலுவலர் திருமதி றிஜோல்ட் மதுரா, சமுர்த்தி அலுவலர் கு.கிசோக், கைதடி பொது விளையாட்டு மைதான அபிவிருத்திக் குழுத் தலைவரும் ஆசிரியருமான அ.செந்தூரன், கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ.கந்தசாமி, வளர்மதி சனசமூக நிலைய போசகர் க.சிவலிங்கம், வளர்மதி சனசமூக நிலைய முன்னாள் தலைவர் யாழ்.வேந்தன், இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் தென்மராட்சிக் கிளைப் பொருளாளர் செ.மயூரன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஏழாம் வட்டாரக் கிளையின் செயலர் கோ.கௌரிதாசன், விளையாட்டுக் குழுத் தலைவர் க.மோகனதாஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

(த-159)

## ஸஹ்ரானின் குருணாகல் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சிக்கினார்!

கொழும்பு, ஜுன் 13

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களின் முக்கிய சூத்திரதாரியான தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் ஸஹ்ரான் ஹாசீமினின் குருணாகல் மாவட்ட முதன்மை ஒருங்கிணைப்பாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார். .

இவர், சிறப்பு பொலிஸ் குழுவினரால் கட்டுப்பொத்த, நாரம்மலவில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று அறிவித்துள்ளது.

முஹமட் அரோஷ் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

ஸஹ்ரானுடன் நெருங்கிய தொடர்புடைய இவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது பல உண்மைகள் வெளிவந்துள்ளன என்றும், இவர் மேலதிக விசாரணை களுக்காகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

(ம-22)

# வேட்பாளரை விரும்பவில்லை என்பதைச் சேர்க்க முடியுமா?

*தேர்தல்கள் ஆணைக்குழுவின் கருத்தை கவனத்தில் எடுக்காத கட்சிகள்*

*யாழ்ப்பாணம், ஜூன் 13*

இலங்கையில் இடம்பெறும் சகல தேர்தல்களிலும் வாக்குச் சீட்டில் "இந்தத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளை அல்லது வேட்பாளர்களை விரும்பவில்லை" என்கின்ற வாக்கையும் இணைப்பது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு ஆலோசனை முன்வைத்துள்ளது. எனினும் இது தொடர்பில் கட்சிப் பிரதிநிதிகள் எவரும் கண்டுகொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் இடம்பெறும் நான்கு வகையான தேர்தல்களிலும் செல்லுபடியற்ற வாக்குகளும் கணிசமான தொகையை எட்டுகின்றன.

அவை எவருக்குமே வாக்களிக்க விரும்பாத நிலையிலேயே அவ்வாறு வாக்களிக்கின்றனர் என்று ஒரு தரப்பினரும் சரியாக வாக்களிக்கத் தெரியாத காரணத்தினாலேயே செல்லுபடியற்ற வாக்குகள் அதிகரிப்பதாக மற்றொரு தரப்பினரும் கூறுகின்றனர்.

செல்லுபடியற்ற வாக்குகள் நிராகரிக்கப்பட்டு செல்லுபடியான மொத்த வாக்குகளில் இருந்தே தேர்வுகள் இடம்பெறுகின்றன.

எனவே இந்த நடைமுறையைக் கொண்டு வருவது பற்றி ஆலோசிக்கப்படுகிறது. உதாரணமாக தேர்தல் ஒன்றில் 10 கட்சிகள் போட்டியிட்டால் வாக்குச் சீட்டில் 10 கட்சிகளினதும் பெயர்கள் இருக்கும். 11ஆவதாக "இந்தத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளை அல்லது வேட்பாளர்களை விரும்பவில்லை" என்கின்ற வசனம் இருக்கும். எவருக்குமே வாக்களிக்க விரும்பாதவர்கள் இந்த வசனத்துக்கு நேரே புள்ளடியிட முடியும்.

இதுமட்டுமன்றி, உதாரணமாக 100 வாக்குகள் கிடைத்திருந்தால் 30 வாக்குகள் செல்லுபடியற்ற நிலையில் 70 வாக்குகள் செல்லுபடியானவையாகின், அதில் 37 வாக்கைப் பெற்றவர் பெரும்பான்மையாகக் கருதப்படுகின்றார்.

இதனால் எவரையும் விரும்பவில்லை என்ற தேர்வையும் உள்ளடக்கினால் செல்லுபடியற்ற வாக்குகள் குறைவடையும்.

அதேநேரம் எவரையும் விரும்பவில்லை என்கின்ற வாக்கும் கணக்கிடப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சகல கட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

இவ்வாறு குறிப்பிட்ட விடயத்துக்கு எந்தக் கட்சியின் பிரதிநிதிகளும் எதிர்ப்போ அல்லது ஆதரவோ தெரிவிக்காத நிலையில் இது தொடர்பான கருத்துக்களையேனும் தெரிவிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-105)

## திறன் வகுப்பறை திறப்பு

சாவகச்சேரி, ஜூன் 13

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்ட தரம் 5 வகுப்புக்கான திறன் வகுப்பறை நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

அதிபர் திருமதி. ல. முகுந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினர்களாகச் சாவகச்சேரிக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வ.நடராசா, ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் இ.சர்வேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஜ-9)

## மீசாலை வடக்கில் தொடர் திருட்டுகள்

சாவகச்சேரி, ஜூன் 13

மீசாலை வடக்கு இராமாவில் முகாம் அமைந்திருந்த காணிகளில் தொடர்ச்சியாகத் திருட்டுகள் இடம்பெற்று வருவது குறித்து அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

பகல்வேளையில் அந்தப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடும் சிலர் இரவு நேரத்தில் வாகனத்தைக் கொண்டு வந்து திருட்டில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் இதுவரை பத்துக்கு மேற்பட்ட வேம்பு மரங்களையும் மற்றும் காணிகளில் கட்டப்பட்டிருந்த நான்கு மாடுகளையும் மூன்று ஆடுகளையும் திருடிச் சென்றுள்ளனர் எனவும் தெரிவித்தனர்.

இவை தொடர்பாகப் பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. எனினும் எந்தப் பயனும் இல்லை என்று அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (ம-9)




## புதிய செம்மணி வீதி பதிவேடுகளில் பதிவு

யாழ்ப்பாணம், ஜூன் 13

75 ஆண்டுகளுக்குமேலாக 'செம்மணிக்குளம்' என்ற பெயரில் இருந்து வந்த வீதி தற்போது புதிய செம்மணி வீதியாகப் பெயர் மாற்றப்பட்டுப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி திணைக்களப் பதிவேடுகளில் குறித்த வீதி 'செம்மணிக்குளம் வீதி' என்று காணப்பட்ட போதிலும் அந்தப் பகுதி மக்கள் 'புதியசெம்மணிவீதி' என்றே பயன்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில் பதிவேட்டில் புதிய செம்மணி வீதியாக மாற்றுமாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் வீதி அபிவிருத்தி திணைக்களத்தை கோரியிருந்தார்.

அவைத் தலைவரின் கோரிக்கையை ஏற்ற வீதி அபிவிருத்தி திணைக்களம் தமது பதிவேடுகளில் புதிய செம்மணி வீதி என்று மாற்றியமைத்துள்ளது.

இதனை சி.வி.கே.சிவஞானம் நல்லூர்ப் பிரதேச சபைக்கும் தெரியப்படுத்தியதை அடுத்து தற்பொழுது நல்லூர் பிரதேச சபையால் 'புதிய செம்மணி வீதி' என்ற பெயர் பலகை நடப்பட்டுள்ளது. (ஜ-21)

## சுகாதாரச் சீர்கேடு நிலவியதால் 10 உணவகங்களுக்குத் தண்டம்

*ஓர் உணவகத்துக்குச் சீல்*

பருத்தித்துறை, ஜூன் 13

சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய பத்து உணவகங்களுக்கு ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டதுடன் உணவகம் ஒன்றைச் சீல் வைத்து மூடுமாறும் உத்தரவிடப்பட்டது.

பருத்தித்துறைப் பிரிவு 1 பொது சுகாதார பரிசோதகர், பருத்தித்துறை பிரிவு 11 பொது சுகாதார பரிசோதகர் ஆகியோரால் 10 உணவகங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்குகள் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குற்றத்தை ஒப்புக்கொண்ட உணவக உரிமையாளர்களுக்குத் தண்டம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறைப் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் ஆறு உணவகங்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளுக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. பருத்தித்துறை பிரிவு 11 பொது சுகாதார பரிசோதகரால் நான்கு உணவகங்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளுக்கு 60 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

அத்துடன் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் ஒன்றைச் சீல் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. இதனையடுத்து பொது சுகாதார பரிசோதகர்களால் உணவகத்துக்குச் சீல்வைக்கப்பட்டது. (ஜ-9)

## கணபதி ஹோமம்

கொடிகாமம், ஜூன் 13

சாவகச்சேரி அல்லாரை அருள்மிகு அறுகம்புலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலய கணபதிஹோமம் எதிர்வரும் 30ஆம் திகதி காலை 8 மணிக்கு நடைபெறும்.

நாட்டில் சாந்தியும், சமாதானமும் நிலவவேண்டி 5ஆவது ஆண்டாக நடத்தப்படவிருக்கும் கணபதி ஹோமத்தில் அனைவரையும் கலந்து விநாயகப் பெருமானின் திருவருளைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆலயப் பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஜ-159)

## இளைஞன் மீது குழு தாக்குதல்

சாவகச்சேரி, ஜூன் 13

உந்துருளியில் பயணித்த இளைஞனை வழிமறித்த கும்பல் துடுப்பாட்ட மட்டைகளால் தாக்கிவிட்டுத் தப்பியோடியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நுணாவில் ஏ - 9 முதன்மை வீதியில் இடம்பெற்றுள்ளது.

கைதடி கிழக்கைச் சேர்ந்த ஸ்ரீபன் லக்ஸன் (வயது-19) என்ற இளைஞனே தாக்கப்பட்டுச் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். வீட்டில் இருந்து உந்துருளியில் சாவகச்சேரிக்கு வந்தவேளையில் நுணாவில் பகுதியில் வழிமறித்த கும்பல் கண்மூடித்தனமாகத் தாக்கிவிட்டுதப்பியோடியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-9)

## தென். பிரதேச செயலர் பிரிவில் வீதிகள் சீரமைக்கப்படவுள்ளன

கொடிகாமம், ஜூன் 13

துரித கிராமிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் நிதி ஒதுக்கீட்டில் இரண்டு வீதிகள் சீரமைக்கப்படவுள்ளன.

மட்டுவில், நுணாவில் வட்டாரத்தில் கைதடி- நுணாவில் ஊரெல்லை வீதி மற்றும் மட்டுவில் - மத்தி கண்டல் காடு வீதி என்பனவே அவ்வாறு சீரமைக்கப்படவுள்ளன. இதற்காக 2.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. சீரமைப்புக்கான ஆரம்ப நிகழ்வு சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினரும் வட்டார தமிழ் அரசு கட்சிக் கிளையின் தலைவருமான அ.மதன்ராஜ் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் சாவகச்சேரி தொகுதிக்கிளைத் தலைவருமான கே.சயந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-159)



## மாடுகளை வதை செய்யும் விதமாக ஏற்றிச் சென்றார் என ஒருவர் கைது

கொடிகாமம், ஜூன் 13

மிருகங்களைச் சித்திரவதை செய்யும் விதமாக லொறியில் மாடுகளை ஏற்றிச் சென்ற சாரதி மிருகவதைச் சட்டத்தின் கீழ் சாவகச்சேரி பொலிஸாரால் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார்.

23 மாடுகளை மிருகவதை செய்யும் விதமாக லொறியில் ஏற்றிக் கொண்டு சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகாமையில் சென்ற போது சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து சாரதி கைது செய்யப்பட்டார்.

மாடுகளும் வாகனமும் கைப்பற்றப்பட்டன. சாவகச்சேரி நீதிமன்றத்தில் சாரதியை நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்ட போது 50 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் அவரைச் செல்ல அனுமதித்த நீதிவான் வாகனத்தையும் மாடுகளையும் விடுவிக்க உத்தரவிட்டார். (ம-159)

## நாவற்குழியில் ஒருவர் கைது

சாவகச்சேரி, ஜூன் 13

400 மில்லிக் கிராம் போதைப் பவுடர் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாவற்குழிப் பகுதியில் வைத்து சந்தேகநபர் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

பொதுமக்களால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து இவர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-9)

## வீதிசீரமைப்பு பணிஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்13
யாழ்ப்பாணம்சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி மறுமலர்ச்சி வீதியின் திருத்த வேலைகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.
நிகழ்வில் வலி.தென் மேற்குபிரதேசசபையின் ஜக்கிய தேசியக் கட்சி. உறுப்பினர் லோ.ரமணன், அருட்திரு மைக்கல்சவுந்தரநாயகம்அடிகளார்மற்றும் கிராமமக்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-63)



# பயங்கரவாதத்தை ஒழிக்க அமெரிக்கா உதவத் தயார்

*தூதுவர் எலைனா பீ.டெப்லிட்ஸ் அமைச்சர் மனோவிடம் தெரிவிப்பு*



கொழும்பு, ஜூன் 13
சகலஇனமக்களிடையே சமத்துவத்தையும்நல்லிணக்கத்தையும்ஏற்படுத்தவும் பயங்கரவாதச் செயற்பாடுகளை ஒழிப்பதற்கும் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க ஐக்கிய அமெரிக்கா தயாராகவுள்ளது என்று அந்த நாட்டின் இலங்கைக்கானதூதுவர்எலைனாபீ.டெப்லிட்ஸ்உறுதியளித்துள்ளார்என்றுதேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவலகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

தூதுவர் எலைனாபீ.டெப்லிட்சுக்கும் அமைச்சர் மனோ கணேசனுக்கும் இடையிலான சந்திப்பொன்று அமைச்சின்காரியாலயத்தில்நேற்று நடைபெற்றது. அந்தச் சந்திப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும்தெரிவித்ததாவது:
இந்தச் சந்திப்பின்போது நாட்டின் பாதுகாப்புவிடயங்கள், பொருளாதாரம்,நல்லிணக்கம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.
அமெரிக்காவின் தூதுவர் எலைனாவுடனானசந்திப்பில்நாட்டின்தற்போதைய பொருளாதார மற்றும் பாதுகாப்பு நிலமைகள், பயங்கரவாத அச்சுறுத்தலில் இருந்து நாட்டை பாதுகாக்கஅரசு முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள்,நாட்டின் தற்போதைய சமத்துவம் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகள்உள்ளிட்டபல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.
அதேபோன்று அவற்றை செயற்படுத்தவதற்குதேவையானமுழுஒத்துழைப்பையும் வழங்க அமெரிக்கா தயாராகவுள்ளது என்று அவர் என்னிடம்தெரிவித்தார்.
இஸ்லாமியப் பயங்கரவாதத்தை முழுமையாக ஒழிப்பதற்கான உதவிகளை பெற்றுக்கொடுக்க அமெரிக்கா அரசு தயாராகவுள்ளது.
அமெரிக்காவின்தேவைக்காகஅரசு செயற்பட்டு வருவதாக எதிர்த்தரப்பினர் தொடர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.
ஆயினும் நாட்டின் பாதுகாப்புக்கும் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காகவும் இலங்கை அரசு கேட்கும் உதவிகள் அனைத்தையும் வழங்க அமெரிக்கா அரசு தயாராகவே உள்ளது- என்றார். (எ)

## தென்மராட்சி வலயமே முதலிடம்

*வலயக் கல்விப் பணிப்பாளர் சுந்தரசிவம் தெரிவிப்பு*

சாவகச்சேரி,ஜூன் 13
கணினித்துறை,நூலக அபிவிருத்தி என்பனவற்றில் தென்மராட்சிக் கல்வி வலயம் ஏனைய வலயங்களுடன் ஒப்பிடுகையில் முன்மாதிரியாக இருக்கின்றது.
இவ்வாறு தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளராக இருந்து நேற்றுத் தொடக்கம் வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளராககடைமையேற்றுள்ள சு.சுந்தரசிவம் தெரிவித்தார்
தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
திறன் வகுப்பறைகள் ஏற்கனவே நாவற்குழி மகா வித்தியரலயம், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, வரணிசைவப்பிரகாசவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது போன்று ஏனைய பாடசாலைகளிலும் இவ்வாறான வகுப்பறை ஆரம்பிக்கப்பட்வேண்டும்.
மாணவர்கள் நீண்ட காலமாக வெண்கட்டி கரும்பலகை என்பவற்றை பார்த்து சலிப்படைந்த முறைமையிலிருந்து விடுபட்டு இந்த திறன் வகுப்பறையினூடாக மாணவர்கள் விடயங்களை உள்வாங்கி தங்களுடைய திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கு இது பேருதவியாக இருக்கும் -என்றார். (ஐ-159)



## பணியில் இருந்த ‘கம விதானை’ தாக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன்13
கிளிநொச்சிமாவட்டத்தின்முரசுமோட்டைப் பகுதியில்சட்டவிரோதநெற்செய்கைப்பகுதிகளில்தண்ணீர்முகாமைத்துவப்பணியில் ஈடுபட்டிருந்த ‘கம விதானை’ மீது நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. காயமடைந்த அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. சட்டவிரோதமாக வயல் விதைப்பில் ஈடுபட்டிருந்தவிவசாயிஒருவரேதாக்கினார் என்று அவர் குற்றஞ்சாட்டுகிறார்.
முரசுமோட்டையைச் சேர்ந்த வீரசிங்கம் (வயது-65)என்பவரேஅடிகாயங்களுடன் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக் குளத்தின் கீழ் சட்டவிரோத விதைப்பில் ஈடுபட்டவர்களுக்குஎதிர்வரும்5ஆண்டுகளுக்குக்காலபோகநெற்செய்கையின்போதுஉர மானியம் நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில் தண்ணீர் முகாமையில் ஈடுபட்டிருந்தபோதே கம விதானை மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.இதுபற்றிபொலிஸ்நிலையத்தில்முறையிடப்பட்டுள்ளது. கமநலசேவை உதவிஆணையாளர்மற்றும்நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஆகியோருக்கும் தகவல் வழ்ங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-105)



தெல்லிப்பழைசந்திரமௌலீஸ்வரர்சிவன்ஆலயஅன்னதானமடத்துக்கான அடிக்கல்நடுகை நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (எ)

## திருநெல்வேலி சந்தியில் சங்கிலியனுக்குச் சிலை

யாழ்ப்பாணம், ஜூன்13
திருநெல்வேலிசந்தியில்சங்கிலியமன்னனுக்குசிலைஒன்றைஅமைப்பதற்கு நல்லூர் பிரதேச சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.
சங்கிலிய மன்னன் சிலையும் சிலையுடன் கூடிய நுழைவாயிலும் அமைப்பதற்கு பிரதேச சபையால் மூன்று மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டிருப்பதாகப் தவிசாளர் த.தியாகமூர்த்தி தெரிவித்தார்.
இந்தச் சிலை அமைப்பது குறித்து ஏற்கனவே சபை அமர்வில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.
தற்போது அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் சிலை அமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன. (ஐ-17)

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஜூன்13
இல்வச சித்தமருத்துவம், கண் பரிசோதனையும் மூக்கு கண்ணாடி வழங்கல் நிகழ்வும் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் சமுர்த்தி வங்கி வாளகத்தில் நடைபெறவுள்ளன.
கோப்பாய் சமுர்த்தி வங்கியும் கோப்பாய் பிரதேச தேசோதய சபையும், இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் திருமதி.மதியழகன் சுபாசினி, சிறப்பு விருந்தினர்களாக. யாழ்ப்பாண மாவட்ட சர்வோதய இணைப்பாளர் எஸ். யுவேந்திரா, வலிகாமம்கிழக்குபிரதேசசபைதவிசாளர் தியாகராசா நிரோஷ், லயன் சீமாட்டி திருமதி மகேந்திரம் , கோப்பாய் பிரதேச தேசோதய சபை தலைவர் இ.மயில்வாகனம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

## பெறுபேற்றை அதிகரிப்பது தொடர்பில்கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்13
வடக்கு மாகாணத்தில் 2019 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதரப்பரீட்சைபெறுபேற்றை அதிகரிப்பதுதொடர்பானவழிமுறைகளை ஆராயும் கலந்துரையாடல் நடைபெற்று வருகின்றது. வலய மட்ட அதிபர் மற்றும் கல்விசார் ஆளணியினருடன் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்று வருவதாக மாகாண கல்வி திணைக்களம் தெரிவித்துள்ளது.
இதுதொடர்பில்மேலும்தெரிவிக்கப்பட்டதாவது:
வடக்கு மாகாணத்தின் கல்வி பெறுபேறுகளை அதிகரிக்க வேண்டும். இரண்டு க.பொ.த பரீட்சைகளை மாணவர்கள் எதிர் கொள்கின்றனர். ஆகவே எந்த பாடத்தில் அதிக கவனம் எடுத்து நூறு வீத சித்தியை பெறலாம்என்பதைஅறிந்துகொள்ள வேண்டும் . இந்த விடயத்தில் கல்வி சமூகத்தினர் தெளிவைக் கொண்டிருக்கவேண்டும். எமது மாகாணத்தின் சித்தியடையும் வீதம் எவ்வளவு, எந்த பாடத்தில் மாணவர்கள் சித்தியடைவது குறைவாக உள்ளது , அதற்கு என்ன நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும், அனைத்து மாணவர்களும் உயர் தரம் கற்க வேண்டும் கடந்த பெறுபேறுகள் எவ்வாறு அமைந்துள்ளன போன்ற விடயங்களை கலந்துரையாடல்மூலம்பெறுவதற்கு இந்த சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
இதன் பிரகாரம் வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து வலயமட்டஅதிபர்மற்றும்கல்வி சமூகத்தினருடானசந்திப்புநடைபெற்று வருகிறது . மன்னார் ,மடு, வடமராட்சி ,வலிகாமம் ,வவுனியா வடக்கு , வவுனியா தெற்கு, கல்வி வலயங்களில் இந்தசெயற்பாடுகள்நிறைவுக்கு வந்துள்ளன. தொடர்ச்சியாக ஏனைய கல்வி வலயங்களில் இந்த செயற்பாடு நடைபெறும் என்றுதெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## கிளிநொச்சியில் மானியங்களை நிறுத்த முடிவு

# சட்டவிரோத விதைப்புக்கு 5 வருடங்கள் மேலதிக விதைப்புக்கு 1-5 வருடங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 13

கிளிநொச்சி மாவட்டத்திலே சட்டவிரோதமாக விதைப்பு மேற்கொண்டவர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு மானியத்தை நிறுத்தவும் மேலதிக விதைப்பு மேற்கொண்டவர்களுக்கு ஓர் ஆண்டு முதல் 5 ஆண்டுகளை மிஞ்சாத வகையில் பொருத்தமான காலத்துக்குச் சிறுபோக மானியத்தை நிறுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலர் சு. அருமைநாயகம் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக் குளத்தின் கீழ் 2019ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கையின்போது மேற்கொள்ளப்பட்டுள்ள மேலதிக விதைப்புக்கள் (அனுமதிக்கப்பட்ட பகுதியில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட மேலதிகமாக இடம்பெறும் செய்கை) மற்றும் சட்டவிரோத விதைப்புக்களை (அனுமதியற்றபகுதியில்அனுமதியின்றி மேற்கொள்ளப்படும் விதைப்பு) மேற்கொண்டுள்ளவர்களின் விவரம் கமநல சேவைத் திணைக்களம் ஊடாக மாவட்டச் செயலருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வாறான விதைப்புக்களை மேற்கொண்டவர்களுக்கு எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கை தொடர்பில் மாவட்டச் செயலகத்தில்நேற்றுமுன்தினம்கலந்துரையாடப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக் குளத்தின் கீழ் இந்த முறை 15 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கையும்500ஏக்கர்சிறுதானியமும் அனுமதிக்கப்பட்டு அதற்கேற்ப அளவீடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டு சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் பலர் மேலதிக விதைப்பில் ஈடுபட்டுள்ளனர் என்று முறையிடப்பட்டது.

முறைப்பாட்டின் அடிப்படையில் திணைக்களங்கள் கமக்கார அமைப்புக்களின் உதவியுடன் அளவீட்டிலும் ஈடுபட்டனர் என்று உறுதிப்படுத்தப்பட்டது என்று மாவட்டச் செயலருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இனம் காணப்பட்ட அளவுகளில் அதிக பட்சமாக பெரியகுளம் பகுதியில்200ஏக்கர், குமரபுரத்தில்150 ஏக்கர், வலதுகரை70ஏக்கர்பகுதி என அழைக்கப்படும் பகுதியில் 100ஏக்கரும், பழையவட்டக்கச்சியின் உடையார் வளவை அண்மித்த பகுதிகளில் 150 ஏக்கரும் அடையாளம் காணப்பட்டன.

இதனால் அத்துமீறிய செய்கை தொடர்பில்இறுதித்தீர்வைஎட்டும் நோக்கில்விவரங்களைமாவட்டச் செயலகத்தில் கமநல சேவைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், விவசாயச்சம்மேளனம்ஆகியவற்றின்பிரதிநிதிகள் கலந்துரையாடினர். அதில் 4 தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டன.

1. கிளிநொச்சி மாவட்டத்திலே சட்டவிரோதமாக விதைப்பு மேற்கொண்டவர்களுக்கு எதிர்வரும் 5 ஆண்டுகளுக்கு உர மானியம் மற்றும் இலவச காப்புறுதி என்பவற்றைகமநலசேவைத்திணைக்களம் நிறுத்த வேண்டும்.

2. மேலதிகவிதைப்புமேற்கொண்டவர்களுக்கு ஓர் ஆண்டுக்குக் குறையாமலும் 5ஆண்டுகளுக்கு மேற்படாமலும் சிறுபோக மானியத்தையும்இலவசகாப்புறுதியையும் நிறுத்துவது.

3. எதிர்வரும் காலத்தில் சிறுபோகத்தின்போது மேலதிக செய்கையைத்தடுப்பதற்காகஅனுமதிக்கப்பட்ட பகுதியிலிருந்து 500 மீற்றருக்குள் இருந்து கால் நடைகளுக்கு மேய்ச்சல் தரைகளை அனுமதிப்பது என்றும் அந்தப் பகுதியில்கால்நடைக்கட்டுப்பாடோ அல்லது அத்து மீறிய விதைப்பு பகுதியில் மேற்கொண்ட வயல்களில்மாடுகள்நுழையும்பட்சத்தில் சட்டப்படி தண்டிக்கும் அதிகாரம் வழங்கப்படமாட்டாது.

4. சிறு குளங்களுக்குச் செல்ல வேண்டிய தண்ணீர் மறிக்கப்படும் பகுதிகளை உடனடியாகச் சீர் செய்து கழிவு தண்ணீர், கால் நடைகளின் தேவைக்காக குளங்களுக்குச்செல்லவழியேற்படுத்துவது ஆகிய 4 தீர்மானங்களும் எட்டப்பட்டன. (கு-105)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

சாவகச்சேரி, ஜூன் 13

மீசாலை தெற்கு மதுவன் சனசமூகநிலையவருடாந்தப்பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

சாவகச்சேரி நகரசபை சனசமூக நிலைய அபிவிருத்தி அலுவலர் சுவித்தா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் க.யோகேஸ்வரன், உபதலைவர் நா.சரவணமுத்து, செயலர் ப.நிதுஷன், உதவிச் செயலர் க.இராசரத்தினம், பொருளாளர் டி..மீரா ஆகியோருடன் 11 பேர் கொண்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (ஜ-9)

⅄⅄⅄⅄

மந்துவில் மேற்கு கமக்கார அமைப்பின் பொதுச்சபைக் கூட்டம் நேற்றுமுன்தினம் தலைவர் இளையதம்பி நாகராசா தலைமையில் நடைபெற்றது.

விருந்தினர்களாகச் சாவகச்சேரி கமநல சேவை நிலைய பெரும்போக அலுவலகர் மற்றும் தொழில்நுட்ப அலுவலகர் ஆகியோர்கலந்துகொண்டனர். இதன்போது நடப்பு வருடத்துக்கான நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

அமைப்பின் புதிய தலைவராக இ.நாகராசா, செயலராக மு.பாலசுப்பிரமணியம், பொருளாளராக பெ.நடராசா, உபதலைவராக சு.தர்மலிங்கம், உதவிச் செயலராக வே.இரத்தினசிங்கம் ஆகியோருடன் 4 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஜ-9)

## தொழிற்பயிற்சி கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்கால வேலை வாய்ப்பைமையமாகக்கொண்டு முழுநேர மற்றும் பகுதி நேர தொழிற்பயிற்சி கற்கைநெறிகளைநடத்திவருகின்றது. இதன் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள யாழ்ப்பாணம், காரைநகர், கைதடி, பண்டத்தரிப்பு, சுன்னாகம் மற்றும் வல்வெட்டித்துறைதொழிற்பயிற்சிநிலையங்களில் கற்கைநெறிகள் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவை மூன்று மற்றும் ஆறு மாதங்கள் பயிற்சிக் காலத்தை கொண்டது. இந்தக்கற்கைநெறிகள்அனைத்தும்தேசியதொழில் தகைமை மட்டம்- 3/4 (என்வீகியூ-3/4) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

கற்கைநெறிகளைகற்கவிரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலகநேரத்தில்மாவட்டஅலுவலகம், 4ஆம்மாதடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம், அல்லது காரைநகர், கைதடி, சுன்னாகம், பண்டத்தரிப்பு, வல்வெட்டித்துறை ஆகியதொழிற்பயிற்சிநிலையங்களில் எதிர்வரும் 22.06.2019 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன்அறிவித்துள்ளார். (எ)

# சரவணபவன் எம்.பியின் நிதி ஒதுக்கீட்டில் வேலைத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் ஊரெழுச்சித் திட்டத்தின் கீழ் நேற்றுப் புதன்கிழமை மேலும் இரண்டு வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நான்கு மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத் திட்டங்களுக்கான அடிக்கல் சம்பிரதாய பூர்வமாக நடப்பட்டது.

நந்தாவில் அம்மன் கோவில் வீதி மூன்று மில்லியன் ரூபா செலவிலும், கோண்டாவில் இந்துமகாவித்தியாலயமைதானத்தைச் சுற்றி பாதுகாப்பு மதில் அமைப்பதற்கு ஒரு மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வேலைத் திட்டங்களை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

நல்லூர்ப் பிரதேச சபை தவிசாளர் த.தியாகமூர்த்தி, தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பெ.கனகசபாபதி உட்பட மற்றும் விருந்தினர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (எ-17)

## ஆனைக்கோட்டை உப தபாலகத்தை சீரமைப்பதற்கு நடவடிக்கை

வலி.தென்மேற்கு, ஜூன் 13

"நிதிமற்றும்கொள்கைஉருவாக்கல்" குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கமைய வலி.தென்மேற்குபிரதேசசபையின்கீழ்இயங்கும் ஆனைக் கோட்டையிலுள்ள உபஅலுவலகம்சபைநிதியிலிருந்து 18லட்சம்ரூபாசெலவில்சீரமைக்கப்படவுள்ளது.

தவிசாளர் அ.ஜெபநேசன்தலைமையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் பழைமை வாய்ந்த நிலையிலுள்ள உபஅலுவலகம்திருத்தி அமைக்கப்பட வேண்டிய அவசியம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

செயலர் கே.சற்குணராஜா இது தொடர்பாகத் தெரிவித்தபோது, "ஆனைக்கோட்டைகிராம உப அலுவலகத்தின் கூரை மிகவும்மோசமாகப் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றமையால் அதனை உடனடியாகப் சீரமைக்க வேண்டிய தேவையும் அவசியமும் ஏற்பட்டுள்ளது.

அங்குகடமையாற்றும்அலுவலர்கள் பல சிரமங்களை எதிர்கொள்வதாலும் ஆவணங்களைப் பாதுகாக்க வேண்டியமையாலும் அலுவலகத்தைப் சீரமைக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

அத்துடன்சேவைபெறுவோர்அமர்வதற்கானவசதியைஏற்படுத்தவேண்டிய தேவையும் முக்கியமாகக் காணப்படுவதால் புதிய கட்டடம் அமைக்கும் வரை காத்திராமல் சீரமைப்பு வேலைகளை ஆரம்பிக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

இவருடைய கருத்தை அங்கு சமூகமளித்திருந்த உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டமையையடுத்து சீரமைப்புவேலைகள்விரைவில்ஆரம்பிக்கப்படவுள்ளன. (எ-115)

## மரக்கறி விலைகளில் சடுதியான அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்ப்பாண குடாநாட்டில் மரக்கறி வகைகளில் விலைகள்சடுதியாகஅதிகரித்துள்ளன. தற்போது சகல மரக்கறி வகைகளுமே கிலோ நூறு ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றன.

தற்போதையகடுமையானவறட்சிமற்றும்வெளி மாவட்டங்களில் இருந்து போதியளவு மரக்கறி வகைகள் குடாநாட்டுக்கு வந்து சேராமையுமே மரக்கறி விலை ஏற்றத்துக்கு காரணம் என்று சந்தை வியாபாரிகள் தெரிவித்தனர். அதைவிட குடாநாட்டில் மழை வீழ்ச்சி இன்மையாலும் மற்றும்கடுமையானவறட்சியின்தாக்கத்தாலும் மரக்கறி பயிர்கள் பாதிக்கப்பட்டு காய்க்கும் தன்மையை இழந்திருப்பதும் இந்த மரக்கறி விலை அதிகரிப்புக்கு மற்றுமொரு காரணம் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

தற்போது ஆலய உற்சவங்கள் மற்றும் பொது நிகழ்வுகள் திருமண வைபவங்கள் என்பன இடம்பெறும் மாதகாலம் ஆகையால் மரக்கறி பாவனையும் அதிகரித்துள்ளன.

ஆடி அமாவாசை விரதம் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நல்லூர் கந்த சுவாமி கோயில் திருவிழா என்பன ஆரம்பமாகும் காலப்பகுதியில் இந்த மரக்கறி வகைகளின் விலை அதிகரிப்பு தொடர்ந்து இருக்கலாம் எனவும்தெரிவிக்கப்பட்டது. (எ-17)





## கற்றல் உபகரணங்களும் காலணிகளும் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 13

வயாவிளான் மத்திய கல்லூரி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் காலணிகளும் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலையின் பழைய மாணவனும் தற்போது லண்டனில் வசித்து வருபவருமான கோபால் சுரேஷ்இந்தஉதவிகளைவழங்கியுள்ளார்என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ)

## பரந்தனில் இருவர் கைது



கிளிநொச்சி, ஜூன் 13
பரந்தன் பகுதியில் கஞ்சா மற்றும் குடு என்பனவற்றை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்டப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கிடைத்த தகவலுக்கு அமைய பரந்தன் பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் 40 கிராம் கஞ்சா மீட்கப்பட்டது. விவபுரம் பகுதியில் கைதான மற்றவரிடம் 0.40 மில்லிக் கிராம் குடு இருந்தது என்று பொலிஸார் குற்றஞ்சாட்டினர். இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்.

இருவரும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-6)

## மதுபோதையில் சாரத்தியம்; மூவருக்கு தண்டம்

சாவகச்சேரி, ஜூன் 13
மதுபோதையில் சாரதி அனும்திப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய மூன்று பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 27 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் மூவருக்கு எதிராகத் தாக்கல் செய்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. மது போதையில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியவர்களுக்கு முறையே 9 ஆயிரத்து 500 ரூபா, 10 ஆயிரத்து 500 ரூபா தண்டமும் மது போதையில் வாகனம் செலுத்திய ஒருவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா தண்டமும் சாரதிய அனுமதிப் பத்திரத்தை 3 மாதங்கள் நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

இதேவேளை, சாரதிய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய நபருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (எ-9,159)

### போரால் பாதிக்கப்பட்ட

## பெண்களுக்கு தொழிற்பயிற்சி நிறுவனம் திறப்பு



கிளிநொச்சி, ஜூன் 13
போரால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான இலவச தொழிற்பயிற்சியை வழங்கவென புதியவாழ்வு நிறுவனம் ஒன்று நேற்று திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி, பாரதிபுரம் பகுதியில் அமைக்கப்பட்ட இந்த நிறுவனத்தை வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் திறந்து வைத்தார்.

நிகழ்வில் உரையாற்றிய சி.வி. விக்னேஸ்வரன், முப்பது வருடமாக எமது நாட்டில் இடம்பெற்ற தொடர் யுத்தம் காரணமாக சாதாரண மக்களின் வாழ்க்கை தரத்தில் மிகப்பெரிய தாக்கம் ஏற்பட்டது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பொருளாதார ரீதியாக முன்னேற்றம் கண்டுள்ள போதிலும் வடக்கு- கிழக்கு பகுதிகளில் வாழும் சாதாரண மக்கள் எதுவித உதவிகளோ, அனுசரணைகளோ அற்ற நிலையில் மூன்று வேளை உணவுக்குக்கூட சிரமப்படுவதை நாம் பல சந்தர்ப்பங்களில் அவதானிக்கின்றோம் எனத் தெரிவித்தார். (ஐ-35)



## ராஜிதவுக்கு எதிர்ப்பு தெரிவித்து மன்னாரில் நேற்று ஆர்ப்பாட்டம்

*கொழும்பு, ஜூன் 13*
*கொழும்பு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக மன்னார் மருத்துவமனைகளில் கடமையாற்றும் மருத்துவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.*

பல கோரிக்கைகளை முன்வைத்து மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனைக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

சுமார் 30 நிமிடங்கள் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் பல்வேறு வசனங்கள் எழுதப் பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மருத்துவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்குக்கு மருத்துவர்கள் வேண்டாமா? நீரிழிவு நோய்க்குத் தரம் குறைந்த மருந்துகள் வேண்டாம், புற்று நோய்க்கு தரம் குறைந்த மருந்துகள் வேண்டாம், எமக்கு எல்லாம் நாறல் மருந்து ராஜிதவுக்கு சிங்கப்பூரில் சிகிச்சையா? ராஜித வேண்டாம் என்பன போன்ற வாசகங்கள் பாதாகைகளில் காணப்பட்டன. (எ-56)

## வருடாந்த செய்கை ஏக்கர் வரி செலுத்தாதோர் செலுத்தவும்

கிளிநொச்சி, ஜூன் 13
கிளிநொச்சி கமநல அபிவிருத்தித் திணைக்களங்களின் அதிகார எல்லைக்குள் வருடாந்த ஏக்கர் வரி மார்ச் 31ஆம் திகதிக்கு முன் அறவிடப்பட வேண்டும் என்றபோதும் பலர் இதுவரை அறவிடவில்லை. எனவே எதிர்வரும் ஜூன் 20ஆம் திகதிக்கு முன்னர் அவர்களிடம் வரி அறவிடப்படவேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் நிலுவை ஏக்கர் வரியை அறவிடும் வாரம் என்னும் பெயரில் நிலுவை ஏக்கர் வரி அறவிடும் செயற்பாடு கடந்த 10ஆம் திகதி தொடக்கம் எதிர் வரும் 17 ஆம் திகதி வரை நாடுமுழுவதும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை ஏக்கர் வரி செலுத்தாதுள்ள விவசாயிகள் தமது அனைத்து கமத்தொழில் காணிகளுக்குமான ஏக்கர் வரி நிலுவைகளை எதிர்வரும் ஜூன் 20ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாக கமநல சேவை நிலையங்களிலோ அல்லது கமக்கார அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்படும் இடங்களிலோ செலுத்தி செல்லுபடியாகும் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளும்படியும் ஏக்கர் வரி செலுத்தாத காணிகளின் உரித்துடையோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். நடவடிக்கை எடுத்தால் திணைக்களத்தால் வழங்கப்படும் உள்ளீடுகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படும் என்றும் கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் வே. ஆயகுலன் தெரிவித்துள்ளார். அத்தோடு கிளிநொச்சி மாவட்ட சகல கமநல சேவை நிலையப் பிரிவிலும் வயற்காணி பதிவேடு தயாரிக்கும் பணி இடம்பெற்று வருவதால் இதுவரை தமது காணிகளைப் பதிவு செய்யாத காணிகளுக்கு உரித்துடையோர் தமது காணிகளை உடனடியாகப் பதிவு செய்து அதற்கான ஏக்கர் வரியைச் செலுத்தி முடிக்குமாறும் கேட்டுள்ளார். (த-6)



## கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 13
போரால் தாய், தந்தையரை இழந்து பொருளாதார நிலையில் பின்தங்கிய மாணவர்கள் 35 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாங்குளம் பெரிய புளியங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் 15 பேருக்கும், புலுமச்சிநாதகுளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் 10 பேருக்கும் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. வட்டுஇந்து வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியாவைச் சேர்ந்த திருமதி தங்கரத்தினம் பாலச்சந்திரன் தனது 75ஆவது பிறந்த நாளை முன்னிட்டு இந்த உதவிகளை வழங்கி வைத்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-222)

## 10 வர்த்தகர்களுக்கு நீதிமன்றம் தண்டம்

தலைமன்னார், ஜூன் 13
மன்னார், அடம்பன், பேசாலை ஆகிய பகுதிகளிலுள்ள கடைகளில் பொருள்களில் அளவீடுகள் இன்றி, காலாவதியான பொருள்களை விற்றமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களில் 11 வர்த்தகர்கள் மீது பாவனையாளர் அதிகார சபையின் மன்னார் அதிகாரிகள் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர்.

அவர்களில் 10 பேர் தம் மீதான குற்றங்களை ஏற்றுக்கொண்டனர். அதனால் அவர்களுக்குத் தண்டம் விதிக்கப்பட்டது.

அதன்படி ஏலக்காய் பொதியிடல் பிரச்சினை காரணமாக வர்த்தகருக்கு 6ஆயிரம் ரூபா,

காலாவதியான கொலன் காட்சிப்படுத்தியவருக்கு 4ஆயிரம் ரூபா, றோல்ஸ் உணவுப் பண்டத்தின் விலையை காட்சிப் படுத்தாமைக்கு ஆயிரத்து 500 ரூபா, கோதுமை மா கட்டுப் பாட்டு விலையை விட அதிக விலைக்கு விற்றமைக்கு இருவருக்கு தலா 3ஆயிரம், ரூபா, நல்லெண்ண விலை, காலாவதித் திகதி போன்றவற்றைக் காட்சிப்படுத்தாமைக்கு 3 ஆயிரம் ரூபாவும்

காலாவதியான வாசனைத் திரவியம் காட்சிப்படுத்தியமை, காலாவதியான கோர்லிக்ஸ் விற்பனை செய்தமை, காலாவதியான இனிப்பு பண்டம் விற்பனை செய்தமை மற்றும் காலாவதியான இனிப்பு, அப்பளம் ஆகியவற்றை விற்பனை செய்த நான்கு நபர்களுக்கு தலா 4ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

ஒரு வழக்கில் சம்பந்தப்பட்ட வர்த்தகர் ஒருவருக்குப் பதிலாக வேறொருவர் மன்றில் முற்பட்டார். அதனால் உரியவரை மன்றில் முற்படுமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (த-60)

## கட்டுக்கரைக் குளத்தை அளவிட நிதியில்லை

### *நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் தெரிவிக்கிறார்*

மன்னார், ஜூன் 13
மன்னார் கட்டுக்கரைக் குளத்தின் எல்லையை அளவீடு செய்வதற்கு போதியளவு நிதி இல்லை என்று முருங்கன் நீர்ப்பாசனத் திணைக்களப்பொறியியலாளர் யதிஸ் தெரிவித்தார்.

கட்டுக்கரைக் குளத்தை அண்மித்தப் பகுதிகள் மன்னார் மாவட்ட கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்களாக ஒதுக்கப்பட்டிருந்தன. ஆனால் அந்தப் பகுதியில் ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான காடுகள் அழிக்கப்பட்டு தனிநபர்களால் கையகப்படுத்தும் செயற்பாடுகள் நடைபெற்று வருகிறன. கட்டுக்கரைப்பகுதி முருங்கன் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கும் உரித்துடையதாக இருக்கிறது.

இது சம்பந்தமாக முருங்கன் நீர்ப்பாசனத் திணைக்களத்தைத் தொடர்பு கொண்டு கேட்ட போதே பொறியியலாளர் நிதி இல்லை என்று தெரிவித்தார்.

கட்டுக்கரைக் குளத்தின் மொத்த நிலப்பரப்புகள், முருங்கன் நீர்ப்பாசனத் திணைக்களம் தவிர்ந்த சில நிலப்பரப்புகள், வனவிலங்கு மற்றும் வன இலாகாவினருக்கும் சொந்தமாக இருக்கிறது.

முருங்கன் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு உரித்தான நிலப்பரப்புகளை அளவீடு செய்வதற்கு நூறு மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி தேவைப்படும். அவ்வளவு பெருந்தொகைப் பணம் எம்மிடம் இல்லை.

நில அளவையின் பின்னர்தான் காடழிப்புச் செய்யப்பட்டதில் முருங்கன் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான நிலங்கள் காடழிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளனவா என்று அறிந்து கொள்ள முடியும்.

அவ்வாறு இருக்கும் பட்சத்தில் நிச்சயமாகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். கட்டுக்கரைக் காடழிப்பு விடயமாக அடுத்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்றார். (த-213)

# 12 மாதிரிக் கிராமங்களுக்கு மன்னாரில் அடிக்கல் நடல்






மன்னார், ஜீன் 13

மன்னார் பிரதேச சபைப் பிரிவுக்குட்பட்ட மன்னார் தொடக்கம் தலைமன்னார் வரையில் 12 மாதிரிக் கிராம வீட்டுத்திட்டத்துக்கு அடிக்கல்நடப்பட்டது. இந்தநிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் அமைக்கப்படவுள்ள 12 மாதிரிக் கிராமங்களில் 322 வீடுகளுக்கு அடிக்கல் நடப்பட்டது.

மன்னார் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முகாமையாளர் செல்வராஜ் குலாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மன்னார் பிரதேச சபை தவிசாளர் எம்.முஜாகீர் மற்றும் உறுப்பினர்கள், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-56)



## காட்டுவிநாயகர் ஆலயத்துக்கு புதிய மூலஸ்தானம் அமைப்பு

முல்லைத்தீவு, ஜீன் 13

வரலாற்று சிறப்பு மிக்க முல்லைத்தீவு முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலய மூலஸ்தானத்துக்கு நேற்று அடிக்கல் நடப்பட்டது.

ஆலய நிர்வாகத்தின் தலைவரும் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதியுமான க.பரஞ்சோதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்கள், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட கிராம·மக்கள் பலரும் கலந்துகொண்டனர். (ஜ-ரி3)



## பொக்கணை பகுதியில் தமிழன் குண்டு மீட்பு!

முல்லைத்தீவு, ஜீன் 13

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொக்கணைப்பகுதியில் விடுதலைப்புலிகளின் இரு தமிழன் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

பொக்கணைப்பகுதிகுதியில் காணியொன்று நேற்று முன்தினம் துப்பரவு செய்யப்பட்டபோது, புதையுண்ட நிலையில் இரண்டு தமிழன் குண்டுகள்இனங் காணப்பட்டன. சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுக் குண்டுகள் மீட்கப்

## பேசாலை மருத்துவமனையில் ஆரம்ப சுகாதார வலுவூட்டல் வேலைத்திட்டம் ஆரம்பிப்பு

மன்னார், ஜீன் 13

மன்னார், பேசாலைப் பிரதேச மருத்துவமனையில் ஆரம்ப சுகாதார வலுவூட்டல் திட்டத்தின் ஆரம்ப வேலைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பித்துவைக்கப்பட்டன. ஆரம்ப சுகாதார வலுவூட்டல் திட்டத்துக்காக மன்னார் மாவட்டத்தில் பேசாலை மற்றும் அடம்பன் மருத்துவமனைகள் தெரிவாகியுள்ளன.

இந்த நிலையில் பேசாலை பிரதேச மருத்துவமனையில் 35 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் வேலைத்திட்டம் ஆரம்பித்துவைக்கப்பட்டது. குறித்த நிகழ்வு மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரீ.காண்டீபன் தலைமையில் இடம்பெற்றது. மன்னார்மாவட்டச்செயலர் சி.ஏ.மோகன்றாஸ், மன்னார் உதவிப் பிரதேச செயலர் சிவசம்பு கனகாம்பிகை, மாகாண சுகாதார அதிகாரிகள் மற்றும் மருத்துவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-56)





போக்குவரத்தில் சிரமத்தை எதிர்கொள்ளும் முல்லைத்தீவு, தண்ணீரூற்று இந்து தமிழ் கலவன் பாடசாலை மாணவன் ஒருவருக்கு ஈருருளி வழங்கப்பட்டது. 'கல்விக்கு கரம் கொடுப்போம்' எனும் திட்டத்தின் கீழ் லண்டனில் வசிக்கும் ஆதிரனின் பிறந்த நாளை முன்னிட்டு அண்மையில் இந்த உதவி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-222)

## பயனாளிகளுக்கு உரித்துப் படிவம்

வவுனியா, ஜீன் 13

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சமுர்த்திப் பயனாளிகளுக்கு உரித்துப் படிவம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வு செட்டிகுளம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலர் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் திருமதி பத்மரஞ்சனி, பிரதேச சபை உப தவி சாளர் திருமதி. சிவாஜினி, பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச செயலக அலுவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-222)

## நல்லிணக்க கலந்துரையாடல்

மன்னார், ஜீன் 13

இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் தொடர்பான கலந்துரையாடல் மன்னாரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

நாட்டில் தற்போது நிலவுகின்ற அசாதாரண சூழ்நிலையில் இராணுவ சோதனைக் கெடுபிடிகள், புதிதாக காவலரண்கள் அமைப்பது போன்ற செயற்பாடுகளைப் பார்க்கின்றபோது இராணுவம் மீண்டும் மக்களை அச்சத்துடன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க நினைக்கின்றது என்ற கருத்துக்கள் இந்தக் கலந்துரையாடலில் பரிமாறப்பட்டதாக மாவட்ட மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் ஏ.பெனடிட் தெரிவித்தார்.

கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டு இயக்கம் நேசக்கரம் பிரஜைகள் குழு, மன்னார் நகர சபை உப தவிசாளர் மற்றும் மன்னார் மாதர் ஒன்றிய செயற்பாட்டாளர்கள் மற்றும் பொது அமைப்புகளும் மதகுருமார்களும் கலந்து கொண்டனர். (ஜ-213)



## பெரும்போகத்துக்கு உரம் வழங்குமாறு கோரிக்கை

### பக்கச்சார்பின்றி நடக்குமாறும் வலியுறுத்து

மன்னார், ஜீன்13

மன்னார் கனகன்குளத்தின் கீழானவயல்நிலத்தில்கடந்த காலபோகம் பிந்தி விதைத்ததாகக்கூறி 26 ஏக்கர் வயல் நிலமும் அழிவடைந்துவிட்டது. 2019/2020காலபோகச் செய்கையில் தமக்கு உரம் விநியோகிக்க வேண்டும். அதற்கு மாவட்டச் செயலக மும்கமநலசேவைத்திணைக்களமும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயி திருமதி. வரதலட்சுமி சித்திவிநாயகம் கோரிக்கை விடுத்தார். குறித்த விடயம் தொடர்பில்அவர்மேலும்தெரிவித்ததாவது;

மன்னார் மாவட்டத்தில் கனகன்குளத்தின்கீழ்2018/2019 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கை மேற்கொண்டிருந்தோம். காலம் பிந்தியவிதைப்பாகஅமைந்த காரணத்தால்குளத்துத்தண்ணீரை இரண்டு தடவைகள் அல்லது குறைந்தபட்சம் ஒரு தடவையாவதுதண்ணீரைத் திறந்து தருமாறு மாவட்டச் செயலரிடம் பல தடவை கோரிக்கைவிடுத்தோம்.

கடந்த பெப்ரவரி மாத இறுதியில் இவ்வாறு கோரிக்கை விடுத்தஎமக்குமாவட்டச்செயலர் சாதகமாகவே பதிலளித்து 26ஏக்கர்வயலையும்காப்பாற்றும் நோக்கில் தண்ணீரைத் திறக்க இணக்கம் காட்டினார். ஆனால்விவசாயக்குழுவினர் வேண்டுமென்றே தண்ணீரைத் தடுக்கின்றனர். அதற்கு அவர்கள் கூறும் காரணம் புலவுநிலம்என்று. (புலவுநிலம் என்பதுநீர்ப்பாசனத்திணைக்களத்தி னரின் வாய்க்காலின் பகுதிகளில் வாய்க்கால் தேவை கருதி ஒதுக்கப்படும் நிலம்)இந்தப் பகுதியில் நாம் 60 ஆண்டுகளாக விதைப்பு மேற்கொள்கின்ற போதும் இப்போது மட்டும் புலவு நிலம் என்று என்ன அடிப்படையில் அவர்கள் கூறுகின்றார்கள்.

இதேவேளை, கடந்த ஆண்டு வரை எமக்கு வழங்கப்பட்ட உரமானியம்மற்றும்இலவச காப்புறுதிகளைக்கூட நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர்முழுமையாகத்தடுத்துவிட்டார். எமதுநிலம் புலவுக்காணிஎனக்கூறுபவர்களின் கூற்றை நம்பி அவ்வாறுசெய்துவிட்டார்.

அதன் பின்பு எமது வேண்டுகோளின் பெயரில் மேலதிக மாவட்டச்செயலர் உடனடியாகத்தண்ணீரைத்திறக்குமாறு நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குக் கடிதம் தந்தார். அதனைக்கொண்டுபொறியியலாளர் ஒரு தடவை தண்ணீர் வழங்கினார். இருப்பினும் இரண்டாவது தடவை தண்ணீர் வழங்கவில்லை. உரமும் வழங்கவில்லை. வயல் முழுமையாக அழிவடைந்தது. குறித்த விடயம் தொடர்பில்மாவட்டச்செயலர், கமநல உதவிஆணையாளர்மற்றும் நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள்இந்தமுறைமுன்கூட்டியே எமக்கான தண்ணீர் மற்றும் உர மானியத்தை வழங்க வேண்டும்-என்றார். (து105)

# அதிகாரமுள்ள வேலைகளைக்கூட விரைவில் செய்ய முடியாதது ஏன்?

## உள்ளூராட்சி சபைகளிடம் ஆர்வலர்கள் கேள்வி

உள்ளூராட்சி சபைகள் தமக்குரிய அதிகாரங்களுக்கு உட்பட்ட வேலைகளை விரைவாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியாதா என்று கேள்வி எழுப்பும் சமூக ஆர்வலர்கள், செய்யக்கூடிய சகல பணிகளையும் விரைவில் செய்யுமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

உள்ளூராட்சி தேர்தல் கடந்த வருடம் நடைபெற்றது. தற்போது சபைகள் மக்கள் பிரதிநிகளுடன் செயற்பட ஆரம்பித்துள்ளன. மாதாந்தக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்ற பட்டு வருகின்றன. அவற்றில் பெரும்பாலானவை சபை அதிகாரங்களுக்கு அப்பாற் பட்டவையாகக் காணப்பட்டாலும் மக்களுக்குத் தேவையானவையாகக் காணப்படுகின்றன. அவற்றை வேறு அலுவலகங்களுடன் இணைந்து செய்ய வேண்டிய தேவை உள்ளதால் தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டாலும் செயல் வடிவம் பெறுவதற்குக் கால தாமதமாகும். அதற்கு அனுமதிகள் மற்றும் நிதி மூலங்கள் பெறுவதில் சிக்கல் ஏற்படும். ஆனால் சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட வேலைகளை விரைவில் செய்து கொடுப்பதற்குச் சபையினர்அதிககாலம்தாழ்த்தக்கூடாது.

திண்மக் கழிவகற்றல், குடி தண்ணீர் வளங்கல், கால் நடைகளைக் கட்டுப் படுத்தல், சந்தைகளை முகாமை செய்தல், வீதிகளைச் சீரமைத்தல், பொது அமைப்புகளை வலுப்படுத்தல் போன்ற பணிகள் உள்ளூராட்சி சபைகளின் ஆளுகைக்கு உட்பட்ட விடயங்களாக உள்ளன. இந்த விடயங்கள் சார்ந்த முன்னேற்றகரமான செயற்பாடுகளை மேற்கொள்வதற்குக் காலம் தாழ்த்தாமல் அதனைச் செய்ய வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் தீர்மானங்கள் அமைய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

## வான் படைக்கு புதிய வானூர்திகள்

### தலைமை அமைச்சர் உறுதி



கொழும்பு, ஜூன் 13

இலங்கை வானூர்திப் படைக்கு புதிதாக போர் வானூர்திகளும், பயிற்சி வானூர்திகளும் பெற்றுத் தரப்படும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

வானூர்திப் படைத் தளபதியாக அண்மையில் பதவியேற்ற எயர் மார்ஷல் சுமங்கல டயஸ் நேற்று முன்தினம் காலை அலரி மாளிகையில் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவை மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

இதன்போதே, இலங்கை வானூர்திப் படைக்குத் தேவையான போர் விமானங்களும் பயிற்சி விமானங்களும் பெற்றுத் தரப்படும் என்று ரணில் விக்ரமசிங்க வாக்குறுதி அளித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் தலைமை அமைச்சரின் பாதுகாப்பு இணைப்பாளர் மேஜர் ஜெனரல் சுமித் பாலசூரியவும் கலந்து கொண்டார். (எ)

### இல்மனைற் அகழ்வதை நிறுத்த கோரி போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

மட்டக்களப்பு வாகரை கதிரவெளியில் நடைபெறும் இல்மனைற் அகழ்வுக்கு எதிராக மக்கள் போராட்டம் ஒன்றை நேற்று நடத்தினர். இல்மனைற் அகழ்வதை நிறுத்த வேண்டும் என்று கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த போராட்டத்தில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். கடற்கரையில் 100 மீற்றர் ஆழத்துக்கு இல்மனைற் அகழப்பட இருப்பதால் கடல்நீர் ஊருக்குள் புகும் அபாயம் உள்ளது என்றும், இதனால் வாகரைப் பிரதேசம் முழுவதும் அழிவடையும் அச்சம் இருப்பதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (எ-7)

## விதிகளை மீறிச் செயற்பட்ட வர்த்தகர்களுக்குத் தண்டம்

மல்லாவி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சுகாதாரப் பகுதியினரால் நடத்தப்பட்ட திடீர் சோதனையின்போது கேடு விளைவிக்கும் வகையிலான உணவுப் பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த 4 வர்த்தர்களுக்கு நீதிமன்றில் 78 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்ப ட்டது. இரு வர்த்தக நிலையங்களுக்கு சீல் வைக்குமாறும் துணுக்காய் சுற்றுலா நீதிமன்றில் நேற்று உத்தரவிட்டது. காலாவதியான மிக்ஸர் பைக்கற்றுக்கள் மற்றும் தேங்காய் பால் பவுடர் பைக்கற்றுக்கள் வைத்திருந்த வர்த்தகருக்கு 15 ஆயிரம் ரூபாவும், உற்பத்திப் பொருளின் சுட்டுத்துண் டில் அச்சிடப்பட்டிருந்த உற்பத்தித் திகதி மற்றும் காலாவதித் திகதி போன்றவற்றை உருமாற்றி மற்றும் காலாவதி திகதி போன்றவற்றுடன் உணவுப் பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டு வர்த்தக நிலையத்தை மூடவும் உத்தரவிடப்பட்டது.

காலாவதி திகதி கடந்த உணவுப்பொருள்கள்மற்றும்சுட்டுத்துண்டு ஒழுங்கு விதியை மீறியதுடன்களஞ்சிய அறை சுகாதாரத்துக்கு கேடான நிலையில் காணப்பட்டமைக்காக 23 ஆயிரம் ரூபா தண்டமும் வர்த்தக நிலையத்தை மூடவும் உத்தர விடப்பட்டது. 80 சதவீத உடல்நல எச்சரிக்கை இல்லாத சுருட்டுப் பொதி விற்றவருக்க20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (எ-9)



## பயிர் பாதுகாப்பு தொடர்பான பயிற்சி

வவுனியா, ஜூன் 13

விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு தொடர்பான பயிற்சி வவுனியா முருகனூர் விவசாய பண்ணை பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது

இந்த பயிற்சிக்கு வெங்கல செட்டிக்குளம் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பாவற்குளம் எருக்கலங்கல் கிராம அலுவலகர் பிரிவில் இருந்து 40 விவசாயிகள் கலந்து கொண்டனர் விவசாயிகளால் தற்போது பயிரிடப்பட்டுள்ள பயிர்களில் காணப்படும் நோய்த் தாக்கம் தொடர்பில் கேட்டறிந்து அதற்கான தீர்வுகளும் வழங்கப்பட்டன.

குறிப்பாக பப்பாசி, மிளகாய், வெங்காயம், நிலக்கடலை போன்ற பயிர்களில் ஏற்படும் பீடை தாக்கத்துக்கு தீர்வும் வழங்கப்பட்டது

அத்துடன் சேதனை பீடை நாசினி மற்றும் சேதனை பசளை பாவனை போன்றன தயாரிப்பு தொடர்பாகவும் அறிவுறுத்தப்பட்டது

இந்தப் பயிற்சியை வவுனியா பிரதி மாகாண விவசாய பணியாளர் அலுவலகத்தை சேர்ந்த திருமதி. ஜெகதீஸ்வரி சூரியகுமார், உதவி விவசாய பணிப்பாளர் மற்றும் பாவற்குளம் விவசாய போதனாசிரியர் அபிரன் ஆகியோர் வழங்கியிருந்தனர். (ஜ-222)



## சிறுவர் பூங்கா திறப்பு

யாழ்ப்பாணம் கார்மேல் முன்பள்ளியில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. பூங்காவை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினருமான சொலமன் சூ சிறில் திறந்துவைத்தார். இதனையடுத்து மாணவர்கள் விளையாட்டு நிகழ்வில் ஈடுபட்டனர். கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவால் 5 லட்சம் ரூபா பூங்கா அமைப்பதற்கு வழங்கப்பட்டது. (ஜ)

### கத்தி வெட்டி காயம்

கொடிகாமம், ஜூன் 13

நொங்கு வெட்டிய கத்தி சறுக்கி காலில் காயத்தை ஏற்படுத்தியது.

காயமடைந்த சிறுவன் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று நடந்துள்ளது. சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த இ.சிறிகாந்தன் வயது -17 என்பவரே காயமடைந்தவராவார். (எ-159)



## மாணவிக்கு ஈருருளி

சாவகச்சேரி, ஜூன் 13

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி பிரிவால் கடந்த மாதம் முன்னெடுக்கப்பட்ட போதைப் பொருள்கள் பாவனை தடுப்பு வாரத்தில் சேகரிக்கப்பட்ட நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட ஈருருளி சமுர்த்தி பயனாளி குடும்பத்தைச் சேர்ந்த மாணவிக்கு வழங்கப்பட்டது.

பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் உதவிப்பிரதேச செயலர் திருமதி வி.கௌசிகன் ஈருருளியை மாணவியிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் பிரதேச சமுர்த்தி அலகின் தலைமைப்பீட முகாமையாளர் இ.அன்ரனி கோயிற்குடியிருப்பு பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் திருமதி ராஜினி ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (எ-9)

### புதிய வகுப்புகள் ஆரம்பம்

கொக்குவில் இந்துக் கல்லூரியில் 2021 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான புதிய வகுப்புகள் அனைத்தும் நாளை ஆரம்பமாகவுள்ளன. அன்றைய தினம் அனுமதி பெற்ற மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அதிபர் ஞானசம்மந்தன் அறிவித்துள்ளார். (ஜ)

## வவுனியா மின்சார சபையினரால் எல்.ஈ.டி. மின்குமிழ் விநியோகம்

### '2 எல் .ஈ.டி பல்ப்ஸ்' என்றிருந்தால் பெறலாம்



வவுனியா, ஜூன் 13

வவுனியா பிரதேச மின்சார சபையினர் எல்.ஈ.டி மின்குமிழ்களை விநியோகிக்கும் செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளனர் என்று பிரதேச தலைமை மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

மின் சக்தி கேள்வி முகாமைத்துவம் பற்றிய அரசதலைவர் செயலணியின் ஏற்பாட்டில், இலங்கை மின்சார சபை, வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார நிறுவனம், இலங்கை மின்மாற்றிகள் நிறுவனம், மற்றும் இலங்கை நிலைபெறுதல் வலு அதிகார சபை என்பவற்றின் அனுசரணையுடன் இவை வழங்கப்படுகின்றன.

10 ஆயிரம் மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட பாவனைக்காலம் கொண்ட 85 சதவீதம் மின்சாரத்தைச் சேமிக்கக் கூடிய, இரசாயன சேர்க்கை கொண்டிராத, சூழலுக்கு உகந்ததான, மின்சார சேமிப்பும், சக்தி வினைத்திறன் கொண்ட எல்.ஈ.டி மின்குமிழ்கள் வழங்கப்படுகின்றன.

இவற்றை மின் நுகர்வோர், மின்சார சபையில் பெற்றுக்கொள்ள முடியும். மின்பட்டியலின் மேற்பகுதியில் '2 எல்.ஈ.டி பல்ப்ஸ்' என குறிப்பிடப்பட்டிருப்பின் உங்கள் அடையாள அட்டையுடன் 2019 ஆம் ஆண்டு மே மாதத்துக்குரிய உங்களின் மின் பட்டியலையும் எடுத்துச் சென்று எதிர்வரும் 12, 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் முற்பகல் 9 மணிதொடக்கம் மாலை 5 மணிவரையிலும் வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள பிரதேச மின்சார சபை அலுவலகம், மடு பிரதேச மடு நுகர்வோர் சேவை நிலையம் என்பவற்றில் தங்களுக்குரிய எல்.ஈ.டி மின் குமிழ்களைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் மாதாந்தம் 30 யுனிற் அளவுக்குள் பாவனை இருத்தல் வெண்டும் என்று வவுனியா பிரதேச மின்சார சபை அலுவலகம் தெரிவித்தது. இந்த மின்குமிழ்கள் இலவசமாக வழங்கப்படுகிறன என்றும் தெரிவித்தனர். (த-222)

# முஸ்லிம்களை ஆபத்தானவர்களாக காண்பிக்கும் போக்கை நிறுத்துங்கள்

## இந்தியாவில் ஹக்கீம் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஜூன் 13

இலங்கையில் முஸ்லிம்களை ஆபத்தானவர்களாகக் காண்பிக்கின்ற போக்கு முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நகர திட்டமிடல், தண்ணீர் விநியோக மற்றும் உயர்கல்வி முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியிருக்கிறார்.



ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நிலைவரங்களுக்கு மத்தியில் அமைச்சரவையின் ஒரு முஸ்லிம் உறுப்பினரையும், இரு மாகாணங்களின் ஆளுநர்களாகப் பணியாற்றிய முஸ்லிம் அரசியல்வாதிகளையும் பதவி நீக்க வேண்டுமென்று சிங்கள பௌத்த கடும்போக்காளர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். அதனால் தோன்றிய சர்ச்சையால் மற்றைய எட்டு அமைச்சர்களுடன் சேர்ந்து அண்மையில் பதவி விலகிய ஹக்கீம், சென்னை 'த இந்து' பத்திரிகை அலுவலகத்தில் மூத்த பத்திரிகையாளர்களுடன் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் நடத்தினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

குண்டுத்தாக்குதல்களுக்குப் பின்னர் முஸ்லிம் சமூகம் மிகவும் அக்கறையுடன் சுயபரிசோதனை ஒன்றை நடத்தும் மனநிலையிலிருக்கிறது. குண்டுத்தாக்குதல்களின் சூத்திரதாரி என்று கூறப்படும் ஸஹ்ரான் ஹாசீமின் தலைமையிலான குழுவுக்கு இலங்கை முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் அறவே அனுதாபம் கிடையாது. அந்தக் குழு சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு பல வருடங்கள் கடந்துவிட்டன.

இருந்தாலும் முஸ்லிம்கள், அவர்கள் அரசியல்வாதிகளாக இருந்தாலென்ன, பொது நிறுவனங்கள் சார்ந்தவர்களாக இருந்தாலென்ன குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காகிக் கொண்டிருக்கின்றார்கள். அத்தகையோருக்கு எதிராக குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட முடியாது போகும் பட்சத்தில் வேறொரு சாக்குப்போக்கில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுகின்றனர். இதுவே இன்றைய நிலை என்று ஹக்கீம் கவலை தெரிவித்தார்.

வெளிநாட்டவர்கள் மீதும், சிறுபான்மை இனத்தவர் மீதும் பீதி கொண்டுள்ள பிரகிருதிகளின் அவதூறான குற்றச்சாட்டுக்களைத் தடுத்து நிறுத்தும் நோக்கிலேயே இரு ஆளுநர்களும், ஒன்பது அமைச்சர்களும் கூண்டோடு பதவி விலகினோம் என்றும் அவர் மேலும் கூறினார். (த)

# சிசிரவின் பதவி விலகலில் பல சந்தேகங்கள் உள்ளன

## மனுஷ எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 13

தேசிய புலனாய்வு பிரிவின் தலைவர் சிசிர மெண்டிஸ் பதவி விலகியமை தொடர்பாகப் பல சந்தேகங்கள் உள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் செல்வாக்கு காரணமாக அரச புலனாய்வுத் திணைக்களத்தின் தலைவர் பதவி விலகியுள்ளாரா என்ற சந்தேகம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. உளவுத்துறையின் குறைபாடுகள் அல்லது பயங்கரவாத தாக்குதல்களைத் தடுக்காதமை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் காரணமாக பதவி விலகுகின்றேன் என்று அவர் அறிவித்திருந்தால் அது நியாயமானதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமாக அமைந்திருந்திருக்கும்.

அவ்வாறு நடக்கவில்லை. அதனால் இவரது பதவி வீலகலில் ஒருவரது தலையீடு அல்லது அரசியல் அழுத்தம் இருக்கின்றது என்று பெரும்பாலானவர்களிடம் தற்போது சந்தேகம் எழுந்துள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளால் உளவு துறை சுயாதீனமாக செயல்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. - என்றார். (எ)

# பல விடயங்களை அரசு மூடிமறைத்து விட்டது

## எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார்

முஸ்லிம் அமைச்சர்கள் பதவிவிலகியிருக்கின்றனர் எனினும், மக்களின் கவனம் பல விடயங்களிலிருந்து திசை திரும்பியுள்ளது. பல விடயங்கள் மூடி மறைக்கப்பட்டுள்ளன என்று எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி மோசடி மறக்கப்பட்டுள்ளது, கடன் நெருக்கடி மறக்கப்பட்டுள்ளது, உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் காயமடைந்த சிலர் இன்னமும் மருத்துவமனையில் உள்ளனர் அவர்களும் மறக்கப்பட்டுவிட்டனர்.

தீவிரவாதிகள் குறித்து தற்போது எவரும் பேசுவதில்லை, தேடுதல் நடவடிக்கைகள் முடிவடைந்து விட்டன. ஆயுதங்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளும் முடிவடைந்துவிட்டன என்று தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட பயங்கரவாத சந்தேகநபர்கள் தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து எவரும் பேசுவதில்லை. அரசு ஒரே கல்லில் நூற்றுக்கணக்கான பறவைகளைக் கொன்றுள்ளது. அரசியல் நோக்கங்களுக்காக முஸ்லிம் சமூகத்தை ஐக்கிய தேசியக் கட்சி சிறந்த முறையில் பயன்படுத்துகின்றது.

முஸ்லிம் சமூகத்திலுள்ள மிதவாதிகளினதும் தீவிரவாதப் போக்குடையவர்களினதும் வாக்குகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அவசியம். ஐக்கிய தேசியக் கட்சி தனக்கான வாக்கு எங்கிருந்து கிடைக்கின்றது என்று சிந்திப்பதில்லை. தாங்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தக்கூடிய அரசையே முஸ்லிம் தலைவர்கள் விரும்புகின்றார்கள் என்று மேலும் தெரிவித்தார். (த)

# தென்பகுதி எம்.பி. வடக்குக்கு நிதி ஒதுக்கீடு

சாவகச்சேரி ஜூன்.13

தென்பகுதி நாடாளுமன்ற உறுப்பினர் வடபகுதியில் உள்ள பிரதேச செயலகங்களுக்கு வரவுசெலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கியுள்ளார்.

நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த செயற்பாடு அமைந்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தால் அறிவிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் தென்மராட்சிப் பிரதேசத்தில் ஐந்து அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்ள 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

தென்பகுதி நாடாளுமன்ற உறுப்பினரான விமல் ரத்நாயக்காவே இந்த நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

கைதடி குருசாமி வித்தியாலயத்துக்கு பிளாஸ்ரிக் கதிரைகள் கொள்வனவு செய்தல், நாவற்குளி சான்றோர் சனசமூக நிலையம், கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகம் ஆகியவற்றுக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்தல்,கைதடி வடக்கு பொது நோக்கு மண்டபத்துக்கு தளபாடங்கள் கொள்வனவு செய்தல், எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலைக்கு தளபாடங்கள் கொள்வனவு செய்தல் ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் சா.த, உ.தரப் பரீட்சை எழுத நடவடிக்கை

## கல்வி அமைச்சர் அகிலவிராஜ் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 13



வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களின் பிள்ளைகளுக்கு க.பொ.த சாதாரண தர மற்றும் உயர்தர பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்படவுள்ளது என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

தூதரகங்களின் ஊடாக இதற்கான வழிகளைச் செய்யும் செயல்முறையொன்றை முன்னெடுக்குமாறு பரீட்சை திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன் என்றும் அவர் தெரிவித்தார்.

பரீட்சைத்திணைக்களத்தின் நவீனமயப்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ இணையளத்தளம் மற்றும் க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தர பரீட்சைச் சான்றிதழ்களை இணையத்தளத்தின் ஊடாக வழங்குவதனை ஆரம்பிக்கும் நிகழ்வு கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பரீட்சைத் திணைக்களத்தின் நவீனமயப்படுத்தலுக்காக 2017 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட புத்திஜீவிகள் குழுவின் பரிந்துரையின்படி இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

அதில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பரீட்சைகள் திணைக்களம் நம்பிக்கைக்குப் பாத்திரமான நிறுவனமாக இயங்க வேண்டும். அதற்காகப் பல்வேறு செயல்முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். பல்வேறு பிரத்தியேக தலையீடுகளை முடிந்தளவில் குறைத்துக்கொள்ள வேண்டும்.

நான் கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்று நான்கு வருடங்களில் பல்வேறு புரட்சிகரமான மாற்றங்களைக் கல்வித் துறையில் முன்னெடுத்துள்ளேன். அச்சமின்றித் தீர்மானங்கள் எடுத்த போது பல்வேறு தரப்பினரிடமிருந்தும் இடையூறுகளையும் விமர்சனங்களையும் சந்தித்தேன். அதனால்தான் டெப் கணிணி வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விட்டது. எனினும் எப்படியாவது மாணவர்களுக்கு டெப் கணிணி வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவேன்.

கல்வியை அடிப்படையாக கொண்டே எதிர்காலம் அமைய போகின்றது. இந்த நிலையில் புதிய பிரவேசங்களை இனங்கண்டு எல்லைகளைக் கடந்து செயற்பட்டால் எம்மால் பல மாற்றங்களைச் செய்ய முடியும். இதன்படி பரீட்சைச் சான்றிதழ்களை இணையளத்தளத்தின் ஊடாக வழங்கும் முறைமை புதிய வேலைத் திட்டம் - என்றார். (த)



# தெரிவுக்குழுவின் அதிகாரத்தை பகிரங்கப்படுத்துவது அவசியம்

## வாசுதேவ தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 13

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கும் நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் அதிகாரம் தொடர்பாக தெளிவுபடுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு வாரத்துக்கு முன்னதாக சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு கடிதம் அனுப்பியுள்ளேன். அது தொடர்பாக எந்தப் பதிலும் வரவில்லை. அதனால் மீண்டும் ஒரு கடிதம் அனுப்பியுள்ளேன்.

எந்தவொரு நாடாளுமன்ற தேர்வுக்குழுவாக இருந்தாலும் அது நாடாளுமன்றத்தின் அதிகாரம் தொடர்பாக விழிப்புடன் இருக்க வேண்டும்.

அதனூடாகவே மக்களின் பாதுகாப்புக்கும் தேசிய பாதுகாப்புக்கும் எந்தத் தீங்கும் ஏற்படாது என்பது உறுதிப்படுத்துகிறது. நாடாளுமன்றம் நாட்டுக்கு ஆபத்து இல்லாமல் புத்திசாலித்தன மாக செயல்பட வேண்டும். அண்மைய சம்பவங்களுக்கு உண்மையான பொறுப்பு யார் என்பதை கண்டுபிடிப்பதற்கு எதிராக, எவரும் நிற்க முடியாது. இருப்பினும் நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் முறையான பிரதிநித்துவத்தாலேயே அதை அடைய முடியும். ஆனால் தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவின் மூலம் நீதியை அடைய முடியாது. - என்றார். (எ)

# இலங்கையில் தீவிரவாதக் குழுக்கள் உருவாகக் காரணம் தமிழ்நாட்டு தீவிரவாத போதகர்களின் செல்வாக்குத்தான்!

*சிங்கப்பூர் பல்கலையின் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேராசிரியர் ரொகான் குணரட்ண இப்படித் தெரிவிக்கிறார்*

கொழும்பு, ஜூன் 13

இலங்கையில் தீவிரவாதக் குழுக்கள் உருவாவதற்கு தமிழ் நாட்டைச் சேர்ந்த தீவிரவாத போதகர்களின் செல்வாக்கு முக்கிய காரணம். தமிழ் நாட்டை சேர்ந்த தௌஹீத் ஜமாத்தின் நடவடிக்கைகள் இலங்கைக்கு மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன என்று சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேராசிரியர் ரொகான் குணரட்ண தெரிவித்துள்ளார்.

'இந்துஸ்தான் ரைம்ஸ்' ஊடகத்துக்கு வழங்கியுள்ள பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையிலிருந்துசிரியாவுக்கும் ஈரானுக்கும் சென்று ஐ.எஸ் அமைப்புடன் இணைந்து கொண்ட முதல் இலங்கைநபர் முகமட் நிலாம். அவர் 2015 இல் கொல்லப்பட்டார் , இவர் கண்டி திரித்துவக் கல்லூரியின் பழைய மாணவர்.

அவர் ஆறு மாதங்கள் மத்ரசாவில் கல்வி பயின்றார். ஆனால் பல்கலைக்கழக கல்வியை விரும்பி பாகிஸ்தானில் உள்ள பன்னாட்டு இஸ்லாமியக் கல்லூரியில் இணைந்து பட்டம் பெற்றார்.

இலங்கையில் தீவிரவாதக் குழுக்கள் உருவாவதற்குத் தமிழ் நாட்டைச்சேர்ந்த தீவிரவாதப் போதகர்களின் செல்வாக்கு முக்கிய காரணம்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த தௌஹீத் ஜமாத்தின் நடவடிக்கைகள் இலங்கைக்கு மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

ஐ.எஸ் அமைப்பு ஆசியாவில் தனது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதால் அரச தலைவர்களும் மதத் தலைவர்களும் மாதத்துக்கு ஒரு முறையாவது சந்தித்து நிலவரம் குறித்து ஆராயவேண்டும்.

ஐ.எஸ் அமைப்பின் கொள்கை பரவுவதன் காரணமாக எங்கள் தேசங்கள் அடுத்த ஐந்து வருடங்களில் அழிக்கப்பட்டுவிடும்.

முஸ்லிம்கள் எங்கள் பிராந்தியத்தில் பின்பற்றி வருகின்ற பாராம்பரிய இஸ்லாமிய கலாசாரத்துக்கு வெளிநாட்டுக் கொள்கைகளால் ஆபத்து என்பதை ஆராய்ச்சிகள் புலப்படுத்தியுள்ளன. இலங்கையின் ஐ.எஸ் அமைப்புக்கு பாகிஸ்தானுடன் தொடர்பில்லை. இவர்களுக்கு இந்தியாவுடனும் மத்திய கிழக்குடனும்தொடர்புகள் உள்ளன.

நிதி திரட்டுவது மற்றும் பயிற்சிகள் இலங்கையிலேயே இடம்பெற்றன. வனாத்தவில்லு, நுவரெலியா, அம்பாந்தோட்டை உட்பட பல பகுதிகளில் ஐ.எஸ் அமைப்பினர் முகாம்களை உருவாக்கினர். குண்டுதயாரிப்பதற்கான தொழில்நுட்பத்தை இவர்கள் இணையங்கள் மூலம் பெற்றனர். குண்டுகளை தயாரித்தவர் முகமட் ஹஸ்தூன். மிகத்திறமையான இளைஞரான இவரை ஸஹ்ரான் தீவிரவாத மயப்படுத்தி தன்னுடன் இணைத்துக்கொண்டார்.

இவரின் மனைவி புலத்சினி. இந்துப்பெண்ணான இவர் இஸ்லாமிய மதத்துக்கு மாறினார். இருவரும் ஒன்றாகப் படித்தவர்கள்.

தென்னாசியாவுக்கான ஐ.எஸ் அமைப்பின் கிளையான ஐ.எஸ் கொராசன் 2015 இல் உருவாக்கப்பட்டது. அந்த அமைப்பு இலங்கை உட்பட நான்கு நாடுகளில் தனது கிளையை ஏற்படுத்தியது. ஐ.எஸ் அமைப்பு பிராந்தியங்களில் தனது கிளையை ஏற்படுத்த விரும்புகின்றது. இந்தக் கிளைகள் பிராந்திய நாடுகளுக்குக் கடும் அச்சுறுத்தலை ஏற்படுத்தப்போகின்றன.

பிராந்திய அரசுகள் ஐ.எஸ் அமைப்பைச் சிறிதளவும் அனுமதிப்பதில்லை என்ற கொள்கையை உருவாக்குவதுடன் அந்த அமைப்பால் ஏற்படும் ஆபத்துகளை எதிர்கொள்வதற்காகக் கூட்டாகச் செயற்படவேண்டும்.

இலங்கையின் அமைப்பு இந்தக் கிளைகளுடன் சைபர் தொடர்புகளை கொண்டுள்ளது என்று ரொகான் குணரட்ண தெரிவித்துள்ளார். (த)

## சிறப்பு டெங்குஒழிப்பு நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 13

நாட்டின் 5 மாவட்டங்களில் நேற்று முதல் 3 தினங்களுக்கு சிறப்பு டெங்கு ஒழிப்புத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

டெங்கு நுளம்பு பரவும் வீதம் அதிகரித்துள்ளதால் விசேட டெங்கு ஒழிப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவின் சிறப்பு மருத்துவ நிபுணர் பிரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பு, களுத்துறை, கம்பஹா, இரத்தினபுரி மற்றும் காலி உள்ளிட்ட மாவட்டங்களில் டெங்கு நுளம்பு பரவும் வீதம் அதிகரித்துள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

டெங்கு குடம்பிகள் பரவும் வகையிலான சுற்றுச் சூழலை வைத்திருப்பவர்கள் சுற்றுச்சூழலைத் துப்புரவுசெய்து அது தொடர்பில் விழிப்புடன் செயற்பட வேண்டும் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு கேட்டுக் கொண்டுள்ளது.

கொழும்பு, களுத்துறை, கம்பஹா, இரத்தினபுரி, காலி உள்ளிட்ட மாவட்டங்களில் நேற்றும், இன்றும் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)



## சீயோன் தேவாலயத்துக்கு நேரில் சென்ற ரத்ன தேரர்

கொழும்பு, 13

ஏப்ரல் 21ஆம் திகதி குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான மட்டக்களப்பு, சீயோன் தேவாலயத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அதுரலிய ரத்ன தேரர் நேற்றுச் சென்றுள்ளார்.

அதுரலிய தேரருடன் தேரர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட குழுவினரும் சென்றிருந்தனர். இவர்கள் குண்டுத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட தேவாலயத்தை பார்வையிட்டதுடன், தேவாலய நிர்வாகத்தினருடன் கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டனர்.

அதேநேரம், அதுரலிய ரத்ன தேரர் உள்ளிட்ட குழுவினர் மட்டக்களப்பு மாமாங்க பிள்ளையார் ஆலயத்துக்கும் சென்றிருந்தனர். (எ)

## இ.போ.சவின் தேசிய சங்கத்தினர் பணிப்புறக்கணிப்பில்

யாழ்ப்பாணம், ஜூன் 13

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தேசிய ஊழியர் சங்கத்தினர் நேற்று முன்தினம் நள்ளிரவு தொடக்கம் நாடு முழுவதும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். எனினும் வடக்கில் பணிகள் பாதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தமது உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட 5 ஆயிரத்து 100 பதவி உயர்வுகளை உறுதிப்படுத்துவது உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

ஆரம்பத்தில் சில கோரிக்கைகளை முன்வைத்து கடந்த இரு நாள்களாக சிறிகொத்தாவில் சுமார் 2ஆயிரம் ஊழியர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். எனினும் கோரிக்கைகளுக்குத் தீர்வு கிடைக்கவில்லை. அமைச்சர்கள் பலருடன் கலந்துரையாடிய போதிலும் தீர்வு கிட்டவில்லை. அதனால் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுகிறோம் என்றும் பணியாளர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தமக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்று இலங்கை போக்குவரத்துச் சபையினர் தெரிவிக்கின்றனர். (த-7)

## தெரிவுக்குழுவுக்கு ஹிஸ்புல்லாவை அழைப்பதற்கு முடிவு

கொழும்பு, ஜூன் 13

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்ட சிறப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு, கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாவை அழைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழு இன்று பிற்பகல் 2 மணியளவில் மீண்டும் கூடவுள்ளது. அதற்கு முன்னாள் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்ககோன் மற்றும் அரச நிர்வாக அமைச்சின் செயலரும் அழைக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## நாட்டை சீர்குலைக்க முயல்கிறது ஐ.தே.க.

*தயாசிறி குற்றச்சாட்டு*



கொழும்பு, ஜூன் 13

நாட்டின் நிலையான தன்மையை மீண்டும் சீர்குலைக்கும் வகையில் ஐக்கிய தேசிய கட்சி செயற்படுகின்றது என்று சிறி லங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர குற்றஞ்சாட்டியுள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அமைச்சரவையைக் கூட்டாமலிருப்பது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

பயங்கரவாத தாக்குதல் இடம்பெற்றதன் பின்னர் பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் தற்போது நாடு நிலையான தன்மையை அடைந்துள்ளது. ஆனால் ஐக்கிய தேசிய கட்சி சற்றும் மக்களைப் பற்றி சிந்திக்காது முட்டாள் தனமாக செயற்பட்டுக் கொண்டிருகின்றது.

ஐ.தே.க. தொடர்ந்தும் அரச தலைவருடன் முரண்பட்டுக் கொண்டு பிரச்சினைகளை ஏற்படுவதற்கு வழிவகுக்கின்றது. தெரிவுக் குழுவை நியமிப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சியுடன் சேர்ந்து கூட்டு எதிர்கட்சியும் ஆதரவளித்தது. தற்போது அரச தலைவரை இலக்கு வைத்து ஐக்கிய தேசிய கட்சி முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளை அவர்களது குறிக்கோள் நிறைவடையும்வரை முன்னெடுப்பர். ஆனால் இந்த நிலமை தொடர்ந்தால் அதனால் பாரிய பாதிப்புக்கள் ஏற்படும் என்பதை அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். -என்றார். (எ)

# ஷஹ்ரான் கொலைகாரராக மாறுவார் என்று கனவிலும் நினைக்கவில்லை

## *அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் சாட்சியம்*

கொழும்பு, ஜூன் 13

**எமக்கும் ஷஹ்ரானுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் இருந்தன. ஆனால் ஷஹ்ரான் இவ்வாறு மிலேச்சத்தனமான கொலைகாரணாக மாறுவர் என நான் கனவிலும் நினைத்துப்பார்க்கவில்லை. இவர் குறித்தும் முறைப்பாடுகளை நாம் செய்துள்ளோம். ஆனால் நாம் வாய்திறக்காது இருக்கக் காரணம் உள்ளது. எமக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளது. இவர்களின் அடிட்'படைவாத செயற்பாடுகள் குறித்து தெரிவித்தும் எமக்கு எவரும் பாதுகாப்பு தரவில்லை.**

இவ்வாறு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சார்பில் அதன் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம். ரிஸ்வி முப்தி தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக ஆராய்வதற்கு அமைக்கப்பட்ட தெரிவுக்குழு முன்னிலை யில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சார்பில் அதன் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம்.ரிஸ்வி முப்தி நேற்று முன்தினம் சாட்சியமளித்தார். அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

எமக்கு எதிராகவும் எமது மதத்துக்கு எதிராகவும் மிகவும் கீழ்த்தரமான விமர்சனங்களை முன்வைத்து எம்மை நோகடித்து எமது மக்களை வேதனைபடுத்துகின்ற மோசமான செயற்பாடுகள் நிறுத்தப்படும் வரையில் எவ்வாறு நீங்கள் கூறும் முஸ்லிம் அடிப்படைவாதம் முடிவுக்கு வரும்?. இன்னும் எவ்வளவு காலத்துக்கு அவரசகால சட்டத்தைக் கையாளப் போகின்றீர்கள்?.

ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புபட்ட ஷஹாரான் அமைப்பினர் முதலில் என்னையே கொலை செய்ய வேண்டும் என்ற பரப்புரை செய்து வந்தனர்.

நான் ஒரு காபிர் என்றும் நான் முஸ்லிம் அல்லாதவன் என்றும் நான் ஞானசார தேரருடன் தொடர்பில் உள்ளேன் என்றும் கருத்துக்களை பரப்பினர். தவறான ஒளிப்படங்களை புனைந்து என்னை தவறாக சித்தரித்தனர். இது தொடர்பாக நாம் பல தடவைகள் பாதுகாப்பு தரப்புக்கு தெரிவித்துள்ளோம்.

அதுமட்டும் அல்ல ஷஹ்ரான் மற்றும் அவர் சார்ந்த குழுவின் செயற்பாடுகளை நாம் முஸ்லிம் செயற்பாடுகள் அல்ல எனத் தெளிவாக கூறியுள்ளோம்.

தவ்ஹித் ஜமாஅத் அமைப்பு தடை செய்யப்பட வேண்டிய அமைப்பு என நாம் கூறியிருந்தோம். இலங்கையில் உள்ள முஸ்லிம் அமைப்புகள் அனைத்தையும் வரவழைத்து ஒரு அமைப்பாக ஒரு கொள்கையில் கீழ் செயற்பட வேண்டிய கட்டாயத்தில் வலியுறுத்தினோம். அதில் தவ்ஹித் ஜமா அத் அமைப்பு இணங்கவில்லை. அவர்களுடன் மொத்தம் 12 அமைப்புகள் இணைந்து செயற்பட்டன. இவர்கள் இந்தியாவின் தமிழ்நாடு தவ்ஹித் ஜமா அத் அமைப்புடன் இணைந்து செயற்பட்ட அமைப்பாகும்.

முஸ்லிம்கள் எவரும் ஐ.எஸ். அமைப்புடன் இணைந்து செயற்படும் நபர்கள் அல்ல. நாம் ஒருபோதும் ஐ.எஸ். அமைப்பை ஆதரிக்கவில்லை. அவர்கள் எவரும் முஸ்லிம்கள் அல்ல. இலங்கையில் ஐ.எஸ். எனக் கூறும் எவரும் இருக்கின்றனர் என்று நினைக்கவில்லை. இலங்கையில் இருந்து சிரியாவுக்கு சென்றதாக முப்பது நாற்பது குடும்பங்கள் அடையாளப்படுத்தப்பட்டிருந்தன. அவர்கள் மீண்டும் இலங்கைக்கு வந்தனர் என்று கூறப்படு கின்றது. அவர்கள் தவிர்ந்து வேறு எவரும் இருக்கின்றனர் ஏனறு தெரியவில்லை. எனினும் இவை அனைத்தையும் உரிய காரணத்துடன் தெரியப்படுத்தியுள்ளோம். இறுதியாக 2019 0103ஆம் திகதி பாதுகாப்பு செயலாளரை சந்தித்து இறுவட்டுக்கள், அறிக்கைகள் என ஷஹ்ரான் தொடர்பான அனைத்தையும் வழங்கியுள்ளேன்.

திகன தாக்குதலில் பின்னரே ஷஹ்ரான் தீவிர அடிப்படைவாதத்தை கையில் எடுத்துள்ளார் என்றே அறிய முடிகின்றது. சில சந்தர்ப்பங்களில் இந்து கடவுள் சிலைகள் சிலவற்றை அவர்களின் பள்ளிவாசலில் வைத்து முஸ்லிம் மாணவர்களுக்கு ஏனைய மதங்கள் தொடர்பாகக் கருத்துக்களை கூறியுள்ளனர்.

இவர்கள் எவரும் முஸ்லிம் கொள்கை இல்லாதவர்கள் என்ற அடிப்படைவாதக் கருத்துக்கள் பரப்பப்பட்டுள்ளன. எமக்கும் ஷஹ்ரானுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் இருந்தன. ஆனால் ஷஹ்ரான் இவ்வாறு மிலேச்சத்தனமான கொலைகாரணாக மாறுவார் என நான் கனவிலும் நினைத்துப்பார்க்க வில்லை. அதேபோல் முஹம்மத் ரம்சி என்ற நபரும் எமது கொள்கைக்கு முரணான ஒருவர் தான். இவரும் இந்தியாவின் தவ்ஹித் ஜமா அத் அமைப்புடன் சார்ந்த கொள்கைக்கே பயணித்துள்ளார். இவர் தொடர்பாகவும் முறைப்பாடு களை நாம் செய்துள்ளோம். ஆனால் நாம் வாய்திறக்காது இருக்க காரணம் உள்ளது. எமக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளது. இவர்களின் அடிப்படைவாத செயற்பாடுகள் குறித்து தெரிவித்தும் எமக்கு எவரும் பாதுகாப்பு தரவில்லை. ஆகவே நாம் இது குறித்து கூறவேண்டியவற்றை கூறியுள்ளோம்.

எவ்வாறு இருப்பினும் நாம் இந்த நாட்டில் ஜனநாயக ரீதியில் வாழவே முயற்சித்து வருகின்றோம். ஆனால் ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இந்த நாட்டில் நாங்கள் தீர்விரவாதிகள் அல்லர், நாம் ஜிஹாத் தொடர்பாக என்ன கருதுகிறோம்?. ஜிஹாத் ஒருபோதும் தலிபான், அல் கைதா கொள்கை அல்ல என்ற காரணிகளை தொடர்ச்சியாக கூறி வருகின்றோம். ஆனால் நீங்கள் (தெரிவுக்குழு உறுப்பினர்களை நோக்கி கூறியது) எங்களை தொடர்ந்தும் நோகடித்துக் கீழ்த்தரமாக நடத்தி வருகின்றீர்கள். எமது கொள்கை, எமது மதம் அவமதிக்கப்பட்டு வருகின்றது. நாம் அடிப்படைவாதிகள் என கூறி பௌத்த தேரர்கள் எமக்கு எதிராகவும் அரசியல் வாதிகள் எமக்கு எதிராகவும் செயற்படுவது எம்மை வேதனைப்படுத்தி வருகின்றது.

ரமழான் மாதத்தில் 2 ஆயிரம் முஸ்லிம்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஜிஹாத் புத்தகம் வைத்திருந்த குற்றத்தில் எமது முஸ்லிம் மக்கள் கைதுசெய்யப்படுகின்றனர். சுக்கான் சின்னம் பொறித்த உடை அணிந்த குற்றத்தில் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். முகத்தை மூடி எச்சில் உமிழ முயன்ற பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு நீங்கள் நடந்துகொண்டால் எங்கே அடிப்படைவாதம் நிறுத்தப் படப்போகின்றது?. முதலில் அரசு உரிய சட்டங்களை சகலருக்கும் ஒரே மாதிரி பிரயோகிக்க வேண்டும். தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் சகல சட்டத்தையும் ஆதரிக்க நாம் தயாராக உள்ளோம். இதனை நாம் வெளிப்படையாக தெரிவித்தும் விட்டோம். கடுமையான சட்டங்களை கொண்டு நாட்டைப் பலப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசைச் சார்ந்தது.

நிலைமைகளை கட்டுப்பாட்டில் கொண்டுவந்து விரைவில் எமது மக்கள் சுதந்தரமாக வாழ இடமளிக்க வேண்டும். நான் ஒன்றை மட்டும் கேட்கின்றேன். இன்னும் எவ்வளவு காலத்துக்கு அவசர கால சட்டத்தில் கையாளப் போகின்றீர்கள்?. எமது மக்களின் பாதுகாப்பு எமக்கு முக்கியம். ஐ. எஸ் என்பது இஸ்லாம் அல்ல. அவர்கள் எவரும் முஸ்லிம்களும் அல்ல. இதனை நீங்கள் தான் விளங்கிக்கொள்ள வேண்டும். -என்றார். (எ)

# ர்ஞ்சன் ராமநாயக்கவின் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு தொடர்பாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க மீது ஒரு மாதத்துக்குள் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. நீதிமன்றத்தை அவமதித்த விவகாரம் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக, மாகல்கந்த சுதத்த தேரர் மற்றும் ஓய்வு பெற்ற விமானப்படை அதிகாரியான சுனில் பெரேரா ஆகியோர் உயர் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்திருந்தனர். ரஞ்சன் ராமநாயக்கவிற்கு எதிராக உயர் நீதிமன்றத் தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில், 2017ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட ரஞ்சன், நாட்டில் பெரும்பாலான சட்டத்தரணிகள் ஊழல் வாதிகள் என குறிப்பிட்டுள்ளார் என்றும், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இவ்வாறு கூறியமையானது, மக்களுக்கு நீதித்துறை தொடர்பில் இருக்கும் நம்பிக்கையை சீர்குலைக்க வாய்ப்புள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதனால் நீதிமன்றத்துக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது என்றும், இது தொடர்பில் விசாரணை நடத்தி பிரதி அமைச்சருக்கு எதிராக உரிய தண்டனையை வழங்க வேண்டும் என்றும் மனுதாரர்கள் கோரியுள்ளனர். (எ)

# நாட்டு நிலமையால் ரஞ்சித் ஆண்டகை கவலை!

கொழும்பு, ஜூன் 13

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை மற்றும் நாடாளுமன்றத்துக்கும் அரச தலைவருக்கும் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் தொடர்பில் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கடும் கவலையில் உள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசில் காணப்படுகின்ற தாமதமும் அவரைக் கவலைக்குள்ளாக்கியிருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணியினர் நேற்றுமுன்தி



னம் கொழும்புப் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையைச் சந்தித்துப் பேசினர். அதன்பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ)

# அரச தலைவர் தேர்தல்தான் முதலில் நடக்கும் சாத்தியம்

## *பசில் ராஜபக்ச தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 13



மாகாண சபைத் தேர்தலை இந்த வருடத்தில் நடத்த அரசு எவ்வித முன்னேற்றகரமான ஏற்பாடுகளிலும் ஈடுபட்வில்லை. அதனால் அரச தலைவர் தேர்தலே முதலில் இடம்பெறும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார். அரசியல் கட்சி செயாளர்களுக்கும், கட்சியின் முக்கிய உறுப்பினர்களுக்கும் தேர்தல் ஆணைக்குவின் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் தேர்தல் ஆணையகத்தில் நடைபெற்றது. அந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி (பெரமுன) சார்பில் தான் அரச தலைவர் வேட்பாளர் என்பதில் எந்த் மாற்றமும் கிடையாது. எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் நாம் நிச்சயம் அமோக வெற்றி பெறுவோம் என்பதில் சந்தேகமில்லை.

எமது கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச போட்டியிட வேண்டும் என்று பெரும்பாலான மக்கள் விரும்புகின்றனர். மக்களின் விருப்பத்துக்கு மதிப்பளிக்கப்படும். - என்றார். (எ)

# அரசுக்கு எதிராக ஜே.வி.பி. நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 13

கொழும்பில் அரசுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. நாட்டில் பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெறவுள்ளதாக தகவல்கள் கிடைத்திருந்தும் தேசிய பாதுகாப்பு குறித்து பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்ட அரசு தொடர்ந்து பதவியில் இருப்பது ஜனநாயகத்துக்கு பொருத்தமற்றது எனத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. கொழும்பு டெக்னிகல் சந்தியில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டம் பேரணியாக கொழும்பு-கோட்டை தொடருந்து நிலையம் வரை சென்றது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் பொதுச்செயலர் டில்வின் சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர்களான பிமல் ரத்னாயக்க, விஜித ஹேரத், சுனில் ஹந்துனெத்தி, ஜயந்த ஜயதிஸ்ஸ மற்றும் முன்னாள் உறுப்பினர் லால்காந்த ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம)




## புதுடில்லியின்...

'இலங்கையில் இனப்பிரச்சினை இனியும் தொடர இந்தியா விரும்பாது- ஒருபோதும் அனுமதிக்காது. இங்கு தமிழர்கள் சம அந்தஸ்தில் வாழ வேண்டும் எனவும், பிளவுபடாத ஒன்றுபட்ட நாட்டுக்குள் எமக்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வு வேண்டும் எனவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கை வந்த இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியிடம் நேரில் நாம் எடுத்துரைத்தோம். அவரின் அழைப்புக்கிணங்க விரைவில் புதுடில்லி செல்லவுள்ளோம். அங்கு அரசியல் தீர்வு தொடர்பில் விரிவாகப் பேசுவோம்.

அரசியல் தீர்வு தொடர்பில் இலங்கை அரசுக்கு இந்திய மத்திய அரசு தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும். இந்திய அரசின் ஆதரவுடன் இலங்கையில் நிரந்தர அரசியல் தீர்வை நாம் வென்றெடுப்போம். அமெரிக்கா, பிரிட்டன், கனடா, சுவிஸ், ஆஸ்திரேலியா, ஜேர்மனி மற்றும் தென்னாபிரிக்கா உள்ளிட்ட ஏனைய நாடுகளும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கும். இந்த நம்பிக்கை எமக்குண்டு.

இனியும் இலங்கை அரசு இந்திய உள்ளிட்ட பன்னாட்டுச் சமூகத்தை ஏமாற்றவே முடியாது. இந்தியாவும் ஏனைய நாடுகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டுள்ளனர். அதன்பிரகாரம்தான் பன்னாட்டுத் தலைவர்கள் இலங்கை வரும்போது எம்மைத் தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்துகின்றனர்.

நீண்டகாலமாகத் தொடரும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் அனைத்தும் விரைவில் தீர்க்கப்பட வேண்டும். இதனை உலக நாடுகளிடம் நாம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளோம். எனவே, இதற்காகத் தமிழர்கள் அனைவரும் ஓரணியில் நிற்க வேண்டும். எமக்குள் வேற்றுமைகள் இருக்கக்கூடாது. அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும்.

அதேவேளை, இலங்கை அரசும் தமிழ் மக்களின் நலனில் அக்கறைகொண்டு செயற்பட வேண்டும். முப்பது வருட கால ஆயுதப் போராட்டத்தால் தமிழ் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகினர். பல்லாயிரக்கணக்கான உறவுகளை இழந்தனர்; ஆயிரக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டனர்; நூற்றுக்கணக்கானோர் அரசியல் கைதிகள் என்ற பெயரில் சிறையில் அடைக்கப்பட்டனர்; பெரும் சொத்துக்களை இழந்தனர். அப்படி ஒரு நிலமை இங்கு மீண்டும் ஏற்படக்கூடாது' என்றார். (ம-22)

## மைத்திரியுடன் மோத....

தில் அனுமதியைக் கோராமலும் தலைமை அமைச்சருக்கு அமைச்சரவையை கூட்ட அதிகாரம் இருக்கின்றது எனத் தெரிவித்துள்ள அமைச்சர் ஒருவர், இல்லாத அமைச்சருக்குப் பதில் அமைச்சரை அரச தலைவர் நியமிக்கும்போது அமைச்சரவையைக் கூட்ட தலைமை அமைச்சர் நடவடிக்கை எடுப்பது த்வறல்ல எனவும் குறிப்பிட்டுள்ளார். (ம-22)

## மைத்திரியை மாட்டுவதே...

அணியான பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, 'உயிர்த்தஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் எமக்குத் துளியளவும் நம்பிக்கை இல்லை. தாக்குதல்களுக்கான முழுப் பொறுப்பையும் பாதுகாப்பு அமைச்சரான அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மீது சுமத்துவதே இந்தக் குழுவின் நோக்கமாக இருக்கின்றது. இதனால் உண்மையான குற்றவாளிகள் தப்பிவிடுவார்கள். குற்றவாளிகளைக் காப்பாற்றுவதற்காகவே ரணில் அரசின் அழுத்தத்தின் பிரகாரம் இந்தத் தெரிவுக்குழுவை சபாநாயகர் நியமித்திருந்தார். இப்படியான தெரிவுக்குழுவை நாம் எப்படி நம்புவது? அதனால்தான் இந்தக் குழுவில் பொது எதிரணி உறுப்பினர்கள் இணையவில்லை.

தாக்குதல்கள் தொடர்பில் உண்மை நிலையைக் கண்டறிவதற்காக விசேட விசாரணைக்குழுவை அரச தலைவர் நியமித்திருந்தார். அந்த விசாரணைக் குழுவின் இறுதி அறிக்கை அரச தலைவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. எனவே, சிறப்பு விசாரணைக் குழுவின் அறிக்கையை அரச தலைவர் உடன் பகிரங்கப்படுத்த வேண்டும். அந்த அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்' - என்றார். (ம-22)

## தெரிவுக்குழுவை...

தெரிவுக்குழுவை சபாநாயகர் நியமித்தார். அதன் விசாரணை தற்போது எவ்வித தடங்கலுமின்றி நடைபெற்று வருகின்றது. தெரிவுக்குழுவின் செயற்பாடு தொடர்பில் நாடாளுமன்றமே தீர்மானிக்க முடியும். நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி அரச தலைவர் அதில் தலையிட முடியாது.

தெரிவுக்குழு விசாரணையின்போது பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவருகின்றன. விசாரணையின் நிறைவில் வெளிவரும் அறிக்கையில் பல உண்மைகள் அம்பலமாகும். விசாரணைக்கு அழைக்கப்படுபவர்கள் அனைவரும் சாட்சியமளித்தே ஆகவேண்டும். சாட்சியமளிக்க மறுப்புத் தெரிவிப்பவர்கள் மீது சந்தேகம் எழும். அதேவேளை, அவர்களுக்கு எதிராக நாடாளுமன்றம் சட்ட நடவடிக்கையும் எடுக்கும்.

தெரிவுக்குழு விசாரணையின் நம்பகத்தன்மையை மக்கள் அறியவேண்டும் என்பதற்காகவே அமர்வுகளின்போது ஊடகங்கள் செய்தி சேகரிக்க அனுமதிக்கப்படுகின்றன. இதனை எவரும் தடுத்து நிறுத்த முடியாது.

தெரிவுக்குழு விசாரணை அரச தலைவருக்கு எதிரான நடவடிக்கை அல்ல. உண்மையை அறிவதும் குற்றவாளிகளை இனங்காணுவதுமே இதன் நோக்கமாகும். குற்றவாளிகளுக்கு எதிராக சட்டம் தன் கடமையைச் செய்யும்' என்றார். (ம-22)

## கை -மொட்டின்...

'இந்தத் தெரிவுக்குழு மிகவும் நம்பிக்கையான அடிப்படையில் எந்த முடிவை வழங்கினாலும் அது விமர்சிக்கப்படலாம்' எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: 'எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளைத் தவிர ஏனைய கட்சிகள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவைப் புறக்கணித்துள்ளன. நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை வாக்குகள் மூலம் இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது. ஏகமனதான தீர்மானத்தின் அடிப்படையில், நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டதால், அதனை மாற்ற முடியாது. நிறைவேற்று அதிகார அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் அரசமைப்பு சபையின் தலைவரான சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோர் எதிர்வரும் நாள்களின் இது சம்பந்தமாகப் பேசி இணக்கத்துக்கு வருவார்கள் என நம்புகின்றேன்.

கடந்த காலங்களிலும் நிறைவேற்று அதிகாரத்துக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையில் இப்படியான பிரச்சினைகள் ஏற்பட்டன. எனினும், இறுதியில் அரசமைப்பின் பிரகாரம் பிரச்சினைகளுக்கு நீதித்துறை தீர்வு கண்டது. நாட்டின் அரசமைப்பை மீறி எவரும் செயற்பட முடியாது' என்றார். (ம-22)

## ரணில் ஓகே என்றால்...

ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாஸ.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் பொது வேட்பாளர்கள் எவரும் போட்டியிடமாட்டார்கள். இம்முறை ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் வேட்பாளர் கட்டாயம் களமிறங்குவார். வேட்பாளர் பட்டியலில் ரணில் விக்கிரமசிங்கவின் பெயரே முதலிடத்தில் உள்ளது. அதேவேளை, கட்சியின் பிரதித் தலைவரான எனது பெயரும், சபாநாயகர் கரு ஜயசூரியவின் பெயரும் வேட்பாளர் பட்டியலில் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களில் உள்ளன.

அரச தலைவர் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் யார் என்ற விபரத்தை கட்சியின் உயர் பீடம் வெளியிடும்.

எனக்குப் பதவி ஆசை இல்லை. எனினும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்னை அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுமாறு கூறினால் நான் களமிறங்கத் தயாராகவே இருக்கின்றேன். முன்னாள் அரச தலைவரான எனது தந்தை பிரேமதாஸ இந்த நாட்டுக்குச் செய்த சிறந்த சேவைகளை மக்கள் நன்கு அறிவார்கள். அதன் பிரகாரம் நானும் செயற்படுவேன்' என்றார். (ம-22)

## அரச இயந்திரத்தை....

வேண்டும். ஆனால், அமைச்சரவையைக் கூட்டாமல் அரச இயந்திரத்தை முடக்கியுள்ள அரச தலைவர், நல்லாட்சிக்கு மக்கள் வழங்கிய ஆணையையும் மீறியுள்ளார். இது அப்பட்டமான அரசமைப்பு மீறல். அத்துடன், நாடாளுமன்றத்தைச் சவாலுக்குட்படுத்தும் செயல்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அரச தலைவர் நினைத்தபடி மாற்ற முடியாது. தேசிய பாதுகாப்பு குறித்து அதில் ஆராயப்பட வேண்டும்.

கடந்த ஒக்டோபர் 26ஆம் திகதி நடந்த அரசமைப்பு மீறலால் ஏற்பட்ட பாதிப்புப் போல், அண்மையில் நடைபெற்ற தாக்குதல் சம்பவங்களால் ஏற்பட்ட பாதிப்புக்களைப் போல் இப்போதும் பெரிய பாதிப்பு இதனால் வரப்போகின்றது.

இவ்வார முடிவுக்குள் அனைத்துத் தரப்பும் பேச்சு நடத்தி அடுத்த வாரம் அமைச்சரவையைக் கூட்ட வேண்டும். அனைத்துத் தரப்பினரும் இந்த ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாட்டை கண்டிக்க வேண்டும். மீண்டும் அரசமைப்பை மீறிச் செயற்பட வேண்டாம் என நான் அரச தலைவரிடம் கேட்கின்றேன்' என்றார். (ம-22)

## சர்வதிகாரத்தைப்...

மொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் ஆராயும் தெரிவுக்குழுவைக் கலைக்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன விடுத்துள்ள வேண்டுகோள் தொடர்பிலும், தெரிவுக் குழுவைச் சாடி மகிந்த அணியினர் வெளியிட்டுவரும் தகவல்கள் குறித்தும் கருத்துத் தெரிவித்துள்ள அவர், மேலும் கூறியுள்ளதாவது:

'நாடாளுமன்றத்தின் ஏகோபித்த தீர்மானத்துக்கமையவே தெரிவுக்குழுவை சபாநாயகர் நியமித்தார் என்பது அனைவரும் அறிந்த விடயம். இதில் நாடாளுமன்றத்தைத் தவிர வேறு எவரும் தலையிட முடியாது. இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினமன்று ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய கொலைவெறித் தாக்குதலில் வெளிநாட்டவர்கள் உட்பட 260க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர். அந்தக் கொடூரத் தாக்குதலின் பின்னணியையும் அதனுடன் தொடர்பட்டவர்களையும் நாம் கண்டுபிடித்தே ஆகவேண்டும். எவர் குற்றமிழைத்திருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

எனவே, தெரிவுக்குழு அழைக்கின்ற அனைவரும் பதவி வேறுபாடின்றி அதன் முன்னில்லயில் சாட்சியமளித்தே ஆகவேண்டும். இது தொடர்பில் ஊடகங்கள் உண்மைத்தன்மையை வெளிப்படுத்த வேண்டும். சாட்சியமளிக்க வரும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கோ அல்லது ஊடகங்களுக்கோ நாடாளுமன்றத்தின் தீர்மானத்தை மீறி எவரும் கட்டுப்பாடுகளைப் போட முடியாது. அதேபோல், இந்தத் தெரிவுக்குழுவை சர்வதிகாரத்தைப் பயன்படுத்தி எவரும் அடக்கவும் முடியாது. இதைக் கலைக்கவும் முடியாது. பொது எதிரணியினர் ஆட்சியைப் பிடிப்பதற்காகவும், குற்றவாளிகளைப் பாதுகாப்பதற்காகவும் தெரிவுக்குழுவை கண்டபடி விமர்சிக்கின்றனர். இது தொடர்பில் நாம் அலட்டிக்கொள்ளக்கூடாது.

தெரிவுக்குழு விசாரணையின் நிறைவில் பல உண்மைகள் வெளிவரும். அப்போதுதான் தெரிவுக்குழுவின் நம்பகத்தன்மையை அனைவரும் உணர்ந்துகொள்வார்கள். தெரிவுக்குழுவைக் கலைக்கவில்லை என்பதற்காக அமைச்சரவையும் இயங்காது என எவரும் நினைக்கக்கூடாது. அமைச்சரவை தொடர்ந்து இயங்குகின்றது. ஏதோவொரு வழியில் விரைவில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெறும்' என்று குறிப்பிட்டுள்ளார். (ம-22)

எதியோப்பியாவில் நெகிழ்ச்சிச் சம்பவம்

# குழந்தையைப் பிரசவித்துவிட்டு உடன் பரீட்சை எழுதிய பெண்

அடிஸ்அபாபா,ஜூன் 13
குழந்தையைப் பிரசவித்த தாய் ஒருவர் அந்தக் குழந்தையைப் பிரசவித்த அரை மணி நேரத்துக்கு பிறகு மருத்துவமனையின் படுக்கையிலே இருந்தவாறு பரீட்சை எழுதினார். இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை மேற்கு எதியோப்பியாவில் நடந்தது. 21 வயதாகும் அல்மாஸ் டெரீஸ் என்ற பெண்ணே இவ்வாறு பரீட்சை எழுதினார்.



ரம்ழான் கொண்டாட்டம் காரணமாகப் பின்தள்ளப்பட்ட அவரது உயர்நிலைக் கல்லூரிப் பரீட்சைகள் அவருடைய பிரசவ நாளன்று நடந்தன. பிரசவத்தின்போது ஆண் குழந்தையைப் பெற்ற அல்மாஸ் டெரீஸ் குழந்தை பெற்ற 30நிமிடங்களில் இந்தப் பரீட்சையை எழுதினார்.
ஆங்கிலம், கணிதம் உள்ளிட்ட பரீட்சைகளையே கடந்த திங்கள் கிழமையன்று மருத்துவமனையில் எழுதினர். அடுத்த இரண்டு நாள்களில் நடந்த ஏனைய பாடப் பரீட்சைகளை அவர் பரீட்சைநிலையத்துக்குச் சென்று எழுதினார்.
மருத்துவமனையில்தனது மனைவி பரீட்சை எழுதுவதற்கு அவர் படித்த கல்லூரியை இணங்கச் செய்ததாக அல்மாசின் கணவர் தடீஸ் துலு தெரிவித்தார்.
எதியோப்பியாவில் உயர்நிலைப் படிப்பை இடையில் கைவிடுவது அங்குள்ள மாணவிகளிடம் பரவலாக காணப்படும் விடயமாக இருக்கையில் குழந்தை பிரசவித்த நிலையிலும் பரீட்சைக்கு முகம் கொடுத்த அல்மாஸ் டெரீஸ் பாராட்டப்பட்டுவருகிறார். எதியோப்பியாவில் மாத்திரமன்றி ஆசியா உள்ளிட்ட உலக நாடுகள் பலவற்றிலும் அரச பெண் ஊழியர்களுக்குக் குறிப்பிட்ட அளவு நாள்கள் வரையில் பிரசவ விடுமுறை வழங்கப்படுவதும், மாதவிடாய்க் காலத்தில் விடுமுறை வழங்குவது குறித்துத் தீர்மானிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.




## சீனாவுக்குக் கட்டுப்பட வேண்டியதில்லை

ஹூவாவி தெரிவிப்பு

பீஜிங்,ஜூன் 13
சீன அரசுடன் எங்களுக்கு எந்தவித தொடர்பும் இல்லை என்றுள்ளது சீனாவைச் சேர்ந்த அலைபேசிகள் தயாரிப்பு நிறுவனமான 'ஹூவாவி'. சீனாவுக்காக உளவு பார்ப்பதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ள ஹூவாவி நிறுவனத்துக்கும் அமெரிக்காவுக்கும் இடையே மோதல் நீடித்து வருகிறது. அமெரிக்க வர்த்தக நிறுவனங்களுடனான வியாபாரத் தொடர்புகளுக்குக் ஹூவாவிக்குத் தடை விதித்துள்ளது அமெரிக்கா. அமெரிக்க அரசின் நடவடிக்கையை அடுத்து, தனது இயங்குதளத்தின் சில மேம்படுத்தல்களை ஹூவாவி அலைபேசிகளில் பயன்படுத்த முடியாதவாறு செய்துள்ளது கூகுள். அமெரிக்காவின் அப்பிள் நிறுவனத்தை விட அதிக திறன்கொண்ட அலைபேசிகளை உருவாக்குவதிலும், 5ஆம் தலைமுறை இணைக்கற்றைச் சேவையை வழங்குவதில் உலகின் முன்னணி நிறுவனமாகவும் திகழ்ந்த ஹூவாவிக்கு இவை பெரும் தடைகளை ஏற்படுத்தியுள்ளன. இந்த நிலையில், சீன அரசுடன் நாங்கள் பேசினோம். முழுவதுமாக விளக்கமளித்துத் தெளிவு பெறுவதற்குச் சில காலம் பிடித்தது. அதன் முடிவில், சீன அரசுக்கு எந்தவொரு நிறுவனமும் உளவுத் தகவல்களுக்குக்காகக் கட்டுப்பட வேண்டும் என்பது அவசியமில்லை என்பது தெளிவானது. - எனக் கூறினார் ஹீவாவி நிறுவனத்தின் இணையப் பாதுகாப்புத் தலைவர் ஜோன் சுவ்போல்க்.


## போர் பாதித்த பகுதிகளில் 5இல் ஒருவருக்கு மனநோய்

ஐ.நா. தகவல்

போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஐந்து பேரில் ஒருவர் மனநோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை அண்மையில் வெளியிட்ட தகவல் ஒன்று தெரிவிக்கின்றது. அதாவது போர், மருத்துவ நெருக்கடி போன்றவற்றால் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஐந்தில் ஒருவர் மன அழுத்தம், மனப்பதற்றம், மனப்பிறழ்வு, மனச்சிதைவு ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
உலக சுகாதார நிறுவனத்தின் மனநலப் பாதிப்பு மற்றும் போதைப் பொருள் பாதிப்புத் தடுப்புப் பிரிவில் பணியாற்றும் மார்க் வேன் ஓம்மர்மேன் என்பவர் மேற்கொண்ட ஆய்விலேயே இந்தத் தகவல்கள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மனஅழுத்தம் மற்றும் மனப்பதற்றம் போன்ற பாதிப்புகள் வயதுக்கேற்ப வித்தியாசப்படுவதாகவும், வயது அதிகரிக்க அதிகரிக்கப் பாதிப்பும் அதிகமாக இருக்கிறது என்றும் ஆண்களை விடப் பெண்களுக்கே மன அழுத்தம் அதிகமாக இருக்கிறது என்றும் கூறுகிறது இந்த அறிக்கை.
இந்த ஆய்வு 1980ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் உலகிலுள்ள 39 நாடுகளில் மேற்கொள்ளப்பட்டதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

## கடும் வெயில் நால்வர் சாவு

சென்னை,ஜூன் 13
ஆன்மிகச் சுற்றுலா நிமித்தம் இந்தியாவின் உத்தரப் பிரதேசத்திலிருந்து கோயம்புத்தூர் நோக்கிக் கடுகதித் தொடருந்தில் சென்று கொண்டிருந்த தமிழகத்தைச் சேர்ந்த 4 பேர் அங்கு நிலவுகின்ற கடும் வெயிலின் தாக்கத்தைத் தாங்க முடியாமல் தொடருந்திலேயே சாவடைந்த சம்பவம் நிகழ்ந்தது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது:
கோவை, தமிழகத்தின் பல பகுதிகளைச் சேர்ந்த 70 வயதுக்கு மேற்பட்ட 68 பேர் கொண்ட குழுவொன்று வாரணாசி மற்றும் ஆக்ராவுக்குத் தொடருந்து மூலம் சுற்றுப்பயணம் சென்றது. சாதாரண படுக்கை வசதியுடனான தொடருந்துப் பெட்டிகளில் பயணம் செய்த அவர்களின் தொடருந்து ஜான்சி ரயில் நிலையம் வந்தபோது அந்தப் பகுதியில் 113 டிகிரி செல்சியசுக்கு மேல் வெப்பநிலை நிலவியுள்ளது. இந்த வெப்பத்தைத் தாங்க முடியாமல் பலருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது. மூவர் தொடருந்திலே சாவடைந்தனர். மற்றொருவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் சாவடைந்தார். இவர்களின் சடலப் பரிசோதனை அறிக்கை வெளிவந்த பின்னரே கடும் வெயில் காரணமாகத்தான் இவர்களின் சாவு நிகழ்ந்ததா? என்று உறுதிப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



இஸ்ரேல் தலைமை அமைச்சர் பெஞ்சமின் நெதன்யாகுவை வழிகாட்டும் நாயாகவும் அந்த நாயின் கழுத்தில் கட்டியுள்ள கயிற்றைப் பிடித்துக் கொண்டு அதன் பின்னால் செல்பவராக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பையும் சித்திரிக்கின்ற கேலிச்சித்திரம் ஒன்றை அமெரிக்காவின் நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்டது. அந்தக் கேலிச் சித்திரத்தால் எழுந்த சர்ச்சைகள் காரணமாகப் பின்னர் அதை வெளியிட்டதற்காகக் குறித்த பத்திரிகை மன்னிப்புக் கேட்டது.

# வடகொரியாவில் தூக்குத் தண்டனை தென்கொரிய நிறுவனம் அறிக்கை

சியோல், ஜூன்13
தூக்கிலிடுவதற்காகப்பயன்படுத்தப்பட்ட 318 இடங்களை வடகொரியாவில் தாங்கள் கண்டுபிடித்துள்ளதாகக் கூறுகிறது தென் கொரியாவிலுள்ள அரசு சாராத ஓர் அமைப்பு. 'இடைநிலை நீதிப் பணிக்குழு' என்கிற அந்த அமைப்பு வட கொரியாவைவிட்டு வெளியேறிய 610 பேரைச் சந்தித்துக் கலந்துரையாடியே இந்த அறிக்கையைத் தயார் செய்ததாகக் கூறுகிறது.
மாட்டைத் திருடியவர்கள் முதல் தென் கொரியாவிலிருந்து ஒலிபரப்பாகும் தொலைக்காட்சி அலைவரிசையைப் பார்த்தவர்கள் எனப் பல்வேறு காரணங்களுக்காகக் கடந்தபலதசாப்தங்களில்கொல்லப்பட்டவர்கள் குறித்த தகவல்களை இந்த அமைப்புச் சேகரித்து வந்த நிலையிலேயே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. இதன்படி ஆறுகள், வயல்வெளிகள், சந்தைப்பகுதிகள், பாடசாலைகள், விளையாட்டு மைதானங்கள் எனப் பல்வேறு பொது இடங்களுக்கு அருகிலே சாவுத்தண்டனைநிறைவேற்றப்பட்டதாகவும் பொது இடங்களில் நிறைவேற்றப்பட்ட இந்தச் சாவுத் தண்டனையைப்பார்ப்பதற்காகஆயிரக்கணக்கானோர்திரண்டனர் என்றும் தண்டனைக்குஉள்ளானவர்களின் குடும்ப உறுப்பினர்கள் குறிப்பாகக் குழந்தைகள் இந்தத் தண்டனையைப்பார்க்குமாறுகட்டாயப்படுத்தப் பட்டார்கள்என்றும்இறந்தவர்களின் உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவதில்லை என்றும் அந்த அமைப்பு மேலும் தெரிவிக்கிறது.




**பின்னணி**
வடகொரியாவில்உயர்பதவிகளில் இருந்த பலர் கடந்த காலங்களில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுக் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். வடகொரிய அதிபர் கிம் ஜோங் உனின் உறவினர் மீதும் அரச துரோகக் குற்றச்சாட்டுக் கூறப்பட்டது. ஆனால், சாவுத் தண்டனை விதிக்கப்படுவதன் உண்மைதன்மை கேள்விகுறியாகவே இருக்கிறது.
வடகொரியாவில்சாவுத்தண்டனை நிறைவேற்றப்படுவதாகத்தென்கொரியா தரப்பில் வெளியிடப்பட்ட செய்திகள்பலபொய்யாகவும்இருந்திருக்கின்றன.
2013ஆம் ஆண்டு வட கொரியாவைச் சேர்ந்த பாடகி ஹியோன் சாங்குக்குப் பொது இடத்தில் சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டதாகத் தென் கொரியா நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருந்த நிலையில், 2018ஆம்ஆண்டுதென் கொரியா சென்ற வட கொரியா குழுவில் அவரும் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ராஜராஜ சோழன் குறித்து இயக்குநர் பா. ரஞ்சித் பேச்சு

## எதிரொலியாக அவர் மீது விமர்சனங்களும் வழக்குப்பதிவும்





சென்னை, ஜூன் 13
இந்தியாவின் கும்பகோணத்தில் நடந்த நிகழ்ச்சிஒன்றில்ராஜராஜ சோழஅரசனை அவதூறாகப் பேசியாகதாகத் தென்னிந்தியத் திரைப்பட இயக்குநர்பா.ரஞ்சித் மீது ஏராளம் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அத்தோடு அவர் மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தியாவின் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கும்பகோணம் திருப்பனந்தாளில் இந்த மாதம் 5ஆம் திகதி நடந்த உமர்பாரூக்நினைவுநாள்பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய திரைப்பட இயக்குநர்பா.ரஞ்சித், ராஜராஜசோழனைப் பற்றிப் பேசியிருந்தார். சாதி ரீதியான ஒடுக்கு முறைகள், நிலப் பறிப்பு என ராஜராஜ சோழனின் கால்ம் இருண்டகாலமாக இருந்தது என்றுபேசியரஞ்சித் குறிப்பாக ஒடுக்கப்பட்ட சமூகம், நில உரிமையை இழந்ததுராஜராஜன்ஆட்சிக்காலத்தில்தான்என்று பேசினார்.

அவரது பேச்சு இந்திய இறையாண்மைக்கு எதிரானது. சாதிகளுக்கு இடையே பிரிவினை மற்றும்பிளவைஏற்படுத்தும் வண்ணம் உள்ளது எனவே ரஞ்சித்தைத் தேசிய பாதுகாப்புச்சட்டத்தின்கீழ்க்கைதுசெய்ய வேண்டும்எனப்பொலிஸில்முறைப்பாடு அளிக்கப்பட்டது. இதையடுத்து ரஞ்சித்மீது கலவரத்தைத்தூண்டும் வகையில்பேசியது, பல்வேறுபிரிவினரிடையே விரோதத்தை உருவாக்கிஅமைதிக்குக்குந்தகம்விளைவிப்பது ஆகியபிரிவுகளின்கீழ்வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



இந்தியாவின் சென்னையிலுள்ள வறண்டுபோன ஏரி ஒன்றிலிருந்து அந்தப் பகுதி மக்கள் குடிநீர் எடுக்கிறார்கள். அங்கு கடும் வெயிலும் வறட்சியும் நிலவுகிறது என்று குறிப்பிட்டு மேற்படி ஒளிப் படத்தைப் பதிவிட்டுள்ளது பன்னாட்டு ஊடகமான 'ரொய்டர்ஸ்'.

# பாகிஸ்தானின் வான் வழியூடாக மோடியின் வானூர்தி பறக்க அனுமதி

## இம்ரான்கான் அரசு நடவடிக்கை

இஸ்லாமபாத், ஜூன் 13
கிர்கிஸ்தான் நாட்டில் நடக்க உள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்பதற்குச் செல்கின்ற இந்தியத் தலைமை அமைச்சர் மோடியின் வானூர்திபாகிஸ்தானின்வான்பாதை வழியாகப் பயணிப்பதற்குப் பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான் கான்தலைமையிலான அரசுஅனுமதி அளித்தது.



கிர்கிஸ்தான் நாட்டின் தலைநகர் பிஷ்கேக்கில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின்மாநாடுஇன்றுஆரம்பமாகின்றது. கடந்தபெப்ரவரிமாதம்14ஆம் திகதி நடந்த புல்வாமா தாக்குதல் சம்பவத்தையடுத்து பாகிஸ்தான் வான்வெளியை இம்ரான்கான் அரசு இறுக்கமாகக் கவனித்து வருகிறது.

இந்த நிலையிலேயே மோடியின் வானூர்தி மாத்திரம் பாகிஸ்தான் வழியாக பறப்பதற்கு அனுமதித்துள்ளது.

ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் பாகிஸ்தான்தலைமைஅமைச்சர்இம்ரான்கானும் பங்கேற்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



## இன்றைய நாள்

**மேடம்:** செயல்களில் தைரியம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். உற்பத்தி, விற்பனை செழிக்கும். பணக்கடனில் ஒருபகுதி செலுத்துவீர்கள்.

**இடபம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதமாகலாம். குடும்ப உறுப்பினர்களிடம், வாக்குவாதம் கூடாது. தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலை தொந்தரவு தரலாம். புதிய வழிகளில் பணச்செலவு அதிகரிக்கும்.

**மிதுனம்:** மாறுபட்ட கருத்து உள்ளவரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்ய கூடுதல் பணம் தேவைப்படும். உபரி பண வருமானம் கிடைக்கும்.

**கடகம்:** செயல்களில் நிதானத்தை கடைப்பிடிப்பீர்கள். எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். உபரி பணவருமானம் பெறுவீர்கள்.

**சிம்மம்:** வெளி வட்;டார தொடர்பு, தொந்தரவு தரலாம். தொழில், வியாபார நடைமுறை சீராக, புதிய யுக்தி பயன்படுத்துவது நல்லது. மிதமான அளவில் பணவரவு இருக்கும்.

**கன்னி:** உங்கள் பேச்சில் அன்பும், பண்பும் மிகுந்திருக்கும். நண்பர் உ;றவினர் உங்களை மதிப்புடன் நடத்துவர். தொழில், வியாபாரம் செழிக்க முழு முயற்சியுடன் பணிபுரிவீர்கள். நிலுவைப் பணம் வசூலாகும்.

**துலாம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்வர்; சகிப்புத் தன்மையை பின்பற்றுவதால், சிரமம் வராமல் தவிர்க்கலாம். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் உழைப்பு உதவும். சேமிப்பு பணம் செலவுக்கு பயன்படும்.

**விருச்சிகம்:** மனதில் கலை உணர்வு அதிகரிக்கும். அலைக்கழிப்பு உருவாக்கிய வேலை, ஆதாயம் தருவதாக மாறும். தொழில், வியாபாரத்தின் வளர்ச்சியை பார்த்து பலரும் வியப்படைவர்.

**தனுசு:** உங்கள் செயல்களில் நேர்த்தி நிறைந்திருக்கும். பழகுபவர்களின் மனம் அறிந்து பேசுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கான தேவை நிறைவேறும். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள்.

**மகரம்:** சிலரது அதிருப்தியை பெறுகிற நிலை ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற சிலமாற்றம் செய்வது அவசியம். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**கும்பம்:** மனதில் சங்கடம் ஏற்படலாம். எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இடையூறை தாமதமின்றி சரி செய்வது நல்லது.

**மீனம்:** தாமதமான செயல் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் ஏற்படும் வளர்ச்சி நம்பிக்கையை ஏற்படுத்தும். .பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும்.

# யங்கம்பன்ஸ் அணி காலிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூன் 13

வடமராட்சிக் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் பங்குபற்றும் வே.நகுலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துகான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று காலிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் 2:1 என்ற கோல் கணக்கில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று காலிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (எ-23)





# கரப்பந்தாட்டத்தில் வாகை சூடியது யாழ். கல்வி வலய ஆசிரியர் அணி

யாழ்ப்பாணம், ஜூன் 13

இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய விளையாட்டுக் கழகத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, அரச திணைக்களங்களுக்கு இடையே நடத்தப்பட்டக் கரப்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் கல்வி வலய ஆசிரியர் அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இறுதியாட்டம் நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணம் கல்வி வலய ஆசிரியர் அணியை எதிர்த்து, இலங்கைப் போக்குவரத்துச் சபை வடபிராந்திய விளையாட்டுக் கழக அணி மோதியது. இறுதி ஆட்டம் 5 செற்களைக் கொண்டதாக நடைபெற்றது.

முதலாவது செற்றில் இலங்கைப் போக்குவரத்துச் சபை வடபிராந்திய விளையாட்டுக் கழக அணி 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இரண்டாவது செற்றை யாழ்ப்பாணம் கல்வி வலய ஆசிரியர் அணி 25:13 என்ற புள்ளிகள் அடிப்படியில் வென்றது.

மூன்றாவது செற்றை இலங்கை போக்குவரத்துச் சபை வடபிராந்திய விளையாட்டுக் கழக அணி 25:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

நான்காவது செற்றை யாழ்ப்பாணம் கல்வி வலய ஆசிரியர் அணி 25:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. இரு அணியினரும் தலா இரு வெற்றிகளைப் பெற்றுச் சமநிலையில் இருந்தன. வெற்றி தோல்வி ஐந்தாவது செற் ஆட்டத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டது. ஐந்தாவது செற்றில் யாழ்ப்பாணம்கல்விவலய ஆசிரியர் அணி 15:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. யாழ்ப்பாணம் கல்வி வலய ஆசிரியர் அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது. (எ-23)

# ஜொலிஸ்ரார் கழக அணி ரி/20 ஆட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன்13

ஞானம்ஸ் பெயின்ற் யாழ்ப்பாணம் மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தும் விஜயரெட்ணம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான ரி/20 துடுப்பாட்டத் தொடரில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வெற்றி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்றல் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றல் விளையாட்டுக் கழக அணி சகல இலக்குகளையும் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது. மதுஷன் 26 ஓட்டங்களையும், நிரேசன், பாலேந்திரா இருவரும் தலா 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சார்பாக கோபிராம்,சோபன் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

111 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களம் இறங்கிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 3 இலக்குகளை இழந்தது 112 ஓட்டங்களை பெற்றது.

அருண்குமார்33 ஓட்டங்களையும், ஜனார்த்தனன் 25 ஓட்டங்களையும், சந்தோஷ் 19 ஓட்டடங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சென்றல் விளையாட்டுக் கழக அணி சார்பாக சுபதீஸ் 2 இலக்குகளையும், மதுஷன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (எ-23)



# கிண்ணம் வென்றது கலாநிதி கழக அணி

யாழ்ப்பாணம், ஜூன் 13

காரைநகர் களபூமி சன சமூக நிலையத்தின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் கலாநிதி விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.

ஞாயிற்றுக்கிழமை காரைநகர் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கலாநிதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுக் கலாநிதி விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது. (எ-23)

## சர்மினிக்கு தங்க பதக்கம்

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான '20வயதுப் பிரிவு பெண்ளுக்கான பளு தூக்கும் போட்டியில் வவுனியா சைவ பிரகாச மகளிர் கல்லூரிக்கு தங்கப்பதக்கம் கிடைத்துள்ளது. கந்தர்மடம் சிவபிரகாச வித்தியாலயத்தில் இடம்பெற்ற 20 வயது பிரிவு பெண்ளுக்கான பளு தூக்கும் போட்டியில் வி.சர்மினி 87 கிலோ எடை பிரிவில் 66 கிலோ எடைபளுவைதூக்கிதங்கப் பதக்கம் பெற்றார். (எ-23)



# ஊரெழு றோயல் அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஜூன் 13

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தின் அனுசரனையுடன் சூசையப்பர் விளையாட்டுக் கழகம் நடத்தும் தூயஒளி வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட தொடரில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

குருநகர்பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில்நேற்று முன்தினம் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் 1:0 என்ற கோல் கணக்கில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (எ-23)

## வவு. தமிழ் ம.மகா வித்திக்கு பளு தூக்கலில் பதக்கங்கள்



யாழ்ப்பாணம், ஜூன் 13

வடக்கு மாகாணப் பாடசாலைக்ளுக்கு இடையிலான பளு தூக்கும் போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்துக்கு 2 வெள்ளிப் பதக்கங்களும், ஓர் வெண்கலப் பதக்கமும் கிடைத்துள்ளது.

கந்தர்மடம் சிவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்ற 20 வயதுப் பிரிவு பெண்களுக்கான பளு தூக்கும் போட்டியில் சாமிகா தர்சினி 64 கிலோ எடை பிரிவில் 85 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

20வயது பிரிவு ஆண்ளுக்கான பளு தூக்கும் போட்டியில் எஸ். சஜீபன் 91 கிலோ எடை பிரிவில் 130 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், 20 வயது பிரிவு ஆண்களுக்கான பளு தூக்கும் போட்டியில் பி.ஜெறாட் பற்றிக் 86 கிலோ எடை பிரிவில் 147 கிலோ எடை பளு தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (எ-23)


## தாச்சி இறுதி போட்டி இன்று

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டுநிறைவையொட்டி வளர்மதி விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட தென்மராட்சி பிரதேச தாச்சி அணிகளுக்கிடையிலான தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று இரவு 7 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்க அணி மோதவுள்ளது. (எ-9)



## அமீரின் எழுச்சி வீண்

# ஆஸ்திரேலிய அணியிடம் தோல்வியடைந்தது பாக்.



அமீரின் எழுச்சியான பந்துவீச்சும், வகாப் ரியாஸின் இறுதிக் கட்ட அதிரடியும் கைவிட்டுப்போக ஆஸ்திரேலிய அணியிடம் தோல்வியடைந்தது பாகிஸ்தான்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி சகல இலக்குகளையும் இழந்து 307 ஓட்டங்களைக் குவித்தது. அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான வோர்ணர் 107 ஓட்டங்களைப் பெற்றார். அவரைவிட பின்ஞ் 82 ஓட்டங்களையும், சோன் மார்ஷ் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அமீர் 10 பந்துப்பரிமாற்றங்களை வீசி 30 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 266 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து தோல்வியடைந்தது. பாகிஸ்தான் அணி 200 ஓட்டங்களில் 7 இலக்குகளை இழந்தபோதிலும் ரியாஸ் கடைசிக்கட்டத்தில் அதிரடியாக விளையாடி 45 ஓட்டங்களைக் குவித்ததால் பாகிஸ்தான் அணி 266 ஓட்டங்களைப் பெறமுடிந்தது. அவரைவிட இமாம் 53 ஓட்டங்களையும், ஹபீஸ் 46 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கம்மின்ஸ் 3 இலக்குகளையும், ஸ்ராக், ரிச்சாட் சன் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். வோர்ணர் ஆட்டநாயகனானார். (ம)

## ஸ்ரோனிஸ் காயம்

நடப்பு உலகக் கிண்ணப் போட்டிகள் மழையாலும், வீரர்கள் காயங்களாலும் களையிழந்து வருகிறது. முக்கியமான போட்டிகள் மழையால் கைவிடப்பட வீரர்கள் காயம் ஒருபுறம் அணிகளை அச்சுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில் ஆஸ்திரேலியாவின் முக்கிய சகல துறை ஆட்டக்காரர் மார்கஸ் ஸ்ரோனிஸ் காயம் காரணமாக பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் ஆடமாட்டார் என்று ஆஸ்திரேலியு அணி நிர்வாகம் அறிவித்தது. அவருக்குப் பதிலாக அதிரடி வீரர் மார்ஷ் அழைக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிரான போட்டிக்கு முன்பாக ஸ்டாய்னிஸ் காயம் மதிப்பிடப்பட்டு இவர் உலகக் கிண்ணத்தில் தொடர முடியுமா? இல்லையா? என்பது அறிவிக்கப்படவுள்ளது. இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் 5ஆவது பந்துப்பரிமாற்றத்தில் ஸ்டாய்னிஸ் காயமடைந்தார். ஸ்ரோனிஸ் எத்தனை போட்டிகளில் ஆடமாட்டார் என்பது இன்னும் அறுதியிடப்படாததால் மிட்செல் மார்ஷ் அழைக்கப்பட்டுள்ளார் என்று அணித் தலைவர் பின்ஞ் தெரிவித்தார்.

### இன்றைய போட்டி



இந்தியா



மாலை 3 மணி



நியூசிலாந்து

# இந்தியா - நியூசி. போட்டி இன்று

நடப்பு உலகக் கிண்ணத் தொடர் இங்கிலாந்தில் இடம்பெற்று வருகின்றது. இதில் 10 நாடுகள் பங்கேற்று விளையாடி வருகின்றது. சில போட்டிகள் மழை காரணமாக கைவிடப்பட்டது. சில அணிகளில் முக்கிய வீரர்கள் காயம் காரணமாக விலகியுள்ளனர்.

இதில் இன்று விராட் கோக்லி தலைமையிலான இந்திய அணியும், வில்லியம்சன் தலைமையிலான நியூசிலாந்து அணியும் மோதுகின்றன. இந்திய அணி தான் மோதிய 2 ஆட்டத்திலும் வெற்றி பெற்றது. நியூசிலாந்து அணி 3 போட்டிகளில் விளையாடி மூன்றிலும் வெற்றி பெற்று 6 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. இதனால் அந்த அணியை வீழ்த்துவது சவாலாக இருக்கும். அந்த அணி துடுப்பாட்டம், பந்து வீச்சு என சமபலத்துடன் திகழ்கின்றது. நியூசிலாந்து அணி வீரர்கள் இங்கிலாந்து போன்ற ஆடுகளங்களில் திறமையாக ஆடக் கூடியவர்கள். அந்த அணி தனது நான்காவது வெற்றியைப் பெற்று முதலிடத்தை தக்க வைப்பதில் கவனம் செலுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

இந்திய அணியைப் பொறுத்தவரையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தவான் காயம் அடைந்தது இந்திய அணிக்கு மிகப்பெரிய பாதிப்பாகும். ஆனாலும் அந்த இடத்தை நிரப்பக் கூடிய வீரர்கள் இந்திய அணியில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. பந்து வீச்சைப் பொறுத்தமட்டில் வேகப்பந்தில் பும்ரா, புவனேஷ்வர்குமார் ஆகியோரும் சுழற்பந்தில் சாஹல், குல்தீப் யாதவ் ஆகியோர் அணிக்குப் பலம் சேர்க்கின்றனர். இந்திய அணி 'ஹட்ரிக்' வெற்றியைப் பெறுவதற்குப் போராடும். இரு அணிகளுக்குமான போட்டி ரசிகர்களுக்கு சிறந்த விருந்தாக அமையும். ஆனால், நாளைய ஆட்டத்திலும் மழை அச்சுறுத்தல் இருக்கிறது. பிற்பகல் மழை பெய்யலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இதனால் போட்டி பாதிக்கப்படும் நிலையும் காணப்படுகின்றது.

# சம்பாவின் சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் ஆடம் சம்பா பந்தை சேதப்படுத்தியதாக சர்ச்சை எழுந்தது. இதற்கு ஆஸ்திரேலியா அணித் தலைவர் பின்ஞ் முற்றப்புள்ளி வைத்தார்.

இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் ஆஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் சம்பாவின் சில நடவடிக்கைகள் சந்தேகத்தை கிளப்பியுள்ளது.

ஒருபந்துப்பரிமாற்றத்தில்பந்து வீசுவதற்கு முன்பாக அவர் தன்னுடைய பொக்கெட்டுக்குள் அடிக்கடி கையை விட்டுதுழாவினார். பின்னர் அதிலிருந்து ஏதோ ஒன்றை எடுத்து பந்து மீது வைப்பது போன்று வீடியோ காட்சிகள் மற்றும் புகைப்படங்கள் வெளியாகின.

பந்தின் தன்மையை மாற்றுவதற்காக உப்புத்தாளை கொண்டு தேய்த்தாரா? என்று சமூக வலைத்தளங்களில் காரசாரமாக விவாதிக்கப்பட்டது. ஏற்கனவே கடந்த ஆண்டு ஆஸ்திரேலிய வீரர்கள் வோர்னர், ஸ்மித், பான்கிராப்ட் ஆகியோர் பந்தை சேதப்படுத்திய பிரச்சினையில் சிக்கி தடையை அனுபவித்தநிலையில், சம்பாவின் செயலும் பால்டேம்பரிங்தான் என பலர் கருத்து வெளியிட்டனர்.

இது குறித்து பின்ஞ் தெரிவிக்கையில்;சம்பா பாண்ட் பொக்கெட்டில் "ஹேண்ட் வார்மர்" என்ற பொருளை வைத்துக் கொண்டு, கைகளை சூடாக்கிவிட்டு பின்னர் பந்து வீசுவார் - என்றார். எனினும் இந்தவீடியோ தொடர்ந்து சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது.

# இந்திய ரசிகர்களை வறுத்தெடுத்த சர்பிராஸ்



நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் ஆஸ்திரேலியா - இந்தியா அணிகளுக்கிடையில் இடம் பெற்ற போட்டியில் இந்திய அணி துடுப்பெடுத்தாடிய போது எல்லைக் கோட்டுக்கு அருகில் களத்தடுப்பில் ஈடுபட்ட ஆஸ்திரேலியா அணியின் வீரர் ஸ்மித்தை இந்திய ரசிகர்கள் அவரது மனதை புண்படுத்தும் படி கேலி செய்தனர். இருந்தும் அதனைப் பொருட்படுத்தாது ஸ்மித் களத்தடுப்பில் ஈடுபட்டார். இதனை அவதானித்த இந்திய அணித் தலைவர் கோக்லி ரசிகர்களை நோக்கி அவ்வாறு செய்யாதீர்கள் கைகளைத் தட்டி உற்சாகப்படுத்துங்கள் என்று சைகை மூலம் தெரிவித்தார். இதனைக் கவனித்த ரசிகர்கள் கோக்லியின் சொல்லுக்கு கீழ்ப் பணிந்தனர். பின்னர் ஸ்மித் கோக்லிக்கு நன்றி தெரிவித்தார். போட்டி முடிந்த பின்னரும் கோக்லி ரசிகர்களுக்காக தான் மன்னிப்புக் கேட்பதாகக் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்றைய தினம் ஆஸ்திரேலியா அணியுடனான போட்டியில் கலந்து கொள்வதற்கு முன்னர் பாகிஸ்தான் அணித் தலைவர் சர்பிராஸ் தெரிவிக்கையில்;

ஆஸ்திரேலியா அணியுடனான ஆட்டம் மிகவும் கடுமையானதாக இருக்கும். ஆனால் எங்கள் அணி முழு திறனையும் வெளிப்படுத்தும். இந்தியா- ஆஸ்திரேலியா அணிகளினுடைய போட்டியில் ஆஸ்திரேலிய அணியின் வீரர் ஸ்மித்தை இந்திய ரசிகர்கள் கேலி செய்தது போன்று பாகிஸ்தான் ரசிகர்கள் செய்யமாட்டார்கள். பாகிஸ்தானியர்கள் கிரிக்கெட்டையும் கிரிக்கெட் வீரர்களையும் மிகவும் விரும்புபவர்கள் - என்றார்.

வாகனம் விற்பனைக்கு உண்டு
லங்காஅசோக் லேடன் லொறி
விற்பனைக்கு உண்டு.
075 656 3907

**Vacancies**
**Northern Central Hospital (Private) Limited**

Northern Central Hospital is a medical institution which has the privilege of providing quality patient care with compassion and unrelenting attention to clinical excellence, patient safety, passion and commitment to assure best healthcare to those we serve.

If you are truly determined, you are invited to apply for the following positions to join our team.
Ideal applicants should possess following attributes and qualifications.

**Accounts Assistant**
- Pass A/L with Commerce Stream
- Age should be below 30 years
- Minimum 1 years experience
- Good verbal, written communication skill
- Proficiency in MS office.
- Salary is negotiable.

If you are really interested, Please send your CV before 20th June 2019, by e-mail or post indicating the position applied for on the top left –hand corner of the envelope.

**Managing Director**
**Northern Central Hospitals (Private) Limited**
**No: 342,Palaly Road, Jaffna.**
**Contact Number- 021 221 9988 / 021 7217324**
**E-mail : northernhrm@gmail.com**

# ஐ.சி.சி. தணிக்கை செய்கின்றது மைக்கல் ஹோல்டிங் குற்றச்சாட்டு





நடுவர்களின் தவறுகளை விமர்சிக்கவேண்டாம் என பன்னாட்டு கிரிக்கெட் சபை வர்ணனையாளருக்கு அறிவுறுத்தியுள்ளதை கடுமையாக சாடியுள்ள மேற்கிந்திய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரும் வர்ணனையாளருமான மைக்கல் ஹோல்டிங் பன்னாட்டு கிரிக்கெட் சபையின் இந்த நடவடிக்கையை தணிக்கை என வர்ணித்தார்.

மேற்கிந்தியத்தீவுகள் - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான உலகக் கிண்ணப் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிராக ஒரே தவறுகளை நடுவர்கள் திரும்பத் திரும்ப செய்தனர். இதனால் இந்தப் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி தோல்வியுற்றது. இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதனை வர்ணனையாளராகக் கடமையாற்றிய மேற்கிந்தியத்தீவுகளின் முன்னாள் வீரர் மைக்கல் ஹோல்டிங் கடுமையாக நடுவர்களை விமர்சித்தார். இதனை பன்னாட்டு கிரிக்கெட் சபை கண்டித்ததோடு நடுவர்களின் சார்பாக பேசியிருந்தது.

இதற்கு பதிலளித்த மைக்கல் ஹோல்டிங் குறிப்பிட்டதாவது;

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் 'இந்த நிலைப்பாடு காரணமாக வர்ணனையாளர்களை நிறுவனங்கள் கட்டுப்படுத்துகின்றன இது தணிக்கைக்கு சமனானது.நான் அந்த பாதையில் பயணிக்க விரும்பவில்லை.

இந்த நடுவர்கள் உதைபந்தாட்ட போட்டிகளில் இவ்வாறான தவறையிழைத்திருந்தால் அவர்களை வீட்டுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தியிருப்பார்கள். இவர்களுக்கு இன்னொரு உலகக் கிண்ணப் போட்டியில் நடுவர்களாக பணியாற்ற வாய்ப்புக் கிடைத்திருக்காது.

முன்னாள் வீரர் என்ற அடிப்படையில் கிரிக்கெட் உயர்ந்த தரத்தில் காணப்படவேண்டும் என நான் எதிர்பார்க்கின்றேன். நடுவர்கள் மோசமாக செயற்பட்டாலும் அவர்களை பாதுகாக்கும் நோக்கம் காணப்படுகின்றது. மன்னிக்கவேண்டும்.நான் இதன் ஒரு பகுதியாக செயற்படப்போவதில்லை. நீங்கள் தெரிவித்ததை ஏற்றுக்கொள்ளாதமைக்காக நான் வர்ணனையை கைவிட்டுவிட்டு நாடு திரும்பவேண்டுமா? என்பதை சொல்லுங்கள்.

இந்த மின்னஞ்சல் யாருக்கெல்லாம் அனுப்பப்பட்டுள்ளது என்பதை பார்க்கும் போது வர்ணனையாளர் என்ற அடிப்படையில் எனக்கு மாத்திரமே அனுப்பப்பட்டுள்ளது - என்றார்.

FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்ச்
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 22.06.19 சனி காலை 10 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 24.06.19 3.30pm
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

கொடிபதி ஷனிதா
சீட்டிழுப்பு வாரம்: 454 சீட்டிழுப்பு திகதி 2019.06.11
வர்ணம்: இளஞ்சிவப்பு செவ்வாய்க்கிழமை
M 34 38 71 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 127,462,573/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

## மரண அறிவித்தல்

### திருமதி நவமணி சுப்பிரமணியம்
### (நவம் அக்கா-பெரியபளை)



பெரியபளை பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவமணி சுப்பிரமணியம் (11.06.2019) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், சின்னையா-அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், நவரத்தினசிங்கம் (நவம்-பளை) தவரத்தினசிங்கம் (ஒயன் மாஸ்ரர்-பிரான்ஸ்) இரஞ்சினிதேவி (டென்மார்க்) மல்லிகாதேவி (ஜேர்மனி) மகேந்திரன் (பாலன்- சுவிஸ்) குமுதினிதேவி (புளியம்பொக்கணை) சறோசாதேவி (சுவீடன்) ரவீந்திரன் (சுவிஸ்) இந்துமதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், வசந்தினி (தேவி - பளை) கனகேஸ்வரி (இராதா-பிரான்ஸ்) கந்தசாமி (டென்மார்க்) கணபதிப்பிள்ளை (ஜேர்மனி) ஜெகதீஸ்வரி (சுவிஸ்) கிருபாகரன் (புளியம்பொக்கணை) ஸ்ரீகாந்தன் (சுவீடன்) கோமதி (சுவிஸ்) ரவீந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், கேமசாளினி- இளங்கோவன் (பிரான்ஸ்) அஜந்தா-வரதீபன் (நியூஸிலாந்து) லக்ஷன் (பளை) தர்ஷி-புவியந்தன் (பிரான்ஸ்) சதன்-கௌசலா (பிரான்ஸ்) சரன் (பிரான்ஸ்) துவாரகன் (பிரான்ஸ்) கவீனா (டென்மார்க்) கஜானா (டென்மார்க்) குணர்சன் (ஜேர்மனி) மதுஷா (சுவிஸ்) டிலானி (சுவிஸ்) குஜிந்தன்-தேன்மொழி (ஜேர்மனி) குஜினிகா-மகுந்தன் (சுவிஸ்) சஞ்சிகா (புளியம்பொக்கணை) சஜன் (சுவீடன்) கஜன் (சுவீடன்) றியங்கா (சுவிஸ்) றக்ஷா (சுவிஸ்) ஆருஷா (ஜேர்மனி) இனுஷ் (ஜேர்மனி) அபிஷா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இளவரசன், ஆர்த்தி, அனிக்கா, கர்னிகா, யனோஸ், டிவானி, சரன்யா, அரவிந் சயனிஜா (பிரான்ஸ்) டியா (நியூஸிலாந்து) மானஷா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4.00 மணியளவில் பளை மலையான்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பெரியபளை, பளை.** **தகவல்: குடும்பத்தினர்.**

மகன் - நவரத்தினசிங்கம் - 0778461025 மருமகன் - கிருபாகரன் - 0776442619
மகன் - தவரத்தினசிங்கம் - 0761780883 பேரன் - லக்ஷன் - 0764122241

ராசி அதிர்ஷ்டம்
திகதி 12.06.2019 வெற்றி வாரம் 2537 வர்ணம் பச்சை
தனுசு வெற்றி இலக்கங்கள் 22 27 34 40
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,260,658 /=
13.06.2019 ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 252
சீட்டிழுப்பு திகதி 12.06.2019 நீலம்
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 13 43 60
விதி எண் 1
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10, 000, 000/=
15.06.2019 ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.த சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3195 திகதி:2019.06.12 புதன்கிழமை
SATURDAY FORTUNE
ஊதா
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 16 45 49 60 I
போனஸ் இலக்கம்: 65
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்: 46,740,435/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 637
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.06.12
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 59,482,455/-
வெற்றி இலக்கங்கள் 13 19 50 51
ஆங்கில எழுத்து H
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.